545 2-8

காவேரி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAR 1943
MADRAS

READ The Cauveri -
IDEAL MAGAZINE FOR THE HOME

இதோ!

"கிட்டப்பா" மார்க்

புகையிலை & சீவலைப்பற்றி எழுதியிருக்கிறதே !!

படித்துப் பார்ப்போம் !!!

ரிஜிஸ்டர் நெ. 61

"கிட்டப்பா" டிரேட்மார்க்

"கிட்டப்பா" மார்க் சிவபுரி புகையிலை & சீவல் தினுசுகளையே எப்பொழுதும் உபயோகியுங்கள்.

குணத்தில் சிறந்தது. எங்கும் கிடைக்கும்.

பொறுப்புவாய்ந்த ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

பிராஞ்ச் :
16, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

A. D. சுல்தான் & CO.,
கும்பகோணம்

N. B: குணம், மணம், காரம் இவைகளுக்காக செயற்கை என்பதே சேர்க்கப்படாதது. பல மார்க் புகையிலைகள் மாதிரி குணங்களுக்காக பல கெட்ட எஸ்ஸன்ஸ் வகை சாமான்கள் சேர்க்கப்படாத இயற்கை குணமுள்ளது "கிட்டப்பா" மார்க் புகையிலைதான் என்பதை அன்பர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அ. அபூபக்கர் ருவுத்தர்,
புரோப்ரைட்டர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAR 1943
MADRAS

இந்தியக் கைத்தொழிலை :: ::

:: :: நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & சன்ஸ்** பெப்பர்மெண்ட் ஒரு டின் வாங்கிக்கொண்டு போங்கள். **வி. எஸ். & சன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பி தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைட்டர்கள்:- **வி. எஸ். & சன்ஸ்,**

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory.

Proprietors:- **V. S. & SONS,**

KUMBAKONAM.

தி காமன் வெல்த் பாங்கு லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்:- 53, பெரியதெரு, கும்பகோணம்.

பிராஞ்சுகள்:- கோடவாசல், ஆடுதுறை, ஜயங்கொண்டசோழபுரம், வலங்கைமான், திருவிடமருதூர்.

கரண்டு அக்கவுண்டுகள், ஸேவிங்ஸ் பாங்கு டிபாஸிட்டுகள், பிக்ஸட் டிபாஸிட்டுகள், கால் டிபாஸிட்டுகள் முதலியவை ஏற்றுக்கொள்ளப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட செக்யூரிட்டிகளின்மேல் கடனும், காஷ் கிரெடிட்டும் கொடுக்கப்படும்.

நெல், அரிசி, தானியங்கள், நூல், பீஸ்-கூட்ஸ், தங்க நகைகள், வெள்ளிக்கட்டிகள் இவைகளின் மேல் பணம் தரக்கூடும்.

மற்றும் எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்.

V. K. ருஜகோபாலன்,
செக்ரடரி.

ஜவுளி தினுசுகள் :: :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய் தற்கால மோஸ்தரில்

உடைக்குத்தக்க போட்டி விலையில்

புது சரக்குகள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்,

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்,

மலை வாசல் (உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், : திருச்சிராப்பள்ளி.

N. B: உயர்ந்த பனாஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

பொருளடக்கம்

சித்திரபானு
மலர் 2

பங்குனி
இதழ் 8

அர்த்தமற்ற கட்டுப்பாடு	—	...	9
நிரபராதியின் வெற்றி	—	...	11
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	—	'ராமய்யா'	14
கதம்பம்	—	...	16
சந்திரனும் சூரியனும்,	—	ஆர். கே. விசுவநாதன்	21
புதிய புத்தகங்கள் (விமர்சனம்)	—	...	24
வழிகாட்டி	—	'ஹரிணி'	25
குருதக்ஷிணை	—	பூவாளூர் சுந்தரராமன்	30
நாஸ்திகன்	—	புரசு பாலகிருஷ்ணன்	33
பட்டிக்காட்டுப் பெண்	—	லலிதா-நாராயணன்	42
புயலும் அமைதியும்	—	சு. சுப்பலட்சுமி	51

குறிப்பு:- காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

குழந்தை
தன் தோழனை
வுட்வர்ட்ஸ் கிரைப்
வாடரைத் தானாகவே
தெரிந்து கொள்கிறது

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

ஏஜெண்டு:— டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்
12-A, லிங்க செட்டித்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

காவேரி

OFFICE OF THE ...
18 MAR 1943
MADRAS

சித்திரபானு
மலர் 2

"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்."—பாரதியார்

பங்குனி
இதழ் 8

அர்த்தமற்ற கட்டுப்பாடு

பிரிட்டிஷ் இந்திய அரசாட்சி சாவதான காலங்களில் ஜரூராக வரி வசூலிப்பதிலும், மிரட்டி உருட்டி நாட்டில் அமைதி நிலவச் செய்வதிலும் பிரக்யாதிபெற்றது. ஆனால் அவ்வாட்சி ஒரு நெருக்கடியான நிலையைச் சமாளிக்கச் சக்தியற்றது என்பது இன்று வெட்டவெளிச்சமாகிவிட்டது.

நாட்டில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இது கொஞ்சம் உற்பத்திக் குறைவினால் ஏற்பட்டதென்று வைத்துக்கொண்டாலும், உற்பத்தியாகும் பொருள்களைச் சரிவரச் சமாளிக்கத்திட்டமில்லாததினால் பஞ்ச உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்களின் போக்கு வரவுக்குத் தடை உத்தரவு விதித்து இதைச் சமாளிக்கலாம் என்று கவர்மெண்டார் முன்வந்துள்ளார்கள். அதன் பயனாக உணவுப்பொருள்களை உற்பத்தி செய்பவனுக்கு நியாய்மான விலை கிடைக்காமல், அவனுக்குக் கட்டுப்படியாகாத விலைக்கு அவன் விற்கும்படி நிர்ப்பந்தம் ஏற்படுவதோடு அதை வாங்கி உண்பவர்கள் அவ்விலைக்கு இரண்டு மூன்றுபங்கு அதிகம் விலை கொடுத்து வாங்கினாலொழியக் கொஞ்ச நஞ்சமும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதுமட்டுமல்ல. உற்பத்தியாகும் ஸ்தலங்களில் விலைவாசிக் குறைவினாலும், போக்கு வரவுத் தடை உத்தரவுகளினாலும் பொருள்களின், தேக்கமும் உற்பத்தியில்லாத ஸ்தலங்களில் அப்பொருள்கள் கிடைக்காததினால் மக்களுக்கு அவதியும் மிகுகின்றன.

தென் இந்தியாவில் அரிசி முக்கிய உணவுப் பொருள். தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு, இந்த ஜில்லாக்களில் நெல் ஏராளமாகச் சாகுபடியாகின்றது. சரியான விலை கிடைக்காமலும், வாழ்விற்கும் சாகுபடிக்கும் அத்யாவசியமான மற்றச்சாமான்களின் விலை ஆனை விலை, குதிரை விலையாக இருப்பதினாலும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் நெல்லை நியாயமான விலைக்கு விற்கமுடியாமல், நஷ்டத்திற்கு விற்கவேண்டிய நிர்ப்பந்தத்தினால் அவதிப்படுகிறார்கள். மேலும் அவர்களுக்குக் கவர்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் தான்யங்கள் வாங்கும் ஆபீஸரிடம் விற்க வசதியில்லை. அதில் அநேக இடைஞ்சல்கள் உள்ளன. இந்த ஆபீஸர் கவர்மெண்டார் ஓர் குருட்டுக் கணக்குப் போட்டிருப்பதின்படி நெல்லைக்கொஞ்சம் கொஞ்சமாக வாங்குகிறார். அவர் வாங்கும் விலை நிர்ணயிக்கப்படவில்லை. அவர் மூலமாகத்தான் நெல் வெளி ஜில்லாக்களுக்குச் செல்லலாம் என்று விதித்திருப்பதினால் அவர் எந்த விலைக்குக் கேட்டாலும் அதற்கு எளிய மிராசுதார்கள் பல கஷ்டங்களினால் விற்க ஏற்படுகிறது. இதனாலேயே உற்பத்தி செய்பவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதுமட்டுமல்லாமல் உற்பத்தியாகாத ஜில்லாக்களில் நெல் மக்களின் தேவைக்கு வேண்டிய அளவு கிடைக்காமல் அவதிப்பட நேரிடுகிறது. கவர்மெண்டார் விதித்திருக்கும் ஏற்பாட்டினால் உணவுப்பொருள் உற்பத்தி செய்பவர்களுக்கு லாபமில்லை, அதை வாங்குபவர்களுக்குச் சௌகரியமில்லை, விலை குறைவுமில்லை. நடுவிலிருக்கும் சில குறிப்பிட்ட தரகர்களுக்குத்தான் சுக்கிர தசை.

கவர்மெண்டாரின் செய்கையினால் மற்றுமொரு இடைஞ்சலும் ஏற்பட்டிருக்கிறது. அதிகமாக நெல் உற்பத்தியாகும் ஜில்லாக்களில்கூட பொருள்கள் சரியான விலைக்குக் கிடைப்பதில்லை. விலை அடியோடு குறைந்து இருப்பதனால் விவசாயிகள் நெல்லை நஷ்டத்

திற்கு விற்க மனமில்லாமல் தேக்கிவைத்துக் கொண்டு விடுகிறார்கள். இதனால் அந்த ஜில்லாவிலுள்ள ஏழைகளுக்கும் துன்பமே. வியாபாரம் சௌகரியமாக நடந்தால்தான் விலை சரிவர ஏற்பட்டு அதிக விலை விற்காமல் உணவுப்பொருள் மக்களுக்குக் கிடைக்கும். எல்லா வகுப்பினருடைய நன்மையையும் உத்தேசித்து இன்று அமுலிலிருக்கும் உத்தரவுகளை ரத்து செய்து புதிய திட்டம் வகுத்தாக வேண்டும்.

தான்யங்கள் வாங்கும் உத்தியோகஸ்தரின் யதேச்சாதிகாரம் ஒழியவேண்டும். ஒவ்வொரு உத்தியோகஸ்தருக்கும் ஒரு ஆலோசனைக் கமிட்டியிருக்கவேண்டும். அக்கமிட்டி மாதமிருமுறை கூடி இன்ன விலைக்கு நெல் வாங்குவது என்று நிர்ணயிக்கவேண்டும். அக்கமிட்டியில் ஜில்லா கலெக்டர், தான்யங்கள் வாங்கும் உத்தியோகஸ்தர், ஜில்லா விவசாய இலாகா அதிகாரி, ஐந்து மிராசுதார்களின் பிரதிநிதிகள், இரண்டு பொதுஜனங்களின் பிரதிநிதிகள், இரண்டு வியாபாரிகள், ஒரு மில் முதலாளி இவர்கள் இருக்கவேண்டும். ஜில்லா கலெக்டரோ அல்லது தான்யம் வாங்கும் உத்தியோகஸ்தரோ கமிட்டியில் தலைமை வகிக்கலாம். நாட்டில் இருக்கும் முக்கியமான விலைவாசிகளைப் பரிசீலனை செய்து, விவசாய வசதிகளின் விலைவாசிகளையும் சீர்தூக்கி ஒரு நியாயமான விலையை விதித்து, எவ்வளவு தான்யங்கள் வாங்கமுடியுமோ, அவ்வளவையும் வாங்கவேண்டும். அதை வாங்கித தகுந்தபடி சேமித்து வைத்து, தேவையான ஜில்லாக்களுக்குக் கவர்மெண்டாரே அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்த ஏற்பாடுகளை உடனே செய்யாவிட்டால் நாட்டில் அபாயகரமான நிலைமை ஏற்படுவது திண்ணம். விவசாயிகளுக்கு இன்று மனக்கொதிப்பு அளவிட முடியாமலிருக்கிறது. இனி சாகுபடி செய்வது பிரயோசனமில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள்.

புளி, மிளகாய், பருத்திக்கொட்டை, விறகு, பருப்பு, மாடு, வண்டி முதலியன விற்கும் விலையைப் பார்த்தால் அவர்களின் அவதி சொல்லத்தரமல்ல. ஏழை மக்கள் பாடோ இதற்குமேல் பெரிய அவதி.

(12ம் பக்கம் பார்க்க)

Telegrams: 'Flower' *Telephone No. 66*

SOUTH INDIA CORPORATION
(MADRAS) Ltd.,

Dealers in all kinds of Hardware, Electric, Sanitary, Piece goods and Produce goods,

CHAKRAPANISWAMI KOIL SOUTH GATE,

KUMBAKONAM.

எல்லாவிதமான இரும்பு, எலக்டிரிக் சானிடரி சாமான்களும், நவதான்யங்களும் நியாயமான விலைக்கு மொத்த வியாபாரம் செய்பவர்கள்

ஸௌத் இந்தியா கார்பொரேஷன்
(மதராஸ்) லிமிடெட்,

சக்ரபாணிஸ்வாமி தெற்குக் கோபுர வாசல்,

கும்பகோணம்.

உங்கள் கூந்தலைக் காப்பாற்ற மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதை தேடிச்செல்ல தூண்டும்.

பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1
3 பாட்டில் ரூ. 2-13-0

வி. பி. சார்ஜ் பிரத்யேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது

ஒரு டிராம் பாட்டில் 1-க்கு அணா 14

வி. பி. சார்ஜ் பிரத்யேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள்

ஆங்கிலோ-இந்தியன் டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்-2.

நிரபராதியின் வெற்றி

மகாத்மா உயிர் தப்பிவிட்டார். இதன் உட்கருத்தென்ன? அவர் உண்ணாவிரதமிருந்தது தற்கொலை செய்துகொள்வதற்கன்று. நாட்டில் நடந்த கலவரங்களுக்கெல்லாம் தாமும் காங்கிரசும்தான் பொறுப்பாளிகள் என்ற குற்றச்சாட்டு அபாண்டம் என்று கூறினார். ஆனால் பிரிட்டிஷார் இதைக் கேட்பதாயில்லை. உலகத்தவரிடம் தம்மையும் காங்கிரசையும் இப்பழிக்கு ஆளாக்கிப் பிரசாரம் செய்யப்பட்டு வந்ததைக் குறித்து மனம் நொந்து போனார். தாம் நிரபராதி என்பதை ஆண்டவனருளினால் உலகத்துக்கு நிரூபிக்கவேண்டுமென்று எண்ணினார். மூன்று வாரம் உண்ணாவிரதம் இருந்தார். இந்த அபார வயதில் அது சாத்தியமானதன்று என்பதை நன்குணர்ந்தும் தாம் கூறும் வாதம் உண்மையாயிருந்தால் கடவுள் தமக்குப் பலமளித்துத் தம்மை வெற்றிபெறச் செய்வார் என்று மகாத்மா திடமாக நம்பியிருக்கவேண்டும்.

மகாத்மா வெற்றியடைந்துவிட்டார். அவர் உயிர் தப்பியதன் சூக்ஷமம் ஒன்றே. அவர் கூறும் வாதம் முற்றிலும் உண்மை. நாட்டில் நிகழ்ந்த கலவரங்களுக்கெல்லாம் அவர் பொறுப்பாளியல்லர். இதைத்தான் தம் உண்ணாவிரதத்தினால் காந்தியடிகள் உலக மக்களுக்கு நிரூபித்துக்காட்டியிருக்கிறார்.

எனவே பிரிட்டிஷ் கவர்மெண்டாரின் கடமை என்ன? மகாத்மாவை உடனே விடுதலை செய்யவேண்டும். நாட்டில் சமாதானம் நிலவ வழிதேடவேண்டும். நாட்டில் இன்று மக்களின் மனப்பான்மை அமைதியைத் தேடியலைகிறது. வாழ்க்கையே கடினமாகிவிட்டது. மாலுமியில்லாத மரக்கலம்போல் மக்கள் தவிக்கின்றனர். இதை உணர்ந்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நடந்துகொண்டால், யுத்தப்போக்குக்கு வேறு சாதனம் தேடத்தேவையில்லை. அர்த்தமற்ற வீண் பிரசாரங்கள் செய்ய வேண்டியதில்லை.

ஆனால் பிரிட்டிஷாருக்கு ஞானோதயம் வருவதாகத் தோன்றவில்லை. மஹாத்மாவைத் தேசாந்தரம் கடத்திச்செல்ல யோசனை செய்து வருவதாக ஓர் வதந்தி உலாவி

வருகிறது. இந்தியா கவர்மெண்டார் இது முற்றிலும் ஆதாரமற்றது என்று ஓர் அறிக்கை விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். மக்களை எளிதில் சமாதானப் படுத்திக்கொள்ளும் தருணம் வாய்த்திருக்குங்கால், வீணாக மனக்கசப்பு உண்டுபண்ணி, தீரா விரோதத்தைத் தேடிக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த சாகுபடியிலாவது விவசாயிகள் ஊக்கத்துடனும், முழுமனதுடனும் அதிகமான பயிர் சாகுபடி செய்யாவிட்டால் நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடும். அதைத்தடுப்பதற்கு ஒரே வழியுண்டு. அதுதான் விவசாயிகளுக்கு நியாயமான விலையை அளிப்பதாக வாக்குறுதி கொடுத்து அதை இன்று அலிமுல் உடனேயே கொண்டுவரவேண்டுமென்பது. பிரசாரம் செய்வதினாலும், நீர்ப்பாசன வசதிகளில் பணம் விரயம் செய்வதினாலும், நிலைமை சீர்திருந்திவிடாது. விவசாயி உற்பத்தி செய்யும் பொருளுக்குகட்டுப்படியாகும்படியான விலை கிடைக்கச்செய்தாலே அவர்களுக்கு ஒரு பெருத்த ஊக்கமேற்படும். இதைத்தான் கவர்மெண்டார் உடனே செய்ய முன்வரவேண்டும். இதைச்செய்யாமல் காலத்தைக் கடத்துவது தேசத்துரோகமாகும். நாளுக்கு நாட்டில் உணவுப்பொருள் பஞ்சம் இன்னுமதிகரித்தால் அதற்கு முழுப்பொறுப்பாளி சென்னைக் கவர்மெண்டார்தான் என்பதை மறுதலிக்க முடியாது.

நம் மாகாணத்தில் உள்ள மேன்மைதங்கிய கவர்னர் அவர்களின் அட்வைசர்களால் நிலைமையைச் சமாளிக்கமுடியவில்லை. அவர்கள் விதிக்கும் உத்தரவுகளெல்லாம் பொது ஜனங்களுக்கு நேர்பாதகத்தையே விளைக்கின்றன. சாதகம் ஒன்றும் காணோம். ஆகையால் இவ்விஷயத்தில் பொதுஜனத் தலைவர்கள்கொண்ட ஓர் கமிட்டியை நிர்மாணித்து அவர்களின் ஆலோசனையின் பேரில் இன்று அமுலிலிருக்கும் உத்தரவுகளைச் சீர்திருத்தி ஓர் திட்டம் வகுத்து நடத்தினால் மக்களுக்கு நிம்மதி ஏற்படும், பஞ்சமும் குறையும். இதைச் சென்னைக் கவர்னர் அவர்கள் உடனே செய்து மக்களின் நன்றியைப் பெறுவாரென எதிர்பார்க்கிறோம்.

போன்: 66 தந்தி: 'Flower'

கமர்ஷியல் எம்போரியம்,

பட்டு, சுதேசி ஜவுளி வியாபாரம்,

பெரிய கடைத்தெரு - கும்பகோணம்.

நவநாகரீகம் பொருந்திய பட்டு & நூல் புதுரகச்சேலை தாவணி ரகங்களும், எங்கள் சொந்த கைத்தறிகளிலேயே தயாரிக்கப்படுவதால் மிக உறுதியாகவும் நீடித்த உழைப்புக்கு ஏற்றதாகவும் கெட்டிச் சாயத்திற்கு உத்தரவாதமுள்ளதாகவும் கிடைக்கும்.

தவிர, பீஸ்குட்ஸ் ரகங்களும், வாயில், ஷர்டிங், கோட்டிங், காடா பீஸ் முதலியவைகளும் சுதேசி ஜவுளி வகைகளும் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்து பார்க்கக் கோருகிறோம்.

Proprietors:

South India Corporation (Madras) Ltd.,

Chakrapaniswami Koil South Gate,

KUMBAKONAM.

WE KEEP GOOD TIME
AND SO DO WE
செகண்டஸ் மினியேச்சர்
ரெக்டாங்குலர்
ரோல்டுகோல்டு, 10 வருஷ குவாலிடி ரு. 60
18 காரட் கெட்டித் தங்கம் ... ரூ. 107
செகண்டஸ் நியூ காலிபர்
ரெக்டாங்குலர்
நிக்கல் சில்வர் ... ... ரு. 51
ரோல்டுகோல்டு, 10 வருஷ குவாலிடி ரு. 68
9 காரட் கெட்டித் தங்கம் ... ரு. 107
18 காரட் கெட்டித் தங்கம் ... ரு. 155
நல்ல நம்பிக்கையான டயம் கீப்பர்கள்!
வெஸ்டு எண்டு கடிகாரங்களின் மேலான பெருமானத்தை அனுபவத்தில் நேரில் கண்டு கொள்ளலாம். எந்த அம்சத்தைக் கவனித்துப் பார்த்தாலும், அவை மற்றெந்த கடியாரங்களுக்கும் மேம்பட்டவை. ஏனெனில் அவை உலகில் கியாதிபெற்ற வேலையாட்களைக் கொண்டு மிகவும் மேலான சாமான்களால் செய்யப்பட்டுள்ளன
உங்கள் போக்கிற்கும் தேவைக்குமேற்ப ஒரு வெஸ்டு எண்டு கடிகாரம் உள்ளது. எங்கள் இலவசக் காட்லாக்கை வாங்கிப் பாருங்கள்.
வெஸ்டு எண்டு வாட்சு கம்பெனி
பம்பாய் :: கல்கத்தா
WEST END WATCH Co.
BOMBAY
CALCUTTA

அம்மாஞ்சியின்

அம்மாஞ்சிக்குப் பதினைந்து தினங்களாக உடம்பு குணமில்லாமல், சிறிது தேகக்ஷீணம் அடைந்திருந்தான். மகாத்மாஜீ உண்ணுவிரதம் இருந்தபோது அம்மாஞ்சி வெற்றிலை பாக்கு புகையிலை இவைகளை இனி ஜன்மேபி தொடுவதில்லை என்று விட்டுவிட்டான். அப்படிச் செய்வதால் சங்கீத ரசானுபவம் குறைந்துவிடுமோவென்று நான் எண்ணிக் கேட்டேன். அவன் பிடிவாதமாக இருந்துவருகிறான். ஆடு தழை தின்பது போல் ஒரு கவுளி வெற்றிலையை மென்று தின்னும் பரிவுடைய அம்மாஞ்சி திடீரென்று அந்த வழக்கத்தை விட்டுவிட்டதால் அவன் அபிப்பிராயங்கள் எவ்விதம் மாறிவிடுமோ என்று நான் சிறிது சிந்திக்கிறேன்.

சென்ற மாதம் பதினொன்றும் தேதி ஆலத்தூர் சகோதரர்கள் திருச்சியிலிருந்து செய்த கச்சேரியை நீங்கள் கேட்டிருக்கலாம். அதில் குறிப்பிடக்கூடிய விசேஷங்கள் என்னவென்று கேட்பீர்களோ? அம்மாஞ்சியின் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன். முதலாவது உருப்படிகள் எல்லாம் "மூலை முடுக்கிலே முந்நூறு தென்னம்பிள்ளை, காயாது, பூவாது, கள்ளனுக்கெட்டாது" என்பதுபோல், எங்கேயிருந்தோ சுரண்டியெடுத்த தமிழ் சாகித்யங்கள். அதெல்லாம் போகட்டும். வழி மொத்தத்தில் நன்றாயிருந்தது. சம்பிரதாயம் சுத்தமாகத் தானிருந்தது. கச்சேரி முடியும்போது சாதாரணமாக யாவரும் ஒரு சுலோகத்தையோ மங்களத்தையோ பாடுவார்கள். சுப வாக்குடன் நிறுத்துவது வழக்கம். ஆலத்தூர் ஆசாமிகள் என்ன செய்தனர்? "வாழ்வை நம்பாதே, உடலை நம்பாதே, நம்பாதே" என்று கதறிக்கொண்டே கச்சேரியைச் சமாப்தியாக்கினர். இந்தக் கதறல் எதற்காக? இவ்வளவு அழுகைச் சப்தத்துடன் ஒரு கச்சேரியை முடிக்கவேண்டுமா? என்று அம்மாஞ்சி கேட்கிறான். 'நம்மக்ஹாரம்' அதாவது 'நம்பிக்கைத் துரோகம்' என்று மகம்மதியர் தூஷணை வாக்காக உபயோகிப்பார்கள். அந்த மாதிரியல்லவோ இருக்கிறது இந்த சாஹித்யம். "சுபம் பலுதரா பெண்ட்லி கொடுகா" என்று கோமுட்டி ஒருவன் தன் மாப்பிள்ளையைப் பார்த்துக் கதறினனும். ஏனென்றால் கலியாண மேடையில் உட்கார்ந்துகொண்டு 'அஸ்து, அஸ்து' என்று கோர சப்தமாகவே அவன் உளறிக்கொண்டிருந்தானும். அதுபோல், சங்கீத வித்வான்கள் பெரும்பாலாரைப் பார்த்து, இந்தக் காலத்தில், "சுப வாக்குக்களைப் பிரயோகித்துப் பாருங்காணும், ஓய்! மாயம், மண், பிரேதம், ஸ்மசானம், இழவு, பீடை இந்த மாதிரி வார்த்தைகளைக் கலந்து சாஹித்யங்கள் வேண்டாம்" என்று சும்மா எச்சரிக்கை செய்யவேண்டியிருக்கிறது. அர்த்தம் தெரிந்து பாடும் பாட்டுக்களே இந்த மாதிரி அசம்பாவிதமாக அமைந்தால், அர்த்தம் தெரியாத சாஹித்யங்களைப் பாடுவதில் என்ன விபரீதங்கள் ஏற்படுமோ?

ஸ்ரீமதி ம. ஷ. சுப்பலக்ஷ்மி இந்த மாதம் 2-ம் தேதி கச்சேரி செய்தாரே, அன்று கடைசி உருப்படி என்ன பாடினர்? ஞாபகமிருக்கிறதா? "வைஷ்ணவ ஜனதோ" என்ற பாடல்! எதற்காக அதைப்பாடினர்? அடுத்த தினம் மகாத்மாஜி உண்ணுவிரதத்தை முடிக்கப்போகிறார் என்று அறிந்து, அத்தகைய சந்தர்ப்பத்துக்குப் பொருந்திய உருப்படியை ஒலிபரப்பவேண்டும் என்கிற தாத்பரியமே! சுப்பலக்ஷ்மியம்மாள் நல்ல புத்திசாலினி என்று அம்மாஞ்சி அடிக்கடி சொல்லுவான். இதற்கு வேறு அத்தாக்ஷி வேண்டுமா?

இது நிற்க. ஆலத்தூர் சகோதரர்கள், கீரனூர் சகோதரர்கள், திருவீழிமழலை சகோதரர்கள், திருச்சி சகோதரர்கள், தனம் சகோதரிகள். இப்படியெல்லாம் கம்பெனிகளுடைய பெயர்கள் மாதிரியெல்லாம் இப்பொழுது சங்கீத உலகில் வழங்குகின்றனவே, அதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய சரியான நாமதேயங்கள் தெரிந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே! பெரிய ஜாயிண்ட் ஸ்டாக்கம்பெனிகளெல்லாம் பிய்ப்புண்டுபோய் விடுகின்றன! இந்தச் சங்கீத சோதரத்வம் பிரிந்து ஏதாவது காரணத்தால் பாகபத்திரம் எழுத நேரிடும் பக்ஷத்தில், தத்தம் யோக்கியதையைப் பிரசாரப்படுத்த "சுபேசோபனே முகூர்த்தே அத்யப்பிரம்மண ஹ" என்றல்லவோ ஆரம்பிக்கவேண்டும்!!

அபிப்பிராயங்கள்

'ராமய்யா'

பெண் குழந்தைகள் பலர் இக்காலத்தில் "தேவி" என்று தத்தம் பெயர்களுக்குப்பின் வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆண்மக்களும் அம்மாதிரியே "தேவன்" என்று வைத்துக் கொள்ளக்கூடாதா என்று கேட்கிறான், அம்மாஞ்சி. இதற்கு ஆதாரம் எனக்குப் புலப்படவில்லை!

திருவலங்காடு சுந்தரேசய்யருடைய யோக்கியதை எவ்வளவு சிறந்தது என்று தஞ்சாவூர் திருச்சி ஜில்லாவில் யாவரும் அறிவர். ஆனால் திருச்சி ரேடியோ அதிகாரிகளுக்குத்தெரியாது. சென்றமாதம் 13ம் தேதியன்று அவர் திருச்சியிலிருந்து கச்சேரி செய்தார். நிகழ்ச்சிகள் எப்பொழுது என்று கவனித்தீர்களா? காலை $8\frac{1}{2}$ மணி, மாலை 2 மணி, சனிக்கிழமை! இந்த நிகழ்ச்சி தேவர்களுக்குப் பிரீதியா, அசுரர்களுக்குப் பிரீதியா? நல்ல வித்வத்துவம், சம்பிரதாயமும் வாய்ந்த ஒரு வித்வானை இம்மாதிரி முக்காடுபோட்டு, கதவின் மூலையிலிருந்து வாசிக்கச்செய்து, காசைக் கையில்வைத்து அனுப்புவதா கௌரவம். ஆனால் ரேடியோ அதிகாரிகளைச்சொல்லி லாபமென்ன? திருவாலங்காடு சுந்தரேசய்யர் தெலுங்காயிருந்தால் அவருக்கு மதராஸ் ரேடியோ ஸ்டேஷனில், மேளதாளம், பூர்ணகும்பம் இவைகளோடு கச்சேரி நடக்கும். உதாரணமாக, பிப்ரவரி 21ம் தேதி நிகழ்ச்சிகளைக் கவனியுங்கள். ஸ்ரீத்வாரம் நரசிங்கராவ் என்பவர் ஸ்ரீத்வாரம் வெங்கடசாமி நாயுடுவின் சகோதரர். அவரும் பிடில் வாசிக்கிறார். அவருடைய நிகழ்ச்சிகள் சாயந்திரம் 5மணிக்கும், ராத்திரி $7\frac{3}{4}$ மணிக்கும் நடந்தன. ஸ்ரீ. நரசிங்கராவின் திறமை, திருவாலங்காடு சுந்தரேசய்யருடைய யோக்யதைக்குக் குறைந்தது என்று சொல்லத் தயாராய் இல்லா விட்டாலும், சுந்தரேசய்யருடைய யோக்யதை நரசிங்கராவின் யோக்கியதையைவிட பெரிதென்றே சொல்லலாம். (இது அம்மாஞ்சியின் சூக்ஷ்ம அபிப்பிராயம்!) அப்படியிருக்க, மதராஸில் தெலுங்கு வித்வான்களுக்கு ஏராளமான கச்சேரிகள் ஏற்படுத்தவேண்டும் என்று விதித்திருக்கிறதல்லவா? ஆகவே, 80 மார்க்கு வாங்கக்கூடிய தமிழ்நாட்டு வித்வானுக்கு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஒரு கச்சேரி, அது

வும் பிசாசுங்கூட வெறுக்கும்வேளையில் நடந்தால், 40 மார்க்கு வாங்கக்கூடிய ஆந்திர வித்வானுக்கு இரண்டுமாதத்துக்கு ஒருமுறை "கான்ஸர்ட் ப்ரோக்ராமாக"க் கிடைத்து விடுகிறது!

தெலுங்கு சங்கீதம் கூடாது, தமிழேவேண்டும் என்று நாம் சொல்லிச்சொல்லி, ஆந்திரர்களைத் தூபம் போட்டதன்பலனாக அவர்கள் பட்டணத்திலேயே பாதி சாப்பிட்டுவிட்டுக் கூவம் நதிக்கு வடக்கே இருக்கும் ரேடியோ ஸ்டேஷனையும் தங்கள் பத்திரத்தில் தாக்கல் செய்துகொள்ள முற்பட்டுவிட்டார்கள்!

நம் தமிழ்நாட்டு சங்கீத வித்வான்கள் சிலர் குண்டூர், கோதாவரி, கிருஷ்ணா, இந்த ஜில்லாக்களில் புறம்போக்கு தர்க்காஸ்து சில வாங்கிக்கொண்டு, பெயர்களையும் மாற்றிக் கொண்டால் மிகவும் லாபமடையலாம் என்று அம்மாஞ்சி அபிப்பிராயப்படுகிறான். செம்மங்குடி நாராயணசாமிய்யர் என்பவர் நரசாபூர் நாராயணசாமிபந்தலு என்று ஆவாரேயாயின், அவருக்கு எத்தனை 1116 ரூபாய் கச்சேரிகள் கிடைக்கும்! திருவாலங்காடு சுந்தரேசய்யர், நந்திகாமா சுந்தரேச சர்மாவாக ஆனால், கேவலம் பிடிலை ச்ருதி சேர்த்துக்காண்பித்தே 116 ரூபாய் வாங்கலாமே! இதெல்லாம் சொல்லி என்ன பயன்! தெலுங்கு வித்வான்களெல்லாம், யாருமில்லாத காட்டிலே அச்வமேதயாகம் பண்ணுகிறார்களே! தமிழ்நாட்டு வித்வான்களோ, "ஆறெல்லாம் பாலாய்ப்பெருகினாலும், நாய் நக்கித்தான் குடிக்கணும்" என்பதுபோல் இருக்கின்றனர்.

தமிழ்நாடு, தமிழ்நாடு என்று சும்மா ஜம்பம் சொல்லிக்கொண்டுதான் நாமிருக்கிறோம். தமிழ்நாட்டிலுள்ள வித்வான்களுக்குச் சரியான கௌரவமும், ஆதரிப்பும் கொடுக்க நமக்கு இன்னும் யோக்கியதை வரவில்லை. தெலுங்கு ஜில்லாக்களுக்குச்சென்று தமிழ்நாட்டுத் தனவான்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று அறிந்து வந்தால் நாம் க்ஷேமப்படலாம் என்கிறான் அம்மாஞ்சி.

கதம்பம்

மூடு மந்திரம்!

'குத்தகை இரவல் திட்டம்' என்பதாக ஒன்று அமெரிக்காவும் பிரிட்டனும் செய்து கொண்டுள்ளது என்பது மட்டும்தான் நாம் தெரிந்துகொண்டது.

அதன் ஷரத்துக்கள் என்ன? இந்தியாவிற்கும் அந்தத் திட்டத்திற்குமுள்ள சம்பந்தமென்ன? என்ற விஷயம் யுத்த ரகசியமெனக் கருதி நமக்குத் தெரிவிக்கப்படவில்லை.

சட்ட சபையில் கேள்விகள் கேட்டபொழுதெல்லாம் "இத்திட்டத்தினால் இந்தியாவிற்கு பெருத்த லாபமும் நன்மையும். அமெரிக்கா தியாக புத்தியுடன் ஏராளமான சாமான்களை அனுப்பியுள்ளது'' என்ற பதில் மட்டுமே கிடைத்துள்ளது.

ஐக்ய இந்திய வியாபாரச் சங்கத் தலைவர் ஜி. எல். மேதா அவர்கள் சில ருசிகரமான விஷயங்களை விளக்கியுள்ளார். கவனியுங்கள்!

"சர்க்கார் இந்தத் திட்டத்தைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் மூடு மந்திரமாகவே வைத்துள்ளார்கள். அமெரிக்கப் பத்திரிகைகளிலிருந்து இதுவரை சுமார் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் இந்தியா நிமித்தமாய் அனுப்பப்பட்டுள்ளனவென்றும், அதற்கு இந்தியாதான் வகை செய்யவேண்டுமென்றும் தெரிகிறது. இந்திய சர்க்காரின் பொருளாதார மந்திரி அப்படிப்பட்ட கடன் ஒன்று இந்தியாவின் தலையில் இருக்கிறதென்றும், அதுசெல்லாவதற்காக தொகைகள் ஒவ்வொரு பட்ஜட்டிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று மட்டும் கூறியுள்ளார்.

"இவ்வளவு பிரம்மாண்டமான கடன்தொகை இந்தியப் பாதுகாப்பு நிமித்தம் அவசியமா? இந்தியா தாங்கக் கூடியதா? ஆப்பிரிக்காவிலும், தூரக்கிழக்கிலும் நடக்கும் நமக்குச் சம்பந்தமில்லாத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யும் சண்டைச் செலவையும் இந்தியாதான் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? அமெரிக்கச் சிப்பாய்கள் இந்தியாவில் ஏராளமாய்ச் சாப்பிட்டு தூங்கிக்கொண்டிருக்கிறார்களே இவர்களின் செலவை அமெரிக்காவே ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனென்றால் பிரசிடெண்ட் ரூஸ்வெல்டு ஒரு சமயம் சொல்லியிருக்கிறார், 'ஐக்ய அமெரிக்காவின் பாதுகாப்பின் பலம், இந்திய பாதுகாப்பின் பலத்தை ஒட்டியுள்ளது.' விஷயம் ஒன்றும் நமக்குத் தெரிவிக்காமல் நம் தலையில் பெரிய பாரததைச் சுமத்துவது தர்மமுமன்று, நியாயமுமன்று."

படைத்தகடவுளின் கடமை

இந்த யுத்தகாலத்தில் விலை அதிகம் ஆகாத பொருள் இரண்டுதான்! ஒன்று களிமண், இரண்டு பிரசாரம். மற்றப் பொருள்களெல்லாம் விலை ஏறிவிட்டனவென்றுமட்டும் சொல்லக்கூடாது. மக்களால் வாங்கமுடியாதபடி போய்விட்டன என்றால் அது மிகையில்லை.

இந்தியாவில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் ஒரு குட்டி சமஸ்தானாதிபதி. என்னவிலையானாலும் வாங்கக்கூடியவர்கள் என்ற அபிப்பிராயமே வியாபாரிகளிடமும், முதலாளிவர்க்கத்தினரிடமும் குடிகொண்டுள்ளது போலும்! நவீன சம்பிரதாயப்படி குடிகளை ரக்ஷிக்க வேண்டியது படைத்த கடவுள்தான்; அரசாங்கத்துக்கு அதில் சம்பந்தமில்லை! அரசாங்கத்தின் கவலையெல்லாம் அரசாங்கம் நடைபெறவேண்டியது. மக்கள் பஞ்சத்தினாலும் வறுமையினாலும், விலைவாசிகள் கொடுமையினாலும் அவதிப்பட்டால் அந்தப் பிசகு மக்களுடையதே. வரி வசூல் பைசா பாக்கி இல்லாமல் செய்து யுத்த தேவதைக்கு அதை அர்ப்பணம் செய்வதே அரசாங்கத்தின் கடமையென்று கொண்டுள்ள காலமிது.

உணவுப்பொருள்களின்விலை தாங்கமுடியாத அளவில் இருக்கிறதே என்று முறையிட்டால்



புகழ்பெற்ற ஸினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

'ரிஷ்ய சிருங்கர்' தமிழ் படத்தில் பிரதம ஸ்திரீபாகம் வகித்தவரும், போப்பாண்டவரால் புகழப்பட்டவரும், இனிய சங்கீத சம்பத்துடையவருமான திறமைவாய்ந்த தென்னிந்திய நடிகை ஸ்ரீமதி வஸுந்தராதேவி சொல்லுகிருர்:

"தனிப்பட்ட நறுமணத்திற்காக நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டியையே உபயோகிக்கிறேன்.

Vasundhara Devi.

நரஸூஸ் காபி

M N K.—16 TM.

மக்கள்கையில் ஏராளமாகப் பணப்புழக்கம். பணத்தை என்ன செய்வதென்று தெரியாமல் மக்கள் அதிக விலைகொடுத்து சாமான்களை வாங்கத் துணிந்துள்ளார்கள், என்ற விநோத தத்துவத்தைக் கொள்ளை கொள்ளையாகச் சுகமாகச்சம்பளம் வாங்கித்தூங்கும் அதிகாரிகள் அள்ளி வீசுகிறார்கள்.

ராணுவத்தின் பெயரால் கண்டபடி விலை கொடுத்துக் கண்ட சாமான்களையெல்லாம் சர்க்கார் வாங்கிவிடுகிறார்கள். மக்களுக்கு எப்படி ஞாயவிலைக்கு சாமான்கள் கிடைக்கும்?

சாமான்களின் அநீதியான விலைவாசி உயர்வுக்குச் சர்க்காரே பொறுப்பாளி.

இப்படியே நிலைமை இருந்துவருமானால் ஆளும்சர்க்காருக்கே ஆபத்துநேருமென்பதை நாம் எடுத்துரைக்க வேண்டித்தானிருக்கிறது! முன்யோசனையும், நல்லதிட்டமும் விலைவாசிக் கட்டுப்பாடும் உணவுப்பொருள்கள் விஷயமாக உடனே சர்க்கார் கையாளவேண்டும்.!

சிந்திப்பாருமில்லை, கேட்பாருமில்லை

''காகிதத்தை வீணாக்காதீர்கள்'' என்று ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு, டன் கணக்கில் காகிதத்தை வீணாக்கிப் பிரசுரம் செய்யப்படுகிறது.

விதவிதமான விலை உயர்ந்த காகிதங்களில் காசு, மை, நேரம், மூளை எல்லாவற்றையும் விரயஞ் செய்து பிரயோசனமற்றதும், நம்பத்தகாததுமான 'விஷயங்களை' அச்சிட்டு மனம் தோன்றியவாறு வினியோகம் செய்தல் நியாயமா? அதுவும் சுதந்திர ஆர்வத்தை அடக்கி ஒடுக்கவா இவ்வாறு செய்யவேண்டும்?

''தாய்நாட்டைக் காப்பாற்றுங்கள்'' என்பது மற்றொரு விளம்பரம். ஆனால் தாய்நாட்டைக் காப்பாற்ற வீராவேசம் கொண்டு முன்வரும் மக்களின் தலைவர்கள் இரக்கமின்றிச் சிறையில் தள்ளப்படுகின்றனர்.

''ஆகாரப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்யுங்கள்'' என்பது ஒரு பிரசாரம். ஆனால் குடியானவர்களின் வறுமை, வரிப்பளுவு இவைகளைப்பற்றி கவலை கொள்ளுவதாகக் காணோம். உற்பத்தி செய்யும் தானியங்களுக்கு நியாயமான விலையும் கிடைக்கச் செய்வதாகக் காணோம்!

''ரயில் பிரயாணத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்'' என்று வேறொரு பலத்த பிரசாரம். ராணுவத்தின் பெயரால், குதிரைப் பந்தயத்தின் பெயரால் எண்ணற்ற, பயனற்ற ரயில் பிரயாணங்கள் குதூகலமாய் நடக்கின்றன!

''அச்சு நாடுகள் ரேடியோவில் பிரசாரம் செய்வதெல்லாம் பொய், கேட்காதீர்கள்'' என்ற போதனை நிகழ்கிறது. ஆனால் நமது ரேடியோவில் என்ன நடக்கிறது? ''இந்தியாவில் தேசிய அரசாங்கம் அமோகமாய் நடக்கிறது'' என்று அமெரிக்கர்களுக்குப் பிரசாரம்!

''விருந்துகளைக் குறைத்துக்கொள்ளுங்கள்'' என்பது இன்னுமொரு பிரசாரம். சர்க்கார் மாளிகைகளில் நடக்கும் விருந்துகள் கணக்கு வழக்கல்ல!

இம்மாதிரி உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் விஷயங்களைச் சிந்திப்பாருமில்லை, கேட்பாருமில்லை. நாம் தான் ஏன் வீணாகக்காலத்தையும், காகிதத்தையும், வாசகர்களது பகுத்தறிவையும் பாழ்படுத்தவேண்டும்?

மாஜி சுமங்கலி
மரகதவல்லி அம்மாள்!

அம்மாளை அறிமுகம் செய்விக்கவேண்டியது நமது கடமை. பால்யம், கட்டழகி, வயது சுமார் 22; அகில இந்திய விதவா விவாக சங்கத்தின் காரியதரிசி. அம்மாள் ஒரு விதவை என்ற விளம்பரம் அவசியமில்லை!

''தாரமிழந்த புருஷர்கள் விதவைகளையே மணம் புரிந்து கொள்ளவேண்டும். மீறி நடப்பவர்களுக்கு ஆறு மாதம் சிறை வாசமும் ஆயிரம் ரூபாய் அபராதமும்.''

இப்படியாக வங்காளச் சட்ட சபையில் கொண்டுவந்துள்ள மசோதாவைப்பற்றி அம்மாளின் அபிப்பிராயத்தைக் கேட்டதற்கு அம்மாள் மனமுவந்து அருளியதாவது!

''நான் இந்த மசோதாவை முழுமனதுடன் ஆதரிக்கிறேன். இளம்விதவைகள் படும்பாடு என் போன்றவர்களுக்குத்தான் தெரியும். ஆண்கள் நினைத்தபடி பல தாரங்களைக் 'கட்டி'க் கொள்கின்றனர். அறுபதுவயதுக் கிழவனும் கல்யாணப் பித்துப் பிடித்து அலைகிறான். ஆனால் ஒரு பெண்ணின் கழுத்திலுள்ள தாலி அறுபட்டால் அதை 'ரிப்பேர்' செய்ய

அந்தக் கடவுளாலும் முடியாதாம்! என்ன சாஸ்திரம்? என்ன மூட சம்பிரதாயம்? சாஸ்திரம் அப்படியிருக்காது. அப்படியிருந்தாலும் அதை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது! ஆண்களைப்போல் பெண்களுக்கும் இச்சைகளும், ஆசாபாசங்களும் உண்டென்பதைச் சாஸ்திரம் கற்றோர் மறுக்க முடியுமா? இயற்கையாய் அமைந்துள்ள எங்கள் உணர்ச்சிகளைத் தடைபடுத்துவது என்ன நீதி? சாஸ்திரத்தின் பெயரால், சம்பிரதாயத்தின் பெயரால் மூடப் பழக்க வழக்கங்களினால் நாங்கள் இதுவரை மதியை இழந்தோம்! சுயமதிப்பை இழந்தோம்! அழகைக் குலைத்துக்கொண்டோம்! பெண்மைக்கே கேடு தேடினோம்! இனி ஒரு நிமிஷமும் எங்களால் சும்மா சகித்துக்கொண்டு பொறுத்து இருக்க முடியாது!''

மசோதாவைப்பற்றிச் சநாதன சங்கத் தலைவரும் ரிடையர்டு தாசில்தாருமான சிவசங்கர சாஸ்திரிகளைக் கேட்டதற்கு அவர் 'ஆஞ்ஞா பிச்சு'ச் சொன்னதாவது.

''நம்ம பெரியவாள் ரொம்ப விஷயம் தெரிஞ்சவாள். அவாள் செஞ்சத்தைத்தான் நாமும் செய்யணும். சாஸ்திரமும் அதுதான். பூர்வ ஜென்மத்திலே செய்த கர்மாவினால் வைதவ்யம் ஸித்தித்தது. சத்கர்மாக்களை இந்த ஜன்மாவிலாவது செய்யவேண்டும். விதவா விவாகம் நமக்கு ஏற்றதல்ல. சாஸ்திர விரோதம். இந்த மாதிரி பழய ஆசாரங்களை துலைக்கப்பார்ப்பவர்களை நான் பலமாகக் கண்டிக்கிறேன்.''

சினிமா நட்சத்திரம் மிஸ் சுசிலா தேவி சொன்னதாவது.

''எங்கள் போன்றவர்களுக்கு இவ்வித ப்ரச்னை எவ்விதக் கவலையும் கொடுக்கவில்லை.''

மாணவர் சங்கக் காரியதரிசி மாசிலாமணி பி. ஏ. தெரிவித்ததாவது:

''ரொம்ப சரி! விதவை நல்ல யௌவனமாயும், அழகு வாய்ந்தவளாயும், படித்தவளாயும் நாகரிகமுள்ளவளாயும், (கொஞ்சம் பணமிருந்தால் இன்னும் மேல்) இப்படிப்பட்ட விதவையைக் கலியாணம் செய்துகொள்ள நான் இப்பொழுதே ரெடி!''

சிவபெருமானது கிருபைவேண்டும்.

திரு திருப்பதித்திருமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் சன்னிதானத்தில் பெருமாள் பக்தனெனச் சொல்லிக்கொண்டு ஒருவன், ''சிவபெருமானது கிருபைவேண்டும்! சிவ நெறென்னவேண்டும்'' என்ற சினிமாப் பாட்டை ஸப்தஸ்வரங்களுடன் மனமுருகப் பாடினால் அது பொருத்தமாயிருக்குமா? அப்படிப்பாடுபவனை அங்குள்ள பட்டாச்சாரி குரவளையைப் பிடித்து இழுத்து மலையிலிருந்து கீழே உருட்டித்தள்ளினால் அதைக் குற்றமென்று கூறுவது கடினம்!

அதேமாதிரி சிவபெருமானது திவ்விய சன்னிதானத்தின்முன் ஒருவன் நின்றுகொண்டு குரானிலிருந்து துதிப் பாடல்களை பாடினால் நன்றாயிருக்குமா? அப்படிச் செய்தவனைப் பக்கத்திலிருப்பவர் 'பளார்' என்று கன்னத்தில் 'அறைவிட்டால்' அதைத் தப்பென்று சொல்ல முடியுமா?'

இடம், சந்தர்ப்பம், சமயம் எல்லாவற்றையும் அனுசரித்துக்காரியங்களைச் செய்யவேண்டும். அசந்தர்ப்பமான காரியத்தைச் செய்தால் விபரீதம்தான் விளையும். ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளவர்களது திருநாள் கொண்டாட்டத்தின்போது அந்த மஹான் இயற்றிய கீர்த்தனங்களைப் பாடுவதே முறை!

அண்ணாமலைச் சர்வகலாசாலையில் ஸ்ரீஸ்வாமிகள் அவர்களின் திருநாள் கொண்டாடப்பட்டது. அதற்குச் சினிமா நடிகரும் 'தமிழ் இசை அரசு'மான திரு. தண்டபாணி தேசிகர் பாட அமர்த்தப்பட்டார்!

திரு. தேசிகர் தமிழ் உருப்படிகளை இசையுடன் நன்றாய் பாடக்கூடியவர். தமிழ் உருப்படிகளைப் பாடுவது சபையோர்க்குச் சந்தர்ப்பபிசகாகத் தோன்றிற்று. குழப்பமும் கலாட்டாவும், அமளியும் தோன்றிவிட்டது.

தமிழ் இசையை வளர்ப்பதில் நாம் மற்றவர்களுக்கு எவ்விதத்திலும் குறைந்த ஆர்வம் கொண்டவர்களல்ல. ஆனாலும் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நடந்துகொள்ள வேண்டுமென்றே வற்புறுத்துகிறோம்!

தமிழ் இசை இயக்கம் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கத்தைக் குறித்து எற்கனவே பலத்த வாதப்பிரதிவாதங்கள் கிளம்பியுள்ளன. இந்நிலையில் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் ஸ்ரீஸ்வாமிகள் கொண்டாட்ட வைபவத்தின் போது நடந்த விபரீத சம்பவம் மிகவும் வருந்தத்தக்கதே.

சிவபெருமானது நெற்றிக்கண்

"தென்னைமரத்தில் தேள்கொட்ட மாமரத்தில் நெறிகட்டிற்று" என்று சொல்வார்கள். வங்காளத்தில் முக்கர்ஜி என்ற மந்திரி பதவியை ராஜிநாமா செய்தார். ராஜிநாமாசெய்யும் பொழுது ஒரு நீண்ட கடிதம் எழுதி அதில் பிரிட்டிஷ் இந்திய சர்க்காரின், வண்டவாளங்களை விளக்கியிருந்தார்.

இதைபம்பாயில் ஒரு பத்திரிகை பிரசுரித்து அடியில் கண்டவாறு தன் அபிப்பிராயத்தைக் கூறிற்று "வங்காள கவர்னர் சட்டப்படிகூட நடந்துவரவில்லை என்று தெரிகிறது. மந்திரிகளுக்கு எவ்வித அதிகாரமுமில்லை, அவர்கள் கலக்கப்படுவதில்லை. ஜனநாயகம் என்று சொல்வதெல்லாம் சுத்த ஹம்பக்"

உடனே பம்பாய் கவர்னருக்குக் கோபம் பெருகிவிட்டது! தம் சகோதர கவர்னரின் செய்கைகளைக்கண்டிக்க ஒரு இந்தியப்பத்திரிகைக்கு இவ்வித துணிச்சலாவென்று. சிவபெருமான் அன்று நெற்றிக்கண்ணைத் திறந்தது போல் அவசரச் சட்டக் கண்களால் பத்திரிகையை ஒரு விழிவிழித்தார். அவ்வளவுதான். அந்தப் பத்திரிகை ரூ. 1500 இழந்தது.

பத்திரிகை சும்மாயிருக்கவில்லை. ஐக்கோர்ட்டில் வழக்கிட்டது. 'புல்பென்சு' செய்த தீர்மானத்தைக் கவனியுங்கள்:

"வங்காளக் கவர்னரைக் குறைகூறினது, பம்பாய் மக்களிடையே கலவரமுண்டுபண்ணக் கூடியதாகப் பம்பாய் கவர்னர் தீர்மானித்தது பகுத்தறிவுக்கு ஒத்ததாகஇல்லை. பத்திரிகை விமர்சனத்தை நாங்கள் ஆழ்ந்து கவனித்தோம். அதில் தவறில்லை. நேர்மையான முறையில்தானிருக்கிறது. பறிமுதல் உத்தரவை ரத்துசெய்துவிட்டோம்!"

பத்திரிகைச் சுதந்தரமே யுத்த வெற்றிக்கு முதல் ஆயுதம் என்ற உண்மையை நமது சர்க்கார் உணர்ந்தால் இவ்வித பெருந்தவறு நேர்ந்திருக்காது. இனியாவது ஞானோதயம் ஏற்படுமா நமது சர்க்காருக்கு?

NICO FERRIN
Iron and Vitamin B Tonic
நிக்கோ-பெரின்
அயர்ன் வைடமின் B டானிக்

ரத்த சோகை, பெர்னிஷஸ் அனீமியா (Anaemias-Primary, Secondary) பலஹீனம், ரத்தக்குறைவு, முதலிய வியாதிகளுக்கு சிறந்த டானிக்.

ஜீரண சக்தியைச் சீர்படுத்துவதிலும், ரத்தத்தை விருத்தி செய்வதிலும் நல்ல உதவி செய்கிறது. ஜ்வரங்களுக்குப் பிறகு ஏற்படும் பலஹீனத்தையும், கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஏற்படும் சோர்வு, ஒய்ச்சல் பலஹீனத்தையும் போக்குகிறது.

KERMES INDICA.
கர்மஸ் இண்டிகா

க்ஷயம் இழுப்பு (Asthma) இருமல், கக்குவான், குத்திருமல், ப்ராங்கைடீஸ், நியூமோனியா முதலிய நோய்களுக்கும் இன்னும் சுவாசக்குழாய்கள், சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்தென்று வைத்திய நிபுணர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கபத்தை வெளியாக்கும் தன்மையுடையது. கோழையை சுலபமாய் இருமி வெளிப்படுத்தி இருமலைக் குணமாக்கி மார்பு விலாப் பக்கத்திலுள்ள வலியைப்போக்கி இழுப்பை குணமாக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— **K. P. LIMITED.,**
40, Hunters Road, VEPERY MADRAS.

சூரியனும் சந்திரனும்

ஆர். கே. விசுவநாதன் எம். ஏ.

●

"ஒளி தருவது யாது? தீராத இளமையுடையது யாது? வெய்யவன் யாவன்? மழை எவன் தருகிறான்? உயிர் எவன் தருகிறான்? ஞாயிறு அது நன்று" எனப் பாரதியார் சூரியனைப் போற்றுகிறார். இவ்வாறு கவித்திறமையினால் அழகாய்க் கூறப்பட்ட விஷயங்களைப்பற்றி விஞ்ஞானிகள் கொண்டுள்ள கருத்துக்களை ஆராய்வோம்.

வானவெளியில் பிரகாசிக்கும் எண்ணற்ற நட்சத்திரங்களில் சூரியன் நமக்கு அருகிலுள்ள ஒரு சிறிய நட்சத்திரமாகும். அது சுமார் ஒன்பது கோடி மைல் தூரத்திற்கப்பால் இருக்கிறது. அதன் பிரகாசத்தைத் தக்க சாதனங்களைக்கொண்டு குறைத்துப் பரிசோதித்துப் பார்த்ததில் அதன் பரப்பு முழுவதும் ஒரே அளவாகப் பிரகாசிக்கவில்லை என்று அறிந்தார்கள். அப்பரப்பு முழுவதிலும் ஜுவாலைகள் படர்ந்தெரிவதைக் கண்டார்கள். இவைகளின் நடுவே திட்டுத்திட்டாகச் சில இடங்கள் மங்கித் தோன்றுவதையும் அம்மங்கிய பாகங்கள் காலப் போக்கில் அடிக்கடி மாறிக்கொண்டு வருவதையும் உணர்ந்தார்கள். இவைகளைத்தான் சூரியனது களங்கங்கள் (Dark Spots) என்று கூறுவது. இவற்றை ஆராய்ந்து சூரியனைப்பற்றி அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டார்கள். சூரியனும் பூமியைப்போல் தன்னைத்தானே சுற்றி வருவது புலனாயிற்று. ஆனால் சுற்றி வரும் நேரம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. சராசரி மூன்று அல்லது நான்கு வாரத்துக்கு ஒருமுறை தன்னைத்தானே சுற்றி வருகிறது. இந்நேரம் இடத்திற்கு இடம் மாறுவதிலிருந்து சூரியன் திடப்பொருளாய் இல்லாமல் ஆவி நிலையிலிருக்க வேண்டுமென்று அனுமானிக்கலாம். நிற்க, உஷ்ணமாயிருப்பதிலிருந்தே சூரியன் ஆவி நிலையில்தானிருக்கவேண்டுமென்று உணரலாம். சூரியன் மத்திய பாகத்தைப் பிழம்பு மண்டலம் (Photosphere) என்பார்கள். இதைச் சூழ்ந்துள்ள பாகங்கள் சற்றுக் குறைவான சூட்டிலிருக்கின்றதெனக் கண்டார்கள். இப்பொழுது பிழம்பு மண்டலத்தின் வெப்ப நிலைக்கும் அதன் இறுக்கத்திற்கும் உள்ள முரண்பாட்டைக் கவனிப்போம். பூமிப்பரப்பின் மீது நிற்கும் பவனத்தின் அழுத்தத்தை அல்லது இறுத்தத்தை (Atmospheric pressure) நாம் உணருவோம். இது ஒரு சதுர அங்குலப் பரப்புக்குப் பதினைந்து பவுண்டு எடை என்று பரிசோதனையினால் கண்டிருக்கிறார்கள். இதை அலகாகக் (unit) கொண்டு வாயுக்களின் இறுக்கங்களையும் ஆவிகளின் இறுக்கங்களையும் அளவிடுவது வழக்கம். பிழம்பு மண்டலத்தின் இறுக்கம் பவன இறுக்கத்தில் கோடிக்கணக்கான மடங்குகளாய் இருக்க வேண்டுமென்று உணர்ந்தார்கள். அளவு கடந்த இறுக்கத்தையும் அளவு கடந்த சூட்டையும் கொண்டதினால் இரு விதப் பௌதிக நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. ஒரு பொருளின் சூடு உயர்ந்தால் அது அகற்சியடையும் என்று அறிவோம். எனவே, அதீத சூட்டின் விளைவாகச் சூரியன் அகற்சி பெறவேண்டுமென்றேற்படுகிறது. நிற்க, ஒரு பொருளின் மீது இறுக்கம் பிரயோகிக்கப்பட்டால் அது சுருங்கும் என்று நாமறிவோம். சூரியனும் இறுக்கமும் அளவு கடந்திருப்பதால் அதற்கு ஏற்றவாறு அது சுருங்கவேண்டுமென்றாகிறது. சூட்டின் விளைவாக ஏற்படும் அகற்சியும், இறுக்கத்தின் விளைவாக ஏற்படும் சுருக்கமும் ஒன்றையொன்று எதிர்த்துலைப்பட, சமநிலை நிறுவப்பெற்றிருக்கிறது. எனவே சூரியனிலுள்ளபொருள் மிகச்சுருங்கியும், அதிக இறுக்கத்துடனும், மிகுந்த சூட்டுடனும் இருக்கின்றது என்று உணரலாம்.

சூரியனது ஒளியைப் பரிசோதித்து அது பலவேறு நிறங்களுடைய ஒளிகளின் சேர்க்கை என்று நியூட்டன் என்ற பேறிஞர் காட்டினார். இவ்வொளிகளின் சேர்க்கைக்கு நிறமாலை (Spectrum) என்று பெயரிட்டார். இந்நிறமாலை ஒரு முனை செந்நிறமாகவும் மற்ற முனை ஊதா நிறமாகவும் இருப்பதைக் காட்

டினார். இதன் நடுவே மற்ற ஒளிகள் இருக்கின்றன. நிற்க, ஆவி நிலையில் இருக்கும் ஒவ்வொரு தாதுவும் தழலிடப்பட்டபோது தனக்குச் சிறப்பியல்பான ஒளி ஒன்றை வெளியிடக்கூடுமென்று அறியப்பட்டது. இதே நிலையில் ஆவியினுள் வேறொரு ஒளியைச் செலுத்தினால் அதனின்று தான் வெளியிடக்கூடிய ஒளியின் பகுதியை மட்டும் உட்கொண்டு மிகுதியை அது வெளியிடுவதைக் கண்டார்கள். இக்கருத்தைக் கொண்டு சூரியனது பிழம்பு மண்டலத்தைச் சூழ்ந்துள்ள ஆவிகளை அறிந்தார்கள். அதாவது பிழம்பு மண்டலத்திலிருந்து வெளிப்படும் வெண்ணிற ஒளி அதைச் சூழ்ந்து பல்லாயிரம் மைல்கள் வரை பரவியிருக்கும் வர்ண மண்டிலத்தைக் (Chromosphere) கடந்து வரும்பொழுது அங்கு தழல் நிலையிலுள்ள வாயுக்களும் ஆவிகளும் தத்தமக்குச் சிறப்பியல்பான நிறமாலைகளுக்குரிய ஒளியை அருந்தி விடுகின்றன. அதற்குத் தகுந்தவாறு மிஞ்சி வரும் நிறமாலையில் கருங் கோடுகள் காணப்படுகின்றன என்று அறிந்தார்கள். இச்சோதனையிலிருந்து சூரியனில் நீரகம் (Hydrogen). ஸோடியம் (Sodium), பேரியம் (Barium), மாக்னீஸியம் (Magnesium), கால்ஸியம் (Calcium) முதலிய தாதுக்கள் இருப்பதாக உணர்ந்தார்கள். மேலும் ஹீலியம் (Helium) என்னும் தாது சூரியனிடத்தே காணப்பட்டு முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரே பூமியில் கண்டுபிடிக்கப்பட்டது.

பூமியின் வயது சுமார் முன்னூறு கோடி வருஷங்களென மதிப்பிட்டிருக்கிறார்கள். எனவே சூரியன் இதைவிட அதிக வயது கொண்டிருக்க வேண்டுமென்று ஆகிறது. இவ்வளவு காலமாகச் சூரியன் ஓயாமல் வெப்பத்தையும் ஒளியையும் வெளியிட்டுக் கொண்டே வந்திருக்கிறது. இவ்வாற்றலை அது எவ்வாறு பெற்றது? இதற்கு முடிவு உண்டா? என்பவற்றைப்பற்றி விஞ்ஞானிகள் கொண்டுள்ள கருத்துக்கள் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. சூரியன் ஆரம்பத்தில் இப்பொழுது இருப்பதைவிட மிகவும் பெரிதாக இருந்திருக்க வேண்டுமென்றும், நாளடைவில் அது வரவரச் சுருங்கிக்கொண்டு வந்திருக்க வேண்டுமென்றும், இப்படிச் சுருங்குவது ஏராளமான சூடு உற்பத்திக்கும் மிகுந்த ஆற்றல் வெளி வருவதற்கும் காரணமாயிருந்திருக்க வேண்டுமென்றும் கெல்வின் என்ற பேரறிஞர் முதலில் எடுத்துக் கூறினார். சென்ற இருநூறு கோடி வருஷங்களாகச் சூரியனிடமிருந்து வெளிவந்திருக்கும் ஆற்றலின் அளவுக்கும் சுருங்குவதால் உண்டாகும் மொத்த ஆற்றலுக்கும் வேற்றுமை அதிகமாயிருப்பதை உணர்ந்தார்கள். எனவே கெல்வின் கருத்து தவறு என்று கைவிடப்பட்டது. கதிரியக்கச் சிதைவினால் வெளிப்படும் மிகுந்த ஆற்றலைக்கண்டு சூரியனிடம் இவ்வாறான கதிரியக்கச் சிதைவு எப்பொழுதும் நிகழ்ந்து வந்திருக்க வேண்டுமெனக் கருதினார்கள். இதுவும் உண்மைக் காரணம் அல்லவென்று கைவிடப்பட்டது. அணுக்களின் சிதைவினால் வெளிப்படும் ஆற்றலைப்போல் அணுக்கருக்களும் மின்னுநக்களும் சேரும்பொழுதும் அதிக ஆற்றல் வெளிப்படுவதை உணர்ந்து அந்நிகழ்ச்சி காரணமாய் இருக்கலாமென்று ஊகித்தார்கள். இதிலிருந்துதான் சரியான காரணத்தைச் சமீபத்தில் விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். இதைக் காட்டியவர் பெதே (Bethe) என்பவர். ஐன்ஸ்டைன் கொள்கைப்படி பொருள் ஆற்றலாகவும் ஆற்றல் பொருளாகவும் மாறலாம் என்று தெரியவந்தது. சூரியனிடம் நீரக வாயு இருப்பதை முன்பு கண்டோம். இந்நீரகம் அணுக்களாக மாறக்கூடும் என்று நினைக்கப் போதுமான சான்று இருக்கிறது. நாலு நீரக அணுக்கள் சேர்ந்து ஒரு ஹீலிய அணுவாகின்றன. ஆனால் ஒரு ஹீலிய அணுவின் நிறை நாலு ஹைட்ரஜன் அணுக்களின் மொத்த நிறைக்குச் சற்றுக் குறைந்தது. இம்மாறுதலில் நசித்த பொருள் ஆற்றலாக வெளிப்பட்டிருக்க வேண்டும். சூரியனிடம் ஏராளமாக நீரகம் இருப்பதால் அது நாளடைவில் ஹீலியமாக மாறும். இவ்வாறு மாறுவதற்குப் பொருள் அழிவு ஏற்படும். இதனால் உண்டாகும் ஆற்றல், சூரியனிடமிருந்து வெளிப்பரவும் ஆற்றலுக்குக் காரணமாகிறது என்பதுதான் பெதேயின் கருத்து. இது உண்மையாயிருக்கலாமென்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். சூரியனிடமிருக்கும் எல்லா நீரகமும் ஹீலியமாக மாறுவதற்கு இன்னும் சுமார் ஆயிரம் கோடி வருஷங்கள் ஆகுமென்றும், பிறகு சூரியன் ஆற்றலையிழந்து சிதறி விடுமென்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

எல்லாக் கிரகங்களைக் காட்டிலும் சந்திரன் மிகச் சிறியதாயிருந்தாலும் அது பூமிக்கு மிகச் சமீபத்திலிருப்பதால் சூரியனுக்கடுத்த

படியாக விஞ்ஞானிக்ள் கருதிவருகிறார்கள். வெகு காலத்துக்கு முன் பூமியினிடமிருந்து ஒரு சிறு பாகம் விலகிப் பிரிந்தது என்றும் அது பிரிந்த காலத்தில் பூமியின் உஷ்ண நிலை மிகவும் உயர்ந்து இருந்திருக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது. இவ்வாறு பிரிந்த பாகமே சந்திரனாகும். இது பூமியின் கவர்ச்சிக்குட்பட்டு அதைச் சுற்றிக்கொண்டே வருகிறது. இதன் உருண்டை வடிவத்தின் ஒரு பாதியையே நாம் எப்பொழுதும் பார்த்து வருகின்றோம். சந்திரன் பூமியை ஒரே முகத்துடன் நோக்கிக் கொண்டே வட்டமிட்டுக் கொண்டு வருவதே இதற்குக் காரணமாகும். தூரதரிசினியைக் கொண்டு கவனித்தால் சந்திரன் மலைத்தொடர்கள் நிறைந்த பிரதேசம் போல் காணப்படுவது புலனாகும். அதில் அணைந்த எரிமலைகளும் தோன்றுவதை உணர்ந்தார்கள். மற்ற கிரகங்களைப்போல் சூரிய வெளிச்சத்தைப் பிரதிபலிப்பதினாலேயே சந்திரனும் பிரகாசிக்கிறது. சந்திரனிடமிருந்து வரும் ஒளியையும், பலவிதப் பொருள்களின் மீது பிரதிபலித்து வரும் ஒளியையும், ஆராய்ந்து சந்திரனது ஒளி எரிமலைச் சாம்பல மீதினின்று பிரதிபலித்து வருகிற சூரிய வெளிச்சத்தைப் போல் இருக்கிறது என்று கண்டார்கள். சந்திரனுடைய பரப்பில் சாம்பல் மிகுந்திருந்தால சூரியனிடமிருந்து சந்திரன் அடையும் வெப்பம் அதனுள் பரவாமல் அதன் வெளிப் பரப்பின் மீதே தங்கிவிடும். சந்திர கிரகணம் ஏற்படுவதற்கு முன்னும் ஏற்பட்ட பின்னும் அதன் பரப்பில் உண்டாகும் வெப்ப நிலையின் மாறுதலை அளந்தார்கள். கிரகணம் பிடித்து சிறிது நேரத்திற்குள் சுமார் முந்நூற்று நாற்பத்தாறு பாரன்ஹீட் பாகைகள் சூடு குறைவதைக் கண்டார்கள். எனவே அணைந்த எரிமலைகளின் சாம்பல் அதில் மிகுந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. நிற்க, சந்திரனிடம் பவனம், நீர்நிலைகள், மழை, பனி முதலியன இல்லையென்று அறிந்தாகள். ஏரிகள், ஆறுகள் போன்ற நீர்நிலைகள் இருக்குமானால் அவற்றிலிருந்து பிரதி லித்து வரும் ஒளியின் தன்மையை நாமறிவோமாதலால் அவை ஒன்றும் இல்லை என்று தீர்மானித்தார்கள். எனவே அதில் தாவரங்கள், பிராணிகள் முதலியன இருக்கமுடியாது என்று ஊகிக்கலாம். கடைசியாக, சந்திரன் பூமியைச்சுற்றி வருவதனால் பூமியின் இயக்கத்தில் ஏற்படக்கூடும் மாறுதல் ஒன்றைக் கவனிப்போம். பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே பாஸ்பரம் உள்ள கவர்ச்சிச் சக்தியின் விளைவாக, பூமியின் மீதுள்ள கடல்நீர் சந்திரனால் கவரப்படுகிறது. இதன் பொருட்டு நாளடைவில் பூமி தன்னைத் தானே சுற்றிவரும் வேகம் குறைந்து, அதனால் பூமி ஒருமுறை தன்னைத்தானே சுற்றி வரும் காலம் நீடித்துக்கொண்டே வரும் என்றும் கருதினார்கள். முடிவில் சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றுவதற்கான காலமும் பூமி தன்னைத்தானே சுற்றுவதற்கான காலமும் ஒன்றாகி விடுமென்றும், அப்பொழுது பூமியின் ஒரு பாதியிலிருப்பவர்களுக்கு மட்டும் இரவில் எப்பொழுதும் சந்திரன் தோன்றுமென்றும், மற்றொரு பாதியிலுள்ளவர்களுக்கு சந்திரன் ஒருபொழுதும் தோன்றாதென்றும் கருதுகிறார்கள். இது நிகழ்வதற்குக் கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகுமென்று கூறப்படுகிறது.

THE DHANALAKSHMI BANK LTD. KUMBAKONAM.

தனலெக்ஷ்மி பாங்கு
லிமிடெட்,
கும்பகோணம்.

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

டவுன் எல்லைக்குள் பாங்கால் அங்கீகரிக்கப்படும் ஸ்தாவர சொத்து முதல் ஈட்டின் பேரில் கடன் வசதி அளிக்கப்படும்.

A. L. பாலகிருஷ்ணையர்,
மானேஜிங் டைரெக்டர்.

புதிய புத்தகங்கள்

விமர்சனம்

தமிழன் இதயம்

[பிரசுரித்தவர்கள்: தமிழ்ப்பண்ணை, பள்ளத்தூர், தேவக்கோட்டை. விலை ரூ. 2-4-0]

நாமக்கல் தேசியக்கவி, வெ. ராமலிங்கம் பிள்ளையவர்கள் பாடிய "தமிழன் இதயம்" என்னும் கவிதைத்திரட்டு நூலைத் தமிழ்ப்பண்ணையாளர்கள், தமிழ்ப் ண்ணை மலர் 1 ஆகக காரைககுடி சக்தி பிரஸ் லிமிடெட்டில் அச்சியற்றுவித்து வெளியிட்டுள்ளார்கள். யாம் இதனை முற்றும் படித்து மிக்க மகிழ்ச்சியுற்றோம். தமிழ் மக்கள் அனைவரும் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

திரு. தேசிக விநாயகம் பிள்ளையவர்களும் திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் தமிழ்ப்பண்ணையாளர்களும் இந்நூலின் மேன்மையையும் இதனைப்பாடிய திரு. ராமலிங்கம் பிள்ளை அவர்களின் சீர்மையையும் நன்கெடுத்துப்புகழ்ந்திருக்கிறார்கள், யாம் அவர்கள் எடுத்துக்காட்டியவற்றைவிட அதிகம் காட்ட விருப்பதென்ன?

இந்தப் பஞ்சகாலத்திலே இந்நூலை இவ்வளவு நல்ல காகிதத்திலே இவ்வளவு அழகாக அச்சியற்றுவித்து வெளியிட்டுத் தமிழ்மக்களுக்கு உதவிய தமிழ்ப்பண்ணையாளர்களை பெரிதும் பாராட்டுகின்றோம். இப்பதிப்பில் சிலசில பிழைகள் காணப்படுகின்றன. இந்நூல் அடுத்து அடுத்துப்பல பதிப்புக்கள் செய்யப்பெறுந்தகுதிவாய்ந்திருப்பதால் இனி இயற்றுவிக்கும் பதிப்பிலே அப்பிழைகளை நீக்கிப் பதிப்பிப்பார்களென்று நம்புகின்றோம்.

பி. ஸ்ரீ.

ராஜா பர்த்ருஹரி [விலை அணா 12

M. S. B. S. சபாவைச்சேர்ந்த T. K. S. சகோதரர்களால் வெளியிடப்பட்ட இந்நாடகம் திரு T. K. முத்துசாமியைக் கொண்டு கதை வசனமும், திரு. மதுர பாஸ்கரதாஸ் அவர்களைக்கொண்டு பாடல்களும் இயற்றப்பட்டு, சிறப்புமிகப் பொலிகின்றது. அனேக முறை வெற்றிகரமாக நாடகமேடையில் நடிக்கப்பட்டு, வாசகர்களின் விருப்பத்திற்கிணங்கி இப்பொழுது புத்தகவடிவில வெளிவந்திருககிறது. இந்த விஷயமாக வடமொழியில் இயற்றப்பட்டுள்ள "பர்த்ருஹரி நிர்வேதம்" என்னும் நாடகத்தையும் ஆசிரியர் அடுத்தபதிப்பில் பயன் படுத்திககொள்ள முயலுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

கே. வி.

Congress Rseponsibility for the Disturbances

இந்தியசர்க்காரால் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்ட இச்சிறுநூல், சர்க்காரின் வாதத்திறமையை நன்கு புலப்படுத்துகிறது. பலாத்காரம் ஏற்படும் என்று தெரிந்தும் காந்திஜீ அதைத்தடுக்கத் தயாராக இல்லாமலிருந்ததே அவரைக்குற்றவாளி என்று ருசிப்பிக்கிறது என்று வாதாடும் சர்க்கார் காரியதரிசி ஸ்ரீ டாடன்ஹாம், பிரிட்டிஷ் நீதிமுறைக்கு நேர்மாறாக, நம்மை, குற்றம்சாட்டப்பட்டவரின் சமாதானத்தை கேட்காமலேயே, தீர்ப்புக் கூறும்படி தூண்டுகிறார். காரியகாரண சம்பந்தங்களை அறிய விரும்பும் ஒவ்வொருநடுநிலைமையாளியும், இப்புத்தகம் எதிரியின் வாக்குமூலத்தை எதிர்நோக்கி நிற்கச்செய்கிறது.

கே. வி.

புதுத் தொடர் கதை

வழிகாட்டி

'ஹரிணி'

•

சரத்சந்திர சட்டர்ஜி எழுதிய
நாவலின் மொழிபெயர்ப்பு

பதிதபாவன பாபு பணக்காரனல்ல. ஆனால் ஏழையுமல்ல. சாதாரண ஸூஸ்திதியுள்ளவன். எப்பொழுதும் நடுத்தரமானவர்களுக்குத்தான் கஷ்டம். அதிலும் அக்குடும்பத்தின் எஜமானன் காச நோயினால் பீடிக்கப்பட்டு மரணமடைய நேரிட்டால் கேட்கவே வேண்டியதில்லை. தன்னுடன் கூடத் தன்னைச் சேர்ந்தவர்களையும், இருந்தும் இறந்தவர்களாகவே செய்துவிட்டுப் போய்விடுகிறார்கள். இவ்விதமே பதிதபாவன பாபுவும் சுமார் ஒன்றரை வருஷம் கஷ்டப்பட்டான். பிறகு திடீரென்று ஒரு நாள் நடுநிசியில் உயிரையும் விட்டான்.

முதல் நாள் இரவு தன் கணவனருகில் வந்து உட்கார்ந்த சுலோசனா பிறகு அவ்விடத்தைவிட்டு நகரவேயில்லை. கணவன் எப்படி ஒரு வார்த்தைகூட சொல்லாமல் உயிரை விட்டானோ, அவ்விதமே அவளும் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அலறி அழுது ஊரை ஒன்றாகக் கூட்டவில்லை. ஆனால் அவள் மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அவளுக்குப் 'பந்துக்கள்' என்று சொல்லக்கூடியவர்கள் ஒருவருமே கிடையாது. அவளுடைய ஒரே பெண் ஹேமநளினி அதே அறையில் ஒரு மூலையில் கவலையற்றுத் தூங்கிக்கொண்டிருந்தாள். சுலோசனா அவளையும் எழுப்பவில்லை.

வேலைக்காரர்களும் வீட்டிலில்லை. கிராமத்திலுள்ளவர்கள் தினமும் வந்து அலுத்துவிட்டார்கள். தவிர, அன்று மாலையிலிருந்து ஒரே அடை மழை. வெளியில் 'ஹோ' வென்ற சப்தத்துடன் மழை கொட்டிக் கொண்டிருந்தது. உள்ளே சுலோசனா உயிரற்ற தன் கணவனின் சரீரத்தினருகில் கற்சிலைபோல் உட்கார்ந்துகொண்டிருந்தாள். வானம் குமுறியது. அவள் ஹ்ருதயத்திலும் துக்கம் குமுறிக் கொண்டிருந்தது.

பொழுது விடிந்தது. சமாசாரம் தெரிந்ததும், கிராமத்து ஜனங்கள் வந்து எல்லாக் காரியங்களையும் செய்து முடித்தனர். கதறி அழும் ஹேமநளினியின் குரலைக் கேட்ட சுலோசனாவும் ஓவென்று அலறி அழுதுவிட்டாள். இரவு முழுவதும் அவள் மனதில் குமுறிக்கொண்டிருந்த துக்கம் பொங்கி எழுந்தது.

சுலோசனாவுக்கு மிகுதியாயிருந்த சொத்து ஒரு மாந்தோப்புத்தான். அதையும் கிராமத்தவர்களின் உதவியினால் விற்று கணவனுடைய காரியங்களை முடித்தாள். பிறகு வீட்டில் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் மனம் சூன்யமாயிருந்தது.

"இனிமேல் என்னம்மா செய்வது" என்று கேட்டாள் ஹேமா. "ஏனம்மா பயப்படுகிறாய்? பகவான் இருக்கிறார்!" என்றாள் சுலோசனா. ஏதோ கொஞ்சம் மிகுதியிருந்ததைக் கொண்டு ஒரு மாதம் சாப்பிட்டனர். பிறகு ஒருவழியும் புரியவில்லை.

ஒருநாள் விடியற்காலம். இன்னமும் இருள் நீங்கவில்லை. வீட்டைப் பூட்டிக்கொண்டு ஹேமாவைக் கையில் பிடித்தவண்ணம் வாசலில் இறங்கினாள்.

"எங்கேயம்மா போகிறாய்?"

"கல்கத்தாவுக்கு. உன் சகோதரன் அங்கேயிருக்கிறான்"

"யார்? அண்ணாவா? அது யாரம்மா? நீ எப்பொழுதுமே அவனைப்பற்றிச் சொன்னதில்லையே."

தாயார் திடுக்கிட்டாள். பிறகு மெதுவாக, "ஹேமா! இதுவரை நான் அவனை மறந்து விட்டேன்" என்றாள். ஆனால் ஹேமா மிகவும் புத்திசாலிப்பெண். அவள் அவ்விடத்திலேயே நின்று விட்டாள். பிறகு பிடிவாதமாக... "இல்லை. முடியாது. இன்னொருவர் வீட்டுக்கு நான் வரமாட்டேன். நம் வீட்டிலேயே யிருந்து உழைத்து, வேலை செய்து சாப்பிடலாம். அம்மா! நான் சொல்வதைக்கேள்" என்று கெஞ்சினாள்.

"நிற்காதே ஹேமா! வெய்யில் அதிகமாகி விடும்" என்று அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தாள்.

ஹேமா தேம்பித் தேம்பி அழுதாள்.

"ஹேமா! நீ இப்படி அழுவது நன்றாயில்லை. நீ படித்தவள்; உனக்குத் தெரியாதா? வீட்டிலேயே யிருந்து எப்படியாவது காலம் தள்ள முடியுமென்பது எனக்குக் கூடத்தான் தெரியும். ஆனால் உனக்குக் கல்யாணம் செய்யவேண்டுமே?"

"கல்யாணம் செய்யவேண்டாமே"

ஐயோ! அசடே! ஜாதி ஜனங்கள் பரிகசிக்க மாட்டார்களா? ஜாதியிலேயிருந்து தள்ளி விடுவார்களே!"

"ஏனம்மா! ஜாதி என்றால் என்ன? அது என்ன செய்யும்? நாம் இருவரும் கூலி வேலை செய்து சாப்பிடப்போகிறோம். நமக்கு ஜாதி இருந்தால் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன? உலகத்தில் கல்யாணம் செய்து கொள்ளாமல் எவ்வளவோ பெயர்கள் இருக்கிறார்களே! அவர்களுக்கு ஜாதி போய்விடவில்லையே? நாமும் அப்படியிருக்கலாமே."

பதிமூன்று வயதுக் குழந்தையின் உலக அறிவற்ற இந்த வார்த்தையைக் கேட்டு இவ்வளவு துக்கத்திலும்கூடச் சுலோசனாவுக்குச் சிரிப்பு வந்தது.

"ஹேமா! நீ சிறு குழந்தை. உனக்குத் தெரியாது ஜாதி போய்விட்டால் ஒருவருடைய வீட்டிலும் பெருக்கக்கூடக் கூப்பிட மாட்டார்கள். அப்போது நாம் கிராமத்தை விட்டு ஓடத்தான் வேண்டும்."

ஹேமா அதற்குமேல் பேசவேயில்லை. அவளுடைய மனதில் துக்க சமயங்கள் திடீரென்று நினைவிற்கு எழுந்தன. மனதை அடக்கிக்கொண்டு நடந்தாள்.

ஸ்ரீ ராமபுரத்தின் ஸ்டேஷனுக்குச் செல்லும் வழியில் சித்தேச்வரியின் கோவில் இருந்தது. அங்கு தங்கி இருவரும் தேவியை தரிசித்தனர்.

பிறகு கோவிலுக்கு எதிரேயுள்ள ஒரு சிறிய சந்தின் வழியாக வேகமாக நடந்தாள். ஸ்டேஷனுக்குச் செல்லுவதற்கு குறுக்கு வழி அதுதான்.

2

குணேந்திர பாபு ஒரு வக்கீல். கல்கத்தாவிலுள்ள அவனுடைய பெரிய பங்களா ஏறக்குறைய காலி வீடு போலவே காணப்பட்டது. அவனைத் தவிர அவ்வீட்டில் வேறொருவரும் இல்லை. மூன்றாவது மாடியிலுள்ள ஒரு அறையில் அவன் படிப்பான். மற்ற எல்லா இடங்களும் காலிதான். கீழேயுள்ள சில அறைகளில் சமையற்காரனும், இரண்டு வேலைக்காரர்களும், ஒரு காவற்காரனும் வசித்து வந்தனர்.

குணேந்திர பாபுவினுடைய தந்தை மிக்க பணக்காரர். கோடீச்வரர் என்றே சொல்லலாம். இரும்பு வியாபாரத்தில் அளவற்ற பணம் சேர்த்துவிட்டார். அவருடைய ஒரே பிள்ளைக்கு ஆயுள் பூராவும் ராஜபோகமாகச் சாப்பிட்டு, சுகமாகக் காலந்தள்ளக்கூடிய அவ்வளவு சொத்து இருந்தது. ஆனால் குணேந்திரன் பொழுது போக்குக்காக வக்கீல் தொழில் செய்துவந்தான்.

காலை பத்து மணி இருக்கும். குணி பாபு தன் படிப்பறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான். வேலைக்காரன் வந்து, "குளிக்க வென்னீர் தயாராக இருக்கிறது" என்றான். பிறகு சிறிது நேரம் சென்று மறுபடியும் ஒரு வேலைக்காரன் வந்து "பாபுஜி!" என்றதும் 'வருகிறேன் போ' என்று திரும்பிப்பாராமலே கூறினான் குணி பாபு.

"இல்லை, பாபுஜி! இரண்டு ஸ்திரீகள் உங்களைக் காண வந்திருக்கின்றனர்."

"யார்? ஸ்திரீகளா? என்னைப் பார்க்கவா?" என்றான் ஆச்சரியத்துடன்.

"ஆமாம், உங்களைத்தான். உங்களுடைய ....இதற்குள் சுலோசனா அங்கு வந்துவிட்டாள். அவளைக் கண்டதும் குணேந்திரன் பிரமித்து நின்றான்.

சுலோசனா வெகு கம்பீரத்துடன் வேலைக்காரனைப் பார்த்து, "நீ போய் உன் வேலையைப் பார்" என்றதும் அவன் கீழே போய்விட்டான்.

அவன் சென்ற பிறகு சுலோசனா அவனருகில் சென்று, "குணீ! உங்கப்பா எங்கேயிருக்கிறார்?" என்று கேட்டாள். குணேந்திரன் ஒன்றும் தெரியாமல் விழித்தான். அவனுக்கு ஸ்திரீகளிடம் அதிகப் பழக்கம் கிடையாது.

"ஆமாம், இப்பொழுது என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியாதுதான். ஏறக்குறையப் பன்னிரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. நாங்கள் இந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருக்கவில்லையா? உனக்குப்பூணூல் போட்ட வருஷம்தான் நாங்கள் எங்கள் கிராமத்துக்குப் போனோம். அப்பா எங்கே? கடைக்குப் போயிருக்கிறாரா?" என்றாள்.

"அவர் இறந்து மூன்று வருஷமாகிறதே."

"ஐயோ! இறந்துவிட்டாரா? அத்தை எங்கே?"

"அவளும் அவருக்கு முன்னாலேயே போய்விட்டாள்."

"ஹூம்! நான்தான் பாவி. எல்லாரும் போய்விட்டார்கள். உங்கம்மா இறக்கும்போது உனக்கு வயது ஏழு. அதற்குப் பிறகு நானிங்கிருக்கும் வரை நீ என்னிடம்தான் வளர்ந்தாய். என்ன குணீ! உன் சித்தியை மறந்துவிட்டாயா?"

உடனே குணேந்திரன் அவளுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, "சித்தி! நீங்களா?" என்றான் தாங்க முடியாத ஆனந்தத்துடன்.

"ஆமாம், குழந்தாய்! உன்னுடைய அதே சித்திதான்" என்றாள் மிதமீறிய வாத்ஸல்யத்துடன்.

உடனே குணி ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு, அதில் சித்தியை உட்காரும்படி கூறினான்.

"அப்பா நானே உன்னுடைய அடைக்கலத்தைத்தேடி வந்துவிட்டேன். உட்காராமல் என்ன? அதிருக்கட்டும், உனக்குக் கலியாணமாகிவிட்டதா?"

"அதற்குள்ளாகவா கலியாணம்?" என்று சிரித்தான்.

"அப்படியானால் இங்கே யாரும் பெண்களே இல்லையா?"

"இல்லை."

"யார் சமையல் செய்கிறார்கள்?"

"சமையற்காரன்தான்."

சமையற்காரனா? அவன் நன்றாகச் சமையல் செய்வானா? இனிமேல் அவன் வேண்டாம். நானே செய்துவிடுகிறேன். குணீ! இன்னும் ஒருவார்த்தை. எங்களுக்கு இருந்த கொஞ்சம் சொத்தும், ஹேமாவினுடைய தகப்பனார் வியாதியாகப்படுத்திருந்த போது வைத்தியத்திற்காகச் செலவழிந்துவிட்டது. கடைசியில் அவரும் போய்விட்டார். ஒருமாதமாகிறது. உன்னை நம்பித்தான் வந்துவிட்டேன். எனக்கு வேறே திக்குக் கிடையாது. நீதான் சாப்பாட்டுக்கு வழிசெய்ய வேண்டும்" எனக்கூறி கண்ணீர் விட்டாள். உடனே குணி பாபு துக்கம் தாங்காமல் "அம்மா! நீ இப்படிச்சொல்லலாமா? தாயாருக்கு சாப்பாடு போடாத பிள்ளையும் உண்டா? இது கூடவா நான் செய்யமாட்டேன்? என்று கூறினான்.

"இல்லை குழந்தாய்! அப்படி வித்யாசமாக நினைத்திருந்தால் இவ்வளவு தூரம் வந்திருப்பேனா? பன்னிரெண்டுவருஷங்களுக்குப் பிறகு உன்னை நினைத்துக்கொண்டு சங்கோசமில்லாமல் வந்ததைப் பார்த்து நீயே தெரிந்துகொள்ளலாம். ஆனால் ஹேமாவைப் பற்றித்தான் கவலை. என்னைக்காட்டிலும் மிக்க அனாதை. கல்யாண வயதும் வந்துவிட்டது. உன் தங்கைபோல் பாவித்து ஏதாவது நீதான் ஏற்பாடு செய்யவேணும்"

"என் அவளைக் கூட்டி வரவில்லை?"

"வந்திருக்கிறாள். ஆனால் அவள் மிகவும் சங்கோசமுள்ளவள். ஆத்மகௌரவமுள்ளவள். நாம் பேசிக்கொள்வதை அவள் கேட்கவேண்டாமென்று, கீழே விட்டுவிட்டு வந்தேன்"

உடனே குணிபாபு பரபரப்புடன் எழுந்து "நந்தா! கீழே ஹேமா இருக்கிறாள். சிக்கிரம் மேலேகூட்டிக்கொண்டுவா" என்று கத்தினான்

"அவளைக் கல்யாணம் செய்து கொடுப்பதில் செலவழியும் பணத்திற்காக ஒரு........."

குணேந்திரன் தடுத்து, "சரிதானம்மா, இப்படியெல்லாம் சொன்னால் நான் போய்விடுவேன். பிறகு நீங்கள் உங்கள் இஷ்டப்படி பேசிக்கொண்டிருக்கலாம். இதென்ன வார்த்தை. தங்கைக்குக் கல்யாணம் செய்யவேண்டுமென்றால், தாயார் பிள்ளையை இப்படி வேண்டிக்கொள்ள வேணுமா? நீ மாத்திரம் என் தாயார் இறந்த பிறகு என்னைக் கஷ்டப்பட்டு வளர்க்க வில்லையா? அதற்காக நானும்கூட சொல்ல ஆரம்பித்து விடுவேன். அப்பொழுது உனக்கும் வெட்கமாகிவிடும். இருவரும் பேசாமலிருப்பது நல்லது" என்றான்.

"சரி. போகட்டும். அதோ ஹேமா வந்து விட்டாள். இனி பேசக்கூடாது. என் பெண்ணென்று கூறவில்லை அவள் என்னமோ அழகிதான். அவளப்பா அவளை நன்றாகப் படிக்க வைத்திருக்கிறார். அவள் மிகவும் கெட்டிக்காரி. நீயே பார்" என்று பெருமையடித்துக் கொண்டாள்.

ஹேமா உள்ளே நுழைந்ததும் குணிபாபுவை நமஸ்கரித்துத் தலைகுனிந்து நின்றாள். அவள் முகம் மிகவும் சோர்வடைந்து காணப்பட்டதைக்கண்ட குணேந்திரன் "ஹேமா! வா! கீழேபோய் சாப்பிடலாம்" என்றான். போகும்போது சுலோசனா குணேந்திரன் பூணூல் இல்லாமலிருப்பதைக் கவனித்தாள். உடனே திடுக்கிட்டு "குணி, பூணூலைக்காணோமே, ஏன்?" என்றாள்.

"நாங்கள் ப்ரம்ம சமாஜிகள்."

"அப்படியா? சீ! இது அழகாயில்லை. நிரம்பத் தப்பு. சரி. போனது போகட்டும். பிராயச்சித்தம் செய்துகொண்டு பூணூலைப் போட்டுக்கொள்ளலாம்."

"நான் செய்யவில்லையம்மா! இது அப்பாவே செய்துவிட்டார்; ஆகையால் பிராயச்சித்தம் செய்யவேண்டியதில்லை. அப்பாவே சம்மதப்பட்டு செய்தபடியால் பிராயச்சித்தம் அவசியமில்லை என்றே நினைக்கிறேன். அந்த மதமும் கெடுதலானதல்ல."

சுலோசனா அப்படியே உட்கார்ந்து விட்டாள். பிறகு மெதுவாக...'ஜனங்களுக்கு ஏனோ இந்த மாதிரியான கோணல்கள் தோன்றுகின்றன." என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

"அதிருக்கட்டும். அதைப்பற்றி சாவகாசமாகப்பேசலாம். சாப்பிடலாம். வா. நாழிகையாகிறது." என்று சிரித்தான் குணேந்திரன்.

3

உலகத்தில் ஸ்ரீதேவியைப் பூஜிப்பவர்கள்தான் அதிகம். நூற்றில் ஒருவர்தான் ஸரஸ்வதி தேவியை இடைவிடாமல் பூஜித்து வருகின்றனர். அநேகமாக யாவரும் தங்கள் வேலை முடிந்ததும் ஸ்ரீதேவியைத் தேடிச் செல்லும் வழியிலேயே—ஒரு வழிப்போக்கன் தான் உணவு சமைத்த மண் பாத்திரத்தை மரத்தடியிலேயே எறிந்துவிட்டுச் செல்வது போல்—அவளை விட்டுவிட்டு, திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்று விடுகின்றனர்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கை லக்ஷியம், பணம் தேடுவதும், உண்டு உறங்கி ஆனந்தமாகக் காலங்கழிப்பதும்தான் என்பது பலர் கொள்கை. பிற்காலத்தில் ஒரு குமாஸ்தா அல்லது வக்கீல், டாக்டர், அட்டெண்டர் முதலான வேலைகளை அடைவதற்குத்தான் படிப்பு என்று எண்ணுகிறார்கள். அதற்காக வேதான் அவர்கள் சரித்திரத்தையும், கணக்கையும் மண்டையை உடைத்துக்கொண்டு குருட்டுப்பாடம் செய்கிறார்கள். வேலையில் பிரவேசித்தவுடன் 'அப்பாடா சனி விட்டது என்று புத்தகங்களை மூலையில் எறிந்துவிடுகின்றனர். இம் மாதிரியான மனோபாவமுள்ள ஆண் மக்கள், "பெண் மக்களுக்குப் படிப்பு எதற்கு? படித்து என்ன செய்யப்போகிறார்கள்? பணம் சம்பாதிக்கப் போகிறார்களா!" என்று கேட்பது ஆச்சரியமான விஷயமல்ல.

குணேந்திரபாபு அவர்களுடைய எண்ணிக்கையில் சேர்ந்தவனல்ல. படித்து அடைந்த ஆத்ம ஞானத்தில் அவன் ஆனந்தத்தைக் கண்டான். முதலில் எப்படி ஸரஸ்வதியை ஆராதித்து வந்தானோ, அவ்விதமே வக்கிலான பிறகும் பக்தியுடன் பூஜித்து ஞானத்தையும், தனத்தையும், சம்பாதித்தான். அவனுடைய படிப்பறை புத்தகங்களினால் நிரம்பியிருந்தது. அதே அறையில்தான் ஹேமநளினி இருக்க விரும்பினாள். இப்பொழுது குணிபாபு தன்னுடைய படுக்கையறையிலேயே படித்து வந்தான். அவனுக்குத் தன்னுடைய சாமான்களை ஒழுங்காக வைத்துக்கொள்ளும் வழக்கம் கிடையாது. புத்தகங்களை நினைத்த இடங்

களில் போட்டுவிட்டுத் தேடுவான். ஹேமா வந்து இரண்டு தினங்களில் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டாள்.

ஒரு நாள் குணேந்திரன் ஹேமாவுக்காகப் புடவைகளும், நகைகளும் வாங்கி வந்தான். அதைக்கண்ட சுலோசனுவினுடைய மனம் பலவித எண்ணங்களினுல் சூழப்பட்டது. "அப்பா குணீ! இந்தத் தைமாதத்தில் ஹேமாவுக்குக் கல்யாணம் செய்துவிட வேண்டும். மிகவும் பெரியவளாகிவிட்டாள். இல்லையா?" என்ருள்.

அம்மா நீ ஏன் கவலைப்படுகிருய்? நல்ல பையன் கிடைக்கட்டும். செய்து விடலாம்." என்று கூறிய வண்ணம் சென்று விட்டான்.

அச்சமயம் அவன் முகத்தில் காணப்பட்ட சோகத்தைக் கண்ட சுலோசனு, "இல்லை இது சரியல்ல. சீக்கிரமே கல்யாணத்தை முடித்துவிடவேண்டும்." என்று தனக்குள் முணுமுணுத்தாள்.

அன்று மாலை ஹேமா புதிய ஆடையணிந்து, அவசரமாக குணியின் அறையில் நுழைந்தாள்.

குணேந்திரன் ஜன்னலருகில் நின்றபடி வெறு வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனம் சஞ்சலமடைந்து காணப்பட்டது.

"என்ன! இன்னுமா தயாராகவில்லை?" என்ருள் ஹேமா.

அவளைக் கண்கொட்டாமல் பார்த்தான் குணேந்திரன்.

ஹேமா அவசரமாகப் பெட்டியைத்திறந்து, கைநிறைய ரூபாய்களேயும், சில்லரைகளேயும், எடுத்துப் பையில் திணித்தவண்ணம் "எழுந்திரு அண்ணு! நேரமாகிவிட்டது. கடையை மூடிவிடுவார்கள்." என்று கெஞ்சினுள்.

"எங்கேயம்மா போகவேணும்?"

"சரிதான். வண்டி தயாராகி ஒரு மணி நேரமாகிறது. எங்கே என்று கேட்கிருய்?"

"அப்படியானுல் எனக்கெப்படித் தெரியும்? வண்டிக்காரனுக்குத் தெரிந்திருக்கலாம்"

"சீக்கிரம் புறப்படேன்; கடைக்குப் போகவேணும்"

"எந்தக்கடை?"

"புஸ்தகக்கடை. நந்தன் சொல்லவில்லையா? முட்டாள், அவன் எப்பொழுதும் அப்படித் தான் என்ருள்."

அன்றிரவு எட்டுமணிக்கு புஸ்தகங்களுடன் இருவரும் இறங்கி உள்ளே வந்தனர். சுலோசனு அவைகளைப் பார்த்து "இவ்வளவு புத்தகம் எதற்கு?" என்ருள்.

"எனக்கென்ன தெரியும்? இதெல்லாம் என்னுடையவையல்ல. ஹேமா வாங்கியிருக்கிருள். உபயோகமற்றவை. வீண் செலவு தான்" என்ருன் குணேந்திரன்,

"நீ ஏன் பணம் கொடுத்தாய்?"

"நானு கொடுத்தேன்? சாவி அவள் கையில். நான் கூடப்போனேனே தவிர எல்லாம் அவள் இஷ்டம்தான்."

ஹேமா புத்தகங்களுடன் மேலே போய் விட்டாள்.

"அப்பா! குணீ! இவ்வளவு தலைமேல் ஏற்றி வைத்துக்கொண்டால் பிறகு நிரம்ப கஷ்டம். எங்கே போகவேணுமோ? யாரிடம் அடிபட வேணுமோ? யார் கண்டார்?" என்று சுலோசனு சொல்லி முடிப்பதற்குள் குணி மறைந்துவிட்டான்.

ஹேமா தன் புத்தகங்களுக்கு 'நம்பர்' ஒட்டிக்கொண்டிருந்தாள். அவளைச் சற்று நேரம் உற்றுப் பார்த்தான் குணி.

"ஹேமா! உன்னைத் தலையில் ஏற்றிக் கொண்டிருப்பதாக அம்மா கூறுகிருள்" என்ருன்.

"ஏன்?"

"எங்கே போய் எப்படிக் கஷ்டப்பட வேணுமோ..........." வார்த்தை முடிவதற்குள்ளேயே "ஏழைக்குக் கொடுத்தால் மறு நாளே ஓடி வந்துவிடுவேன்" என்று கூச்ச விட்டாள்.

"நிரம்ப சரி" என்று கூறிச் சிரித்தவண்ணம் குணி போய்விட்டான்.

(தொடரும்)

குரு தக்ஷிணை

[பூவாளூர் சுந்தரராமன்]

●

மார்கழி மாதம் விடியற்காலை; கோவிலில் பிராதக்கால பூஜையின மணியோசை கேட்கிறது. பாட்டி திண்ணையில் உட்கார்ந்து கொண்டே திருப்பள்ளி எழுச்சி பாடுகிறாள். எனக்கு அரைத் தூக்கமும் விழிப்புமாக இருக்கிறது. வாசலில் கூலிப் பெண்கள் கண்ணாடி வளையல்கள் குலுங்கச்சாணி தெளிக்கும் சப்தம். சில இடங்களில் பெண்கள் ஊர் வம்பு பேசிக்கொண்டு கோலம் போடுகிறார்கள். தெருக் கோடியில் பள்ளத்தி 'பூசணிப்பூ, அம்மா' என்று கூவுகிறாள். இவை எல்லாம் எனக்கு விட்டுவிட்டுக் காதில் கேட்கிறது. அவ்வாறு கேட்டுக்கொண்டிருப்பது என்றுமே ஏனக்கு ஒரு இன்பம். அதை வாழ்நாளில் அனுபவித்துத்தான் உணரவேண்டும். இந்த அறிதுயிலில் இருக்குப்போது எங்கிருந்தோ தம்புருவின் ஸ்வச்சமான சுருதியுடன் கலந்த இனிமையான குரலில் யாரோ பாடுவது காதில் கேட்டது நடுநடுங்கும் குளிர். கம்பளியை எடுத்துப் போர்த்துக்கொண்டு திண்ணையில் வந்து உட்கார்ந்தேன். மூன்று வீட்டிற்கு அப்பால் ஒரு பிச்சைக்காரனிடமிருந்துதான் அவ்வளவு மோகனமான இனிய கானம் வந்துகொண்டிருந்தது. ஒற்றைக் கம்பியுடன் கூடிய பழைய தம்புருதான். அதை வலது கையாலேயே பிடித்துக்கொண்டு ஆட்காட்டி விரலால் மீட்டிக்கொண்டிருந்தான். அவனுக்கு நாற்பது வயது இருக்கலாம். முகத்தில் ஒரு அமைதி வீசிற்று. நெற்றியில் அணிந்திருந்த திருநீற்றுப் பட்டைகள் அவனிடம் ஒரு சிவ மணத்தை உண்டாக்கின.

அவன் பாடின பாட்டுக்கள் எல்லாம் முற்றும் துறந்த முனிவருடையவை, ராமலிங்க ஸ்வாமிகள் தாயுமானவர் பாடல்களே அதிகம். 'இனிமேயெனக்குனருள்' என்று ஆரம்பிக்கும் தாயுமானவர் பாடலைப் பாடிக்கொண்டே என் அகத்து வாசலுக்கு வந்துவிட்டான். உற்றப் பார்த்தேன். அவன் பரம்பரைப் பிச்சைக்காரன் அல்லன் என்று நன்றாகத் தெரிந்தது. எனக்கு அவனைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆசை. அவன் என்னுடைய உள்ளத்தில் எழுந்த காதலைத் தெரிந்துகொண்டவன் போலவும், தன் உள்ளத்தில் புதைந்து மறைந்து கிடந்த எண்ணங்களை வெளியில் சொல்லிப்பெருமூச்சு ஒன்று விட விரும்புபவன் போலவும் என் கண்களுக்குத் தென்பட்டான்.

2

நான்தான் ஆரம்பித்தேன். "எந்த ஊர் உனக்கு?" என்று கேட்டேன்.

"இப்பொழுது எல்லா ஊர்களும் என்னுடையதுதான் சாமி. நேற்று மாந்துறையில் படி போட்டிருந்தது. இன்று இந்த ஊர். நாளை எந்த ஊரோ?"

"அதைப்பற்றிக் கேட்கவில்லை பால்யத்தில் எந்த ஊர் அப்பா?"

அவன் பேசவில்லை. பேச ஆசையிருந்தாலும் மனது அவனுடைய இளமையையும் அவன் வாழ்ந்த இன்பமான வாழ்க்கையையும் எண்ணியிருக்கும்.

"அதைப்பற்றி இப்போது நான் சொல்லி என்ன பிரயோஜனம்?" இதே திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் தான் இருந்தேன்; உறையூரில்தான்வீடு"

"நீ என்ன ஜாதி ஆள்? ஏன் இப்படிக் கிளம்பி விட்டாய்?"

"மேளக்கார சாதிங்க; உங்களுக்குத் தெரியுமா மலைக்கோட்டை பிடில் கந்தசாமிப் பிள்ளையை?"

"தெரியாமல் என்ன? அடடா, அவரைப் போல இனி யார் பிடில் வாசிக்கப்போகிறார்கள்? என்று உற்சாகத்துடன் சொன்னேன்

"அவரிடம் ஒருசிஷ்யன் இருந்தான். அவன் வாசிப்பைக் கேட்ட எல்லாரும் அப்பொழுதே அவனை மிகவும் மெச்சிக்கொண்டார்கள்.

"ஏன் இப்போதுகூட அவருடைய சிஷ்யன் ராஜரெத்தினம் பிள்ளை நிரம்ப நன்றாக வாசிக்கிறாரே"

"இவர் இருக்கட்டும் இவருக்கு முன்னாலே ஒருசிஷ்யப்பிள்ளை இருந்தான். அவனைப்பத்தி பலபேருக்கு ஒண்ணுமே தெரியாது"

"ஏன் இப்போது அவன் இல்லையா?"

"இல்லாமே என்ன, சாமி! வெண்ணை திரண்டு வர்ரதுக்குள்ளே தாளி உடஞ்சி போச்சான்னு சொல்லுவாங்களே; அந்தமாதிரி அவன் பெரிய வித்துவானா வர்ரதுக்குள்ளே அவனுக்குப் போதாத காலம் வந்து எல்லாத்தையும் நாசப்படுத்திட்டுதுங்க!

"என உடம்பிற்கு ஏதாவது நோய் வந்துவிட்டதா?"

"அது வந்திருந்தால்தான் தேவல்லையே; மன ஏக்கத்தாலேயே நொடிச்சிப் போயிட்டான்"

"எனக்கு விவரமாகக் கொஞ்சம் சொல்லேன், அந்தக்கதையை" என்றுகேட்டேன். அவனும் திண்ணையில் ஒருபக்கமாகத் தம்புருவை வைத்துவிட்டு, உட்கார்ந்து கொண்டு கதையை ஆரம்பித்தான்.

3

சிவப்பிரகாசம் என்று அவனுக்குப்பெயர் அவனுக்கு 'விட்டகுறை தொட்டகுறை' இருக்கும் போலக்காணப்பட்டது, என்ன வேகமாக அந்த 'வித்தையை' அவன் கற்றுக் கொண்டான் தெரியுமா? இவ்வளவிற்கும் அவனுக்கு ஒருநாளாவது கந்தசாமிப் பிள்ளை உட்காரவைத்துப்பாடம் சொன்னவரும் இல்லை. கேள்விஞானம்தான். பிறகு தானே அப்பியாசம் செயவான். விடியற்காலை மூன்றுமணிக்கு எழுந்து உட்கார்ந்து கொண்டு வாசிக்க ஆரம்பித்து விட்டால் அந்தத்தேவகானம் அமைதியான பிரபஞ்சத்தில் எதிரொலி செய்து கொண்டே இநககும். கந்தசாமிப்பிள்ளை கூடச் சிலநாட்கள் விடியற்காலை படுக்கையில் உட்கார்ந்து கொண்டு அவனுடைய சுருதி சுததமான சங்கீதத்தைக்கேட்டுக் கொண்டே மெய்ம்மறந்து இருப்பார். வெறும் லோகங்களினால் செய்த நரம்புகளும், கட்டையால் செய்த வில்லும் அந்தச் சப்த ஜாலங்களை உண்டாக்க முடியுமா? என்று கேட்டு விட்டு ஒருநிமிஷம் நிறுத்தினான். அவனுடைய கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. ஒரு பெருமூச்சுவிட்டுக் கொண்டான். என் மனம் இவன் ஒருகால் அவனுடைய தம்பியாக அல்லது நெருங்கிய உறவினனாக இருக்கவேண்டும் என்று நினைத்தது. மறுபடியும் அவன் ஆரம்பித்தான்.

"தைப் பூசத்தன்று மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் அவனுடைய வித்தை



குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1. பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்:- பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

'அரங்கேத்துபடி நடக்க ஏற்பாடாகி இருந்தது. அந்தச் சமயத்தில் கந்தசாமிப் பிள்ளையினிடத்தில் மலையாள தேசத்திலிருந்து ஒரு பெண் வந்து பிடில் சிக்ஷை பெற்றுக் கொண்டிருந்தாள். அவள் பெயர் நிர்மலாதேவி. அப்பொழுது அவளுக்கு வயது பதினெட்டுக்கு மேலேயே இருக்கும். ஒவ்வொரு அங்கத்திலும் அழகும் மென்மையும் பூத்துக் காய்த்துக் குலுங்கின. கந்தசாமிப் பிள்ளை மிகவும் சிரமப்பட்டு அவளுக்குச் சிரத்தையாகக் கற்றுக்கொடுத்தார். அவர் அவ்வளவு சிரத்தையாகக் கற்றுக்கொடுத்தது அப்பொழுது ஒருவருக்கும் விபரீதமாகப்படவில்லை.''

"ஒரு வேளை அவளையே கல்யாணஞ்செய்துகொண்டு விடலாம் என்று நினைத்தாரோ?'' என்று நான் மிகவும் புத்திசாலிபோல் கேட்டேன்.

"அப்படித்தான் இருக்கவேண்டும். அது சிவப்பிரகாசத்திற்குத் தெரியாது. ஆனால் சிவப்பிரகாசமும் நிர்மலாவும் தங்களுக்குள் மிகவும் நெருங்கிப் பழகினார்கள். தைப்பூசத்தன்று அல்லவா அரங்கேற்றுபடி என்று சொன்னேன். அன்று விடியற்காலை மணி இரண்டிருக்கும். பிரபஞ்சமே அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. பக்ஷி ஜாலங்கள்கூடக் கூக்குரலிடவில்லை. காற்றில் அசையும் மரங்களின் 'ஹோ' என்ற பேரிரைச்சல்தான் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அந்த அமைதியான நேரத்தில் அவன் பிடிலை எடுத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்துவிட்டான். எவ்வளவோ அழகாக வாசித்தான். அந்த வேளையில் அவனுடைய மனோதர்மம் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டே இருந்தது. மெதுவாக அவனுக்குப் பக்கத்தில் நிர்மலா வந்து நின்றாள். அவனுடைய வாசிப்பில் மனதைப் பறிகொடுத்துக் கொண்டே அவனுடைய மடியில் உட்கார்ந்துவிட்டாள். அவளுடைய அணைப்பில் அவன் இன்னும் நன்றாகத்தான் வாசித்திருப்பான். ஆனால் திடீரென்று அடுத்த நிமிஷம் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

"என்ன, கந்தசாமிப் பிள்ளை பார்த்துவிட்டாரா?'' என்றேன்.

"ஆமாம், அவரும் ஒரு மணி நேரமாகக் கேட்டுக் கொண்டிருந்தவர் சிவப்ரகாசம் வர வர ராகச்சாயையை மாற்றி ஏதோ மயத்தில் ஆழ்த்திக்கொண்டே போகிறான் என்று கண்டுகொண்டார். அடுத்த நிமிஷம் அவனைத் திருத்த வந்தவர், 'இராவணன் வெள்ளி மலையை அசைத்த போது பார்வதி பரமசிவத்தைக் கட்டிக்கொண்டது போல்' இவள் சிவப்பிரகாசத்தைக் கட்டிக்கொண்டு அவனுடைய சங்கீதத்தில் லயித்துப் போயிருந்ததைப் பார்த்தார். அவருக்கு விழி பிதுங்கி வெளியில் தெறித்து விடும்போலிருந்தது. "அடே பாபி, குரு தக்ஷிணை இதுதானா? வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது போல் என் மனம் நோகச் செய்துவிட்டாயே? நீ நன்றாக இருப்பாயா?'' என்று அவனைக் காலால் உதைத்தார்.

அவன் சிறிதும் கோபித்துக்கொள்ளவில்லை. நிர்மலாவின் கண்களிலிருந்து மாத்திரம் கண்ணீர் பெருகி வழிந்து ஓடிற்று. அவள் கந்தசாமிப் பிள்ளையினுடைய காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள். காதலில் தோல்வி அடைந்த அவர் உள்ளத்தின் கொதிப்பு கொஞ்சங்கூடத் தணியவில்லை,

"டே பாபி, இந்தா; இனி இந்த வாத்தியத்தைக் கையாலே தொடுவதில்லை என்று சத்தியம் செய்து கொடு'' என்று கத்தினார். சிவப்ப்பிரகாசமும் வேறு வழியில்லாமல் அழுது கொண்டே சத்தியம் செய்து கொடுத்துவிட்டு வெளியில் வந்துவிட்டான். அன்று வந்தவன் தான் இன்னும் வீடு திரும்பவில்லை'' என்று அவன் சொன்ன பொழுது அவனுடைய குரல் தழுதழுத்தது. முகம் அவனுடைய உத்வேகமான ஏக்கத்தையும், உயர்ந்த காதலையும் காட்டிற்று.

"ஆமாம் நீ அவனுக்கு என்ன வேண்டும்? உனக்கு இந்த விஷயங்கள் எப்படித்தெரியும்?'' என்று கேட்டேன்.

ஒருநிமிஷம் சமாளித்துக்கொண்டு அந்தப் பரதைப்பயல் சிவப்பிரகாசம் இவன்தான்' என்று தன்னைக் காட்டிக்கொண்டு 'வாழையடி வாழை' என்ற பாட்டைப் பாடிக்கொண்டு அடுத்தவீட்டிற்குப் போய்விட்டான்.

வந்தபோது அவன் முகத்தில் விகஸித்த சாந்தமும் தேஜஸும் போய்விட்டன. குரலில் இருந்த காம்பீர்யமும் இனிமையும் குறைந்து விட்டன. அவனுடைய உள்ளத்தில் அமுங்கிக் கிடந்த பழைய எண்ணங்கள் மேலே பொங்கி வழிந்து அவனுக்கு ஒரு சோக சாயையைத் தீட்டிவிட்டன. அது இனி என்று அழியும்.?

நாஸ்திகன்

புரசு பாலகிருஷ்ணன்
எம். பி. பி. எஸ்.

★

ஒரு வெள்ளிக்கிழமை சாயந்திரம் தியாகராய நகரில் டாக்டர் ரகுராமனின் ஆபீஸ் அறை பரபரப்பில்லாமல் இருந்தது. சென்ற ஒரு வாரமாக அவன் தன் நோயாளிகளிடம், "வரும் வெள்ளிக்கிழமை சாயந்திரம் என்னைப் பார்க்கவரவேண்டாம். எனக்கு ஒரு முக்கியமான அலுவல் அன்று இருக்கிறது" என்று எச்சரிக்கை செய்திருந்தான்.

ரகுராமன் வயதில் சிறியவன். வைத்திய கலாசாலையில் வெகு சிறப்பாய்த் தேறி, நகரின் நடுவே விஸ்தாரமான பாதையில் அமைந்திருந்த ஒரு பெரிய கட்டிடத்தில் வைத்தியத் தொழில் நடத்திக் கொண்டிருந்தான். தொழிலை ஆரம்பித்துச் சிறிது காலம்தான் ஆகியிருந்ததால், அவன் தன் வீட்டு வாசலில் ஒலிக்கும் காலடி ஓசைகளை உணர்வதில் காதுகளைப் பாம்புச் செவிகள்போல் கூர்மையாக்கி இருந்தான்.

அன்று சாயந்திரம் வீட்டின் முன்னறையில் உட்கார்ந்திருந்தவன் வெளியே காலடிகளைக் கேட்டுப் பரபரப்புடன் தனது சுற்று நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தான். உள்ளே வந்தவர்களைக் கண்டதும், அவன் முகத்தில் ஏமாற்றம் கலந்த புன்சிரிப்பு மலர்ந்தது.

"யாரோ வியாதிக்காரா உன்னைப் பாக்கறத்துக்கு வரான்னு ஏமாந்தயா?" என்று ஏளனம் செய்துகொண்டு அவன் அறைக்குள் நுழைந்தாள் அவன் தங்கை சீதா. அவளுக்குப்பின் அவர்களுடைய தம்பி நடராஜன் வந்தான்.

"ஆமாம்" என்று தலையசைப்பினால் பதிலளித்தான் ரகுராமன்.

"கஞ்சி வாதப்பான்னு உட்கார்ந்துண்டு இருக்காயா?" என்று மேலும் கேலி செய்தாள் சீதா.

ரகுராமனின் உதடுகளில் புன்சிரிப்பு நீண்டது. ஏதோ பதிலளிக்கத் தொடங்கினான். அதற்குள் வீட்டின் உட்புறத்திலிருந்து அங்கு வந்து சேர்ந்த அவனுடைய மனைவி தாரா குறுக்கிட்டாள்.

"வா, சீதா, என்ன சமாசாரம்?"

"ஒண்ணுமில்லே, தனிக்குடித்தனம்பண்ண ஆரம்பிச்சுருக்கேளே; பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.'

"நடராஜன்கூட வந்திருக்கானே!" என்றாள் தாரா.

"அப்பா வீட்டுலே தனியாய் இருக்காரா?" என்று வினவினான் ரகுராமன்.

"ஆமாம்."

"உடம்பு சரியாய் இருக்காரா?" என்று மேலும் வினவினான் அவன்.

சரியாய் இருக்கார்."

"தாரா, நடராஜனுக்கு முறுக்கும் பர்பியும் கொடு. அவனுக்கு நொறுக்குத் தீனி ரொம்பப் பிடிக்கும்" என்று நடராஜனைப் பார்த்துக்கொண்டு கூறினான் ரகுராமன்.

நடராஜன் ரகுராமனுக்கு மிகவும் இளையவன்; பதினாறு வயதுப் பையன். அவன் பிறந்து இரண்டு வருஷங்களுக்குள் அவர்களுடைய தாய் இறந்துவிட்டாள். அக்காரணத்தினால் ரகுராமனுக்குத் தன் தம்பியின் மீது கருணை கூடிய வாத்ஸல்யம் இருந்தது. அது தன்னை வார்த்தைகளில் வெளிக்காண்பித்துக் கொள்ளாமல்; சாதாரண வார்த்தைகள் உச்சரிக்கப்பட்ட முறையிலும் சிறு காரியங்களிலும் வெளிப்படுத்திக் கொண்டது.

"வா, நடராஜா! வா. சீதா! காப்பி சாப்பிடலாம்" என்று தாரா அவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு வீட்டின் கூடத்திற்குள் சென்றாள். ரகுராமன் ஒருவருமே தன் அறைக்குள் வந்து செல்லாததுபோல் உடனே யோசனையில் ஆழ்ந்துவிட்டான். அவனுடைய முகத்தில் ஒரு தீவிரமான ஏக்கச் சாயை படர்ந்தது.

அவனுக்குக் கலியாணமாகி மூன்று மாதங்கள்தான் ஆகியிருந்தன. அக்கல்யாணத்தில், அவனுடைய தகப்பனாருக்கு அதிருப்தி. அதிருப்தி என்றால், ஏமாற்றம், கோபம், பற்றறுத்தல் முதலியவைகள் தீவிரமாய்ப் போகாமல் இரத்தத்தால் தணிக்கப்பட்ட ஓர்

உணர்ச்சி நிலை. ரகுராமன் காதலித்துக் கலியாணம் செய்துகொண்ட தாராபாய் ஒரு மராத்தியப் பெண். அவள் பிராமண ஜாதி; வைஷ்ணவ மதத்தைச் சேர்ந்தவள். அவனுடைய சகோதரி சீதாவின் கலாசாலைத்தோழியாய் இருந்தவள். சீதாவைப் போல் உயர்தரப் படிப்புப் படித்துப் பட்டமும் பெற்றிருந்தாள். ஆனால் ரகுராமனின் தகப்பனார் சிதம்பர அய்யருக்குத் தமது குலத்திலும் கோத்திரத்திலும் இருந்த பெருமை இந்த நவீன அநாசாரத்திற்கு இணங்கவில்லை. தம் குடும்பத்தின் பண்டைப் பாரம்பரியத்தைக் கலப்பில்லாமல் நீடிக்கச் செய்ய அவர் விரும்பினார். ரகுராமனோ நாஸ்திகன். மதக்கொள்கைகள் மாத்திரமல்லாமல் சாதாரணமாய் அனைவரும் அங்கீகரிக்கும் சமூகக் கொள்கைகளையுமே 'நேதி' (नेति—அது அப்படியில்லை) என்ற மனப்பான்மையுடன் தாக்குவான். வைத்திய கலாசாலையில் மனித உடம்பின் உறுப்புகள் அனைத்தையும் நுண்ணிய முறையில் சேதனம் செய்து பரீட்சித்ததன்மேல், அவன் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் தனிப்பட்ட வித்தியாசம் ஒன்றும் காணாமல், "மிருகங்களின் அமைப்பையே உடைய மனிதனுக்கு மாத்திரம், அந்தச் சதையந்திரத்திற்குள் ஒரு தனிச்சிறப்புடைய ஆத்மா இருக்கிறது என்று ஏன் சொல்லவேண்டும்?" என்று தன் தந்தையுடன் வாதாடுவான். ஸயன்ஸின் கொள்கைகளையும் கூட அவன் அதே 'நேதி' மனப்பான்மையுடன் தாக்குவான். "வம்சபாரம்பரியம், நல்ல குண விசேஷங்களை மாத்திரம் நீடிக்கச்செய்யும் இதர இரத்தக்கலப்பில்லாத குல சுத்தி" என்ற சாஸ்திரக் கொள்கைகளையும் மறுப்பான். மொத்தத்தில் அவனுக்கு ஒன்றிலும்—வாழ்க்கையிலும் கூட—நம்பிக்கை இல்லை. அவன் தாராபாயைத் தங்கை மூலம் அறிய நேர்ந்து, அவளை விவாகம் செய்துகொண்டான். கல்யாணத்தில் அவன் இதற்குப் புறமான ஒரு விவரத்தையும் கவனிக்கவில்லை. அது அவனுக்கும் அவன் தந்தைக்கும் இடையே மனஸ்தாபத்தில் முடிந்தது. அதே சமயம் அவனுக்கு ஆஸ்பத்திரியில் ஒரு கௌரவ உத்தியோகம் கிடைக்கவே, அவன் தன்பிழைப்பை நாடி, அடையாற்றிலிருந்த தன் தகப்பனாரின் வீட்டைவிட்டுத் தியாகராயநகருக்கு வந்தான். தகப்பனும் பிள்ளையும் பிரிந்த பிறகு அவர்களிடையே அமைதி நிலவிற்று. அது தூரத்தினால் ஏற்பட்ட அமைதி. அவர்களுடைய தளர்ந்த பந்தத்தை விட்டுப்போகாமல் அந்தத் தூரம்தான் காப்பாற்றிற்று.

இன்று அவன் தங்கையும் தம்பியும் அடையாற்றிலிருந்து அவனைப்பார்க்க வரவே, அவனுடைய மனத்தில் பழைய சம்பவங்களும் சச்சரவுகளும் எழுந்தன. அவன் தன் தந்தையை நினைத்துப்பார்த்தான். அவர் பொருட்டு அவன் வருத்தம் அடைந்தான்.

"நம் வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது?" என்று எண்ணினான் அவன். "நான் என் இஷ்டப்படி கல்யாணம் செய்து கொண்டும், என்கிருஹஸ்தாசிரமத்தின் ஆரம்பத்திலேயே ஒரு மந்தாரச் சாயை வீழ்ந்திருக்கிறது. அவர் எனக்கு விட்டுக்கொடுத்தும், நாம் இரண்டு பேரும் விண்டுபோன பிறகு தான் சமாசாரம் முடிவுக்கு வந்தது. ஏன் மனித விவகாரங்கள் இப்படி இருக்கின்றன?..."

இன்று அவன் தன் தங்கையையும் தம்பியையும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் அவனைக்காண வந்தது அவனுக்குச் சிறிது சங்கடமாயிருந்தது. ஏனெனில் அவனும் அவன் மனைவியும் இன்று சாயந்திரம் மோட்டாரில் வடபழனிக்குச் சென்று அந்தக் கோவிலின் ஆண்டவனைத் தரிசித்து ஓர் அர்ச்சனையும் செய்துவர யோசனை செய்திருந்தனர். அதற்காகத் தான் ரகுராமன் தன் நோயாளிகளிடம் 'இன்று வரவேண்டாம்' என்று சொல்லியிருந்தான். இப்பொழுது அவனுடைய உடன்பிறந்தோர்களின் வருகையினால் வடபழனிக்கு போவது எப்படிமுடியுமோ என்று அவனுக்குத் தோன்றிற்று......அவன் தன் மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவளைத் திருப்தி செய்யும் பொருட்டுத்தான் வடபழனிக்குப் போகச் சம்மதித்திருந்தான். ஆனால் சீதா அவனை ஏளனம் செய்வாள். அவளையும் நடராஜனையும் கூட வடபழனிக்கு அழைத்துக் கொண்டு போகலாமே என்ற எண்ணம் அவனுக்குச் சட்டென்று உதித்தது. ஏனெனில் அவன் வீட்டிலிருந்து வடபழனி ஐந்து அல்லது ஆறு மைல்கள் இருக்கும். அவ்வளவு தூரம் மோட்டார் பிரயாணம் செய்வதை ஒரு கூட்டமாய்ச் செய்தால் கலகலப்பாய் இருக்கும்; மேலும் சீதாவையும் நடராஜனையும் அவர்கள் வீட்டிற்கு மோட்டாரில் கொண்டுபோய் விடவேண்டும்! ஆகவே எல்லோருமாய்ச் சேர்ந்து கோவிலுக்குப் போய்,

அங்கிருந்து அடையாற்றுக்குப் போகலாம் என்று அவன் யோசித்தான்.

"ரகுராமா, வடபழனி ஆண்டவனுக்கு அர்ச்சனை பண்ணப் போறாயா?" என்று கேட்டுக்கொண்டு அவன் அறைக்குள் நுழைந்தாள் சீதா. அவள்பின் தாராவும் வந்தாள்.

"ஆமாம்," என்று அசட்டுச்சிரிப்புச் சிரித்தான் ரகுராமன்.

"தாரா உன்னை ஒரு பக்தனாக்கி விடுவாள் போல இருக்கே!.........எல்லாருக்கும் தணியாதவன் கடைசியில் அவளிடம் கட்டுப்பட்டாய் போல இருக்கு;......தேவலையே, தாரா சாமர்த்திய சாலிதான்!" என்றாள் சீதா.

ரகுராமன் தாராவைக் காதலுடன் கல்யாணம் செய்துகொண்டிருந்தும், கல்யாண சம்பந்தமாய் ஏற்பட்ட எதிர்ப்புக்கும் மனஸ்தாபத்திற்கும் பிறகு, அவன் முற்றும் உத்ஸாகம் இழந்திருந்தான். சீதாவின் வார்த்தைகளை நினைத்து மனதுக்குள் ஏளனமாய்ச் சிரித்துக்கொண்டு.

"வடபழனிச் சுவாமிக்கு மாத்திரம் இல்லை; ஏசுநாதருக்கும் அல்லாவுக்கும் கூட அர்ச்சனை பண்ணத் தயார்" என்றான்.

"தமிழைவிட்டுவிட்டு மராத்திப் பாஷையையும் ஏற்றுக்கொள்ளத் தயார், இல்லையா" என்று அவன் மனத்தை மேலும் கிளறினாள் சீதா.

"இல்லை!" என்று அழுத்தமாய்ப் பதிலளித்தான் ரகுராமன். "ஒருவேளை தமிழை விடாமல், மராத்திப் பாஷையையும் ஏற்றுக்கொள்ளலாம்" என்றான். பிறகு அரை நிமிஷம் மௌனமாய் இருந்துவிட்டு, "எனக்கு நம்பிக்கையே இல்லாமல், நான் அம்மாவின் பொருட்டும் அப்பாவின் பொருட்டும் வருஷந்தோறும் அம்மாவின் சிராத்தம் செய்கிறேனே அதுபோல..........."

சீதாவின் குதூகலத்திற்குச் சட்டென்று ஒரு முற்றுப்புள்ளி போடப்பட்டது.

"நான் ஒரு மடையன்" என்று தன் பேச்சை நிறுத்தினான் ரகுராமன். அவன் கண்களும் தாராவின் கண்களும் சந்தித்தன.

"நான் மராத்திப் பாஷையை விட்டுவிட்டுத் தமிழை ஏற்றுக்கொள்ளத் தயார்" என்று அமைதியுடன் மொழிந்தாள் தாரா. தமிழை விட்டுவிடத் தயாராய் இல்லாமல் தன்னை மணந்துகொண்டவனை நினைத்துப் பார்த்த பொழுது, அவளுடைய உள்ளம் பெருமையுடன் பூரித்தது. அச்சமயம் அவளுக்குத் தன் பெற்றோர்களைப் பற்றிய ஞாபகம் வரவே, ஏனோ அவர்களின்மீது அவளுக்குக் கோபம் எழுந்தது.

"பேஷ், தாரா! அப்படிச் சொல்லு!" என்று அவளைக் கரகோஷம் செய்தாள் சீதா. "இது தான் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் உள்ள வித்தியாசம்!..........ஆமாம், உனக்கு நன்னா ரகுராமன் தலையைத் தடவத் தெரியறதே! அதனால்தான் அவன் உன் மேலே அவ்வளவு அன்பு வச்சுருக்கான்!" என்றாள்.

"சரி, நீயும் எங்களோடு கோவிலுக்கு வரயோ, இல்லையோ?" என்று வினவினாள் தாரா.

"உம், வரேன். உன்னாலே எனக்கும் கொஞ்சம் புண்யம் கிடைக்கும்" என்றாள் சீதா.

"எனக்குக் கிடைப்பது போலவா?" என்று சீதாவைக் கூர்மையாய்ப் பார்த்துக்கொண்டு சொன்னான் ரகுராமன்.

இந்தத் தாக்குதலுக்குச் சீதா பதிலளிக்கவில்லை.

"நடராஜா!" என்று கூப்பிட்டான் ரகுராமன்.

"என்ன?"

"இவ்வளவு நாழியா என்னடா பண்ணிண்டு இருக்கே?"

நடராஜன் பதிலளிக்காமல் வாயிற்படியருகில் சிரித்துக்கொண்டு நின்றான்.

"டிபன் சாப்பிட்டாயிடுத்தா?"

"ஆயிடுத்து."

"நாங்க வடபழனிக் கோவிலுக்குப் போறோம். நீயும் வா. நீ வடபழனி போனதில்லையே?"

"இல்லே."

"நம்ப கோவில்கள் எல்லாம் எப்படி இருக்குன்னு நாம்ப பார்க்கணும். நம்ப தேசக் கலை இருக்கிறது எல்லாம் நமக்கு நன்னாத் தெரியணும்" என்று தன் தம்பிக்குப்போதனை செய்தான் ரகுராமன். அவனுக்கு ஆலய வழிபாடு, அர்ச்சனை, பூஜை ஒன்றிலும் நம்பிக்கை இல்லை. ஆயினும் தன் தம்பி இவ்விஷயங்

களின் வாசனை கூட இல்லாமல் வளர்கிறனே; அவனுடையமனதில் இவைகளின் பதிப்புக்கள் சிறு வயதிலேயே ஏற்படவேண்டும்; பிற்காலத்தில் அவன் தன்னைப்போல் நாஸ்திகனுய் மாறினுலும், முதலில் பழைய நம்பிக்கைகளை உணர்ந்து, பின்னர் அவைகளைப் பக்குவப் புத்தியுடன் மீறுவதனல் ஏற்படும் நேர்மையுடன் மாறவேண்டும். அத்தகைய ஆத்மப் பரீட்சை இல்லாத நாஸ்திகம் ஒரு தீமை என்று கருதி, ரகுராமன் தன் தம்பியைக் கோவிலுக்கு அழைத்துச் செல்ல விரும்பினன்.

வீட்டின் வெளியே ஒரு மோட்டாரின் வருகையோசை கேட்டது.

"யாரோ வரா" என்றுன் அறையின் வெளியே நின்றுகொண்டிருந்த நடராஜன்.

"கஞ்சி வரதப்பனு?" என்று சீதாவைப் பார்த்துக்கொண்டு கூறினன் ரகுராமன்.

'கஞ்சி வரதப்பனை'ப் பதினைந்து நிமிஷங்கள் பரீட்சை செய்து அனுப்பிய பிறகு, ரகுராமன் தன் மனைவி, தங்கை, தம்பி மூவரையும் அழைத்துக்கொண்டு வடபழனிக்குப் புறப்பட்டான்.

"உனக்குக் குறுக்கு வழி இங்கிருந்து தெரியும்னு சொன்னயே?" என்று ரகுராமன் மோட்டாரின் ஸ்விச்சை முடுக்கிக்கொண்டு தாராபாயை வினவினன்.

"ஆமாம், கிரிபித் ரோடோட போய் வலது பக்கம் திரும்பினல், கோடம்பாக்கம் ஸ்டேஷன் கிட்டே போய்விடும்........."

"ரயில் பாதை பக்கமா போறது, ஏரிகரை தெருவோடே போறதுன்னு என்னென்னமோ சொன்னளே உன் அத்தை; கிரிபித் ரோடு எங்கே போய்ச் சேரறதுன்னு தெரியுமா?"

"எனக்குத் தெரியாது. போனல்தான் தெரியும்."

"போனல் நிச்சயமாய்த் தெரியுமா?"

தாராபாய் தயங்கினள்.

"எனக்குச் சுற்று வழி தெரியும். நீ சொன்னபடி போய்விட்டுக் கடைசியில் திரும்பி வந்து சுற்று வழியிலேயே போக வைக்கமாட்டாயே?"

தாராபாய் மௌனமாயிருந்தாள்.

"பெட்ரோல் வீணுப் போறது......" என்றுன் ரகுராமன்.

"உங்களுக்குத் தெரிஞ்ச வழியிலேயே போங்கோ" என்றுள் தாரா. "திண்டாடாமல் போய்ச்சேர்ந்தால் போதும். இப்பவே நாழியாயிடுத்து."

"அதுதான் சரி!" என்றுன் ரகுராமன்.

சிறிது நேரத்தில் அவன் திருமலைப் பிள்ளை தெருவுக்குள் திரும்பியபொழுது சீதா, "ரகுராமன் மோட்டார் விட்டால், உள்ளே இருக்கிறவாளுக்கு மார்பு திக்குத்திக்குன்னு அடிச்சுக்க வேண்டியதுதான்!" என்றுள்.

"அதுக்குப் பரிகாரம், கண்களை மூடிக் கொண்டே வருவது.........பும்! பும்! பும்!" என்று மோட்டார் குழலை ஊதினன் ரகுராமன்.

"டாக்டரோ இல்லையோ!" என்று சிரித்தாள் தாரா.

தாராவுக்குத் தன் கணவனின் பேச்சு ஒவ்வொன்றும் ஆணித்தரமாய்ப் பட்டது. அவன் சட்டென்று பதிலளித்த முறை, அவன் வார்த்தைகளில் இருந்த விறுவிறுப்பு, அவைகளின் மேல் விழுந்த அவனுடைய சங்கடங்களின் நிழற்சாயை, எல்லாம் அவளுக்கு அவனிடம் ஓர் ஆதரவையும் வாத்ஸல்யத்தையும் கூடப்பிறப்பித்தன.

ரகுராமன் திருமலைப் பிள்ளை தெருவிலிருந்து கோடம்பாக்கம் வீதிக்குள் திரும்பினன்.

"ரயில் பாதை வரைக்கும் ரோடு சுமாராய் இருக்கும். அதுக்கு மேலே மிகவும் மோசமாய், மேடும் பள்ளமுமாய் இருக்கும்" என்றுள் தாரா.

"தேவலையே, தாராவுக்கு வழி எல்லாம் நன்றுத் தெரியறதே!" என்றுள் சீதா.

"அவ்வளவு சிரத்தை இருப்பதனல்தான் என்னையும் அவளால் சீர்திருத்த முடிகிறது!" என்று ஏளனமாய்க் கூறினன் ரகுராமன்.

ரயில் பாதையின் எல்லைக் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. அங்கு மூன்று நிமிஷங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

"குறுக்குப் பாதை இங்கேதான் வந்து சேறாது" என்றுள் தாரா.

"உனக்கு வழி எல்லாம் ரொம்ப நன்றுத் தெரியறதே!" என்று கிண்டலாய்க் கூறினன் ரகுராமன். "வீட்டுக்குப் போகும்போது அந்த வழியாய்ப் போய்ப் பார்ப்போம்."

தாராபாய் சொல்லியபடி ரயில் பாதையைக் கடந்த பிறகு தெரு மிகவும் மோசமாய்த் தான் இருந்தது.

"ரகுராமா, கொஞ்சம் மெதுவாய்ப்போயேன்! இந்தக் குலுக்கல் வயிற்றைப் புரட்டறது!" என்றாள் சீதா.

"கஷ்டப்பட்டுண்டு போனால்தான் புண்யம் அதிகமாகும்!" என்றான் ரகுராமன். "நிறைய தான் புண்யம் சம்பாதிப்போமே!"

பட்டணத்தின் நெருக்கடியை விட்டு வெகு தூரம் வந்தாகிவிட்டது. சுற்றும் கிராமாந்தரத்தின் அமைதி மாலையின் தியானப்பொலிவுடன் கூடி, மனிதர்களின் சச்சரவுகளால் சோர்வுற்றிருந்த ரகுராமனின் மனத்தைச் சாந்தத்துடன் நிரப்பிற்று. களைப்புற்றவனுக்கு இளந்தென்றல் போல் இருந்தது ரகுராமனுக்கு இந்தப் புதுச்சூழ்நிலை.

"சாந்தி ரூபமாய் எங்கும் மறைந்து நிற்கிறாள் சக்தி தேவி என்று தேவி மகாத்மியத்தில் சொல்லி இருக்கு; மறைந்து நிற்பது சக்தியோ எதுவோ—மனிதச் சச்சரவுகளாலும் குடும்ப மனஸ்தாபங்களாலும் சீக்காய்ப்போன ஒருவனுக்கு இது நல்ல மருந்தாய் இருக்கு" என்றான் ரகுராமன்.

"இதோ, இங்கே வலது பக்கம் திரும்பணும். அங்கே விளக்குத் தெரியறதே, அது தான் கோவில்" என்றாள் தாரா.

அவர்கள் திரும்பிய சந்து அரைப்பர்லாங்கு நீளம்தான் இருந்தது. அதன் முடிவில் கோவில். அச்சமயம் இருட்டிவிட்டதால் அணைத்தின் மீதும் ஒரு மர்மம் படிந்திருந்தது. அந்தச் சந்தில் பாதி தூரம் சென்று ரகுராமன் மோட்டாரை ஓர் ஓரமாய் நிறுத்தினான்.

"ஸார், நான் மோட்டாரைப் பார்த்துண்டு இருக்கேன் ஸார்!"

"அம்மா, பூ வேணுமா? பூ!"

"இந்தா அம்மா, பூ! எடு அம்மா! காலணுவுக்கு ரெண்டு முழம்!"

"ஸார், நான் மோட்டாரை ஒண்ணும் ஆகாதெ பார்த்துண்டு இருக்கேன் ஸார்!"

"வேண்டாம், அப்பா! மோட்டார் பறந்து போய்விடாது. பூட்டி வச்சுட்டுப் போறேன்"

"என்ன ஏகமா விலை சொல்லறையே! காலணுவுக்கு மூணு முழம் கொடு."

"வேண்டாம், சீதா. கோவில் வாசல்லே நல்ல பூவாய்க் கிடைக்கும். அங்கே தேங்காய் பழத்தோட பூவையும் வாங்கிக்கலாம்."

"மலுவாய்த் தரேன், அம்மா. காலணுவுக்கு மூணு முழம்!"

"மோட்டாரைப் பார்த்துக்கறேன் ஸார்."

மோட்டாரைச் சுற்றிக்கொண்ட சிறுவர்கள் சிறுமிகளுடைய கூட்டத்திலிருந்து வெளியே வர அவர்களுக்குச் சங்கடமாகிவிட்டது.

"இப்படிக் காலணுவுக்குக் கூட்டமாய்க்கூடி அடிச்சுக்கறதுகள்! நாங்க வந்த பெட்ரோல் செலவுக்கு இது எந்த மூலே? ரொம்ப ஜோரா மோட்டார்லே வந்து, அர்ச்சனை பண்ணிப் புண்ணியம் சம்பாதிச்சுண்டு போறோம்!" என்று நினைத்தான் ரகுராமன். ஆனால் தாராவின் உத்ஸாகம் குன்றக்கூடாது என்று அதை வாய்விட்டுச் சொல்லவில்லை.

"ஸ்வாமி அர்ச்சனைக்கும் அம்மன் அர்ச்சனைக்கும் உள்ளே போய் டிக்கட் வாங்குங்கோ. நாங்க பூ, தேங்காய், பழம், கற்பூரம் எல்லாம் வாங்கிண்டு வரோம்" என்றாள் தாரா.

"என்ன, டிக்கட்டா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ரகுராமன்.

"பூ, அம்மா! காலணுவுக்கு மூணு முழம்!" என்று மோட்டாரிலிருந்து அவர்களைப் பின் தொடர்ந்து வந்தான் பூக்காரப் பையன்.

"ஓரணுவுக்கு எடு," என்றாள் சீதா.

"ஆமாம். உள்ளே டிக்கெட் கிடைக்கும். போய் வாங்குங்கோ" என்றாள் தாரா.

ரகுராமன் கோபுர வாயிலைக்கடந்து உள்ளே சென்றான்.

"தேங்காய் என்ன விலை?"

"ஒண்ணு ரெண்டு அணா."

"ஒண்ணு ஒண்ணரை அணா வச்சுக்கோ; ரெண்டு எடு."

"இல்லே, சீதா மூணு தேங்காய் வாங்கு. வெளியிலே பிள்ளையாருக்கு ஒரு தேங்காய் முதல்லே ஒடைக்கணும்."

"ஒண்ணே முக்கால் அணா ஒரே விலை."

"ஒண்ணே முக்கால் அணாவா? கிடையவே கிடையாது! ஒண்ணரை அணாத்தான்"

"ஒண்ணே முக்கால் அணாவுக்குத்தம்பிடி குறைச்சல் இல்லே.

"அர்ச்சனைக்கு டிக்கட் புது முறையாய் இருக்கே! பேஷ்! கீழ்நாடும் மேல்நாடும் கலக்கிறது!" என்று சொல்லிக் கொண்டு அவர்களைச் சேர்ந்தான் ரகுராமன்.

"வாழைப்பழம் டஜன் என்ன விலே?"

"ரெண்டு அணா."

"சீதா, நான் கற்பூரம் வாங்கியாயிடுத்து. வாங்கோ, உள்ளே போகலாம்."

"ஸ்வாமிக்கு அர்ச்சனை டிக்கட் ரெண்டரை அணா; அம்மனுக்கு ஒண்ணே கால் அணாத்தான். உங்களுக்கு மதிப்பு எங்களிலே பாதி தான்!" என்று சிரித்துக்கொண்டு ரகுராமன் முன்னமே சென்றான்.

"வாங்கோ, பிள்ளையாருக்குத் தேங்காயை முதல்லே ஒடைச்சுட்டுப் போங்கோ"

கோபுர வாயிலுக்கு வெளியே இடது புறமாய் ஒதுங்கியிருந்த பிள்ளையார் சந்நிதியில் ரகுராமன் ஒரு தேங்காயை விசிறி எறிந்தான் அது உடைபடாமல் உருண்டோடிற்று.

"ஓஹோ தேங்காய்கூட என் கையால் உடைபடமாட்டேன் என்கிறது!" என்றான் ரகுராமன்.

"போறுமே வேடிக்கை!" என்றாள் சீதா. தாராவும் ரகுராமனின் ஹாஸ்யத்தை ரஸிக்கவில்லை.

"நடராஜா, நீதான் தேங்காயை உடை" என்றான் ரகுராமன்.

"வேண்டாம். இங்கேயே யாராவது ஒடைச்சுடுவா, என்றாள் தாரா. அவள் அதைக் கூறி முடிப்பதற்குள் தேங்காய் தரையில் உடைபட்டுச் சிதறிற்று. அத்துண்டங்களைப் பொறுக்கிக் கொள்வதற்குப் போட்டியிட்டுக் கொண்டு கூடினர் சிறு பெண்களும் பிள்ளைகளும்.

"போட்டவுடன் தேங்காய் உடையாதது அபசகுனமோ?" என்றான் ரகுராமன்.

"அப்படி ஒண்ணுமில்லே," என்று பதிலளித்தாள் தாரா.

அதன் மேல் அவர்கள் ஸ்வாமியின் சந்நிதிக்குச் சென்றனர்.

"பார்வைக்கு அழகாய்த்தான் இருக்கும் விக்ரஹம்," என்றான் ரகுராமன். கையில் பொன் வேலுடன் ஒரு காலைச் சற்று லாவகமாய்த் தூக்கி, திருநீறு பூசிய மேனியும், அன்பு தோய்ந்த மந்தஹாஸமும், புஷ்பாலங்காரமும் பொருந்தி விளங்கினார் வடபழனி ஆண்டவர்.

"நடராஜா, விக்ரஹம் எப்படி இருக்குப் பார்த்தாயா? இவ்வளவு அழகான விக்ரஹம் நான் பார்த்ததே இல்லே. மற்ற விக்ரஹங்கள் அநேகமாய் அவலக்ஷணமாய்த்தான் இருக்கும் இதுவோ சுத்தமாய், தோற்றத்திலேயே ரொம்ப வசீகரமாய் இருக்கு." என்றான் ரகுராமன். ஒரு கலைஞன் முறையில் தன் தம்பியும் அழகுக்கு வணக்கம் புரியவேண்டும், கோவில், கோபுரம், விக்ரஹம் எல்லாம் மகத்தான அழகு வாய்ந்த வஸ்துக்கள் என்று அவைகளில் ஒரு விநயரசனை தன் தம்பிக்கு ஏற்படவேண்டுமென்று அவன் விரும்பினான். அச்சமயம் கர்ப்பக் கிரகத்தில் கற்பூர தீபாராதனை தொடங்கவே, வடபழனி ஆண்டவரின் முகத்தில் ஒரு சிவப்புக் காந்தி படர்ந்து, ஓர் உண்மையான தெய்விகச் சோபையைத் தோற்றுவித்தது.

"ரொம்ப அழகாய்த்தான் இருக்கு" என்றான் ரகுராமன். ஆனால் கைகூப்பவில்லை.

கோவிலில் இருந்த அனைவரும் கைகூப்பி, கன்னங்களில் பயபக்தியுடன்போட்டுக்கொண்டனர். தான் நடராஜனுக்கு முன்பு நின்றுகொண்டிருந்ததால், அவனுக்கு ஸ்வாமி சந்நிதி மறைபடுவதை உணர்ந்து, ரகுராமன் பின்னேவிலகிக் கொண்டான். தனக்கு நம்பிக்கை இல்லாமலிருந்தாலும், தன் தம்பிக்கு இக்காட்சிகளின் தாக்குதல் வேண்டுமென்று அவன் கருதினான். நடராஜன் அசிரத்தையாய் இருந்ததைக்கண்டு அவன் அதிருப்தி அடைந்தான்.

"மன்றாடி தந்த மைந்தா! மிகுந்த
வம்பார் கடம்பை யணிவோனே!
வந்தே பணிந்து நின்றார் பவங்கள்
வம்பே தொலைத்த வடிவேலா!"

என்று ஒருவன் மெய்ம்மறந்து பக்தி பரவசமாய்ப் பாடிக்கொண்டிருந்தான். "வடபழனி ஆண்டவனே! வேல்முருகா! சுப்பிரமணியா! ஷண்முகா!" என்ற வார்த்தைகள் கற்பூர தீபத்துடனும் சாம்பிராணி தூபத்துடனும் எழுந்தன. ரகுராமனுக்கு ஜனங்களின் முகங்களைக் கண்டபோது பிரமிப்பும் தடுமாற்றமும் உண்டாயின. "இங்குள்ள ஜனங்கள் எப்படித் தங்களையே மறந்து விட்டனர்!" என்று அவன் எண்ணினான். பிரபஞ்சத்தின் மர்மரூபம் அவன் முன்பு எழுந்தது. பிரம்மாண்ட-

மான உலகப் பரப்பு முழுவதையும் ஒரு மைதானம் போல் அவன் தன் மனத்தகத்தே கண்டான். அம்மைதானத்தின் எல்லைகள் அவனுக்குத் தென்படவில்லை. சற்றே தெளிவு கலந்த இருள் அதன்மீது படர்ந்திருந்தது. அதில் ஆங்காங்கு ஜனத்திரள்கள் மங்கலாய்த் தென்பட்டன. ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு தெய்வப் பெயர் உச்சரிக்கப்படுகிறது. எங்கும் ஓர் அகண்டமான மர்மம்; எப்படியோ ஜனங்கள் தங்கள் மனது அதில் தத்தளிக்காமல் நம்பிக்கையைக் கொண்டு தங்களை மறந்து விடுகின்றனர். கடவுள் உட்பட அனைத்துமே மாயைபோல் ரகுராமனுக்குத் தோன்றின.

"நடராஜா, அங்கே பாடறானே, அவனுக்குப் பக்கத்துலே இருக்கிறவனைப் பாரு" என்று ரகசியமாய்த் தன் தம்பியிடம் மொழிந்தான் ரகுராமன்.

"எப்படியோ இருக்கானே!"

"உம், அவன் ஒரு குஷ்டரோகி."

"எவ்வளவு பேர் இங்கே இந்த மாதிரி தங்கள் வியாதிகளைத் தீர்த்துக்கறத்துக்கு வரு தெரியுமா?" என்று ரகுராமனின் காதோடு கூறினாள் தாரா.

"வியாதியும் கஷ்டமும்தான் ஞானக்கண்ணைத் திறக்கும்" என்று அசட்டையாய்ப் பகர்ந்தான் ரகுராமன். ஆனால் அவன் மனது நிதானப்படவில்லை. "கடவுள் வியாதியால் ஏற்படும் மாயையோ? பிதற்றலும் கூடத்தான் வியாதியால் ஏற்படுகிறது" என்று அவன் எண்ணிக்கொண்டான்.

அதற்குள் தாராவும் சீதாவும் எதிர்ப்புறத்திற்குச் சென்று ஸ்திரீகளுடன் சேர்ந்து கொண்டனர்.

"நடராஜா, எதிர் அறையில் ஒரு பெரிய கண்ணாடி இருக்கு பார். அதிலே விக்ரஹம் வரைக்கும் எல்லாம் நன்னாத் தெரியறது பார்!"

"ஆமாம், அப்பவே பார்த்தேனே."

நடராஜனின் அசிரத்தையைக் கண்டித்து, அவனுடைய கவனத்தை விக்கிரஹத்தின் மீதும் பக்தர்களின்மீதும் திருப்பவேண்டும் என்பது ரகுராமனின் எண்ணம். ஆனால் அதை அப்படி வெளிப்படையாய்ச் சொல்லுவதற்கு அவன் ஏனோ தயங்கினான். நிலைக் கண்ணாடி சரியாய் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்பிப்பதுபோல், ஒருவாறு அதைச் சொல்லி முடித்தான்.

"விக்ரகம், தீபம் காண்பிக்கிறது எல்லாம் அதுலே நன்னாத் தெரியறது, பார்த்தயோ?"

"உம், பார்த்தேன்."

"யார் பேரிலே அர்ச்சனை?" என்று ஓர் அர்ச்சகர் தாராவைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

"அவர் பேரிலே. அதோ அங்கே இருக்கார்."

அர்ச்சகர் ரகுராமனிடம் ஒரு தாம்பாளத்துடன் வந்து, அதன் மேலிருந்த ஒரு கிண்ணத்திலிருந்து ஓர் உத்தரணி ஜலம் கொடுத்தார். அதைக் கையில் ஏந்திக்கொண்டு ரகுராமன் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றான்.

"என்ன பெயர்?" என்று வினவினார் அர்ச்சகர்.

"ரகுராமன்."

என்ன நட்சத்திரம்?

ரகுராமன் சற்று யோசித்து, "விருச்சிகம்," என்றான்.

"அது லக்னம். அவர் நட்சத்திரம் கேட்கிறார்," என்று எதிர்ப்புறத்திலிருந்து கூறினாள் தாரா.

ரகுராமனுக்குச் சங்கடமாய்ப்போய்விட்டது. ஒருபுறம் கையில் அர்ச்சகர் கொடுத்த ஜலத்தை வைத்துக்கொண்டு, அதை ஆசமனம் செய்வதா, கீழே விட்டுவிடுவதா என்று அவனுக்குத் தெரியவில்லை. மற்றொருபுறம் நட்சத்திரம் தெரியவில்லை. அவன் விருச்சிக லக்னத்தில் பிறந்ததற்கு ஏற்றாற்போல் அவன் மற்றவர்களைத் தேள் போல் கொட்டுபவன் என்று பலமுறைகள் அவனுடைய பெற்றோர்கள் அவனைக்கண்டனம் செய்திருந்ததால் அவனுக்குத் தனக்கும் விருச்சிகத்திற்கும் ஏதோ சம்பந்தம் உண்டு என்று தெரியும்; ஆனால் அது லக்னமா நட்சத்திரமா என்று அவனுக்குத் தெரியாது.

"எல்லாம் அவர்களே சொல்லுவார்கள்," என்று ரகுராமன், தன் தங்கை, மனைவி திக்கில் மோவாய்க்கட்டையினால் சுட்டிக் கொண்டுகூறினான்,

"அர்ச்சகர் அவர்கள் பக்கம் திரும்பிய சமயத்தில், ரகுராமன் சட்டென்று தனது கையில் இருந்த ஜலத்தைக்குடித்துவிட்டான்.

அவன் தன் கையைத் தூக்கிய விதத்தில் அர்ச்சகருக்கு அவன் ஜலத்தைக் கொட்டப்போகிறனா குடிக்கப்போகிறனா என்று தெரியாதபடி சாதுரியமாய்த்தூக்கி, பிறகு அவர் முகம் திரும்பிய ''பின்னர் அதைக்குடித்தான்.

"சீதா, அவருடைய நட்சத்திரம் என்ன?"

சீதாவுக்கும் தெரியவில்லை. "அவிட்ட நட்சத்திரம்னு நினைவு. ஆனால் நிச்சயமாய்த் தெரியாது," என்று தன் அறியாமையைச் சிறிது குறைத்துக்கொண்டாள் சீதா.

அர்ச்சகர் அவர்களுக்கு முன்பு தயக்கத்துடன் நின்றுகொண்டிருந்தார். நட்சத்திரம் நிச்சயமாய்த் தெரியாமல் எப்படி அர்ச்சனை செய்வது?

"ஸ்வாமி பெயராலே அர்ச்சனை செய்து விடுங்கள்," என்றாள் தாரா.

ஆயினும் அம்முடிவு அவளுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவளுடைய மனோநிலையை உணர்ந்து அர்ச்சகரும் சற்றுத் தாமதித்தார்.

அதற்குள், "அப்பா பெயரில் அர்ச்சனையைச்செய்துவிடலாமே. அவருடைய நட்சத்திரம் எனக்குத்தெரியும்," என்றாள் சீதா.

"சரி, அப்பா பெயரிலேயே செய்துவிடலாம்," என்று துரிதமாய் ஆமோதித்தான் ரகுராமன். அவன் தன் பெயரில் அர்ச்சனை செய்ய வந்திருந்தாலும், தான் மற்றவர்களைப் போல் வரவில்லை. தனக்கு உண்மையில் அர்ச்சனை ஒரு பொருட்டில்லை, தான் தன் அப்பாவிற்கு அர்ச்சனை செய்யவும் தயார், தனக்கு அவரிடம் மனஸ்தாபம் இல்லை, தானும் (தனக்கு அர்ச்சனையில் நம்பிக்கை இல்லாமல் இருந்தாலும்) அவருடைய நன்மையைக் கோருபவன் என்று சீதாவுக்குக் காண்பிக்க வேண்டும், என்ற பல எண்ணங்கள் அவனுக்குத்தோன்றவே, அவன் சீதா பேசி வாய்மூடுவதற்குள், தாராவை முந்திக்கொண்டு, துரிதமாய் அவ்வாறு பதிலளித்தான்.

தாரா தயங்கினாள். அர்ச்சகரும் தாமதித்தார். அவள் தன் கணவர் பெயரில் அர்ச்சனை செய்வதாக வேண்டிக்கொண்டிருந்தாள். அவருடைய சங்கடங்கள், மனோ வியாகுலங்கள் எல்லாம் காலைப் பனிபோல் மறைந்துவிட வேண்டும், அவர் சமீபத்தில் தொடங்கியிருந்த வைத்தியத் தொழிலில் நல்ல வரும்படி வர வேண்டும். தாங்கள் ஆரம்பித்திருந்த தனிக் குடும்பம் இனிதே நடைபெற வேண்டும். தாங்களிருவரும் குறையா அன்புடன் என்றும் சுகித்திருக்கவேண்டும் என்றெல்லாம் பிரார்த்தனை செய்துகொள்ள அவள் வடபழனிக்கு வந்திருந்தாள்.

"அப்பா நட்சத்திரம் நிச்சயமாய்த் தெரியுமா? எதுக்கும் ஸ்வாமி பெயரிலே அர்ச்சனை செய்து விடலாமே?" என்று மீண்டும் கூறினாள் அவள்.

"எனக்கு நிச்சயமாய்த் தெரியும். 'பரணியிலே பிறந்தோர் தரணி ஆள்வார்' என்கிறபடி அவர் இருக்கார்னு பாட்டி அடிக்கடி சொல்லுவா."

வீட்டிற்குப் பெரியவர், குடும்பத்திற்குத் தலைவர், அவருடைய பெயரில் அர்ச்சனை செய்வதற்கு என்ன ஆட்சேபனை இருக்கக் கூடும்? ஆயினும் ரகுராமன் பெயரில் அர்ச்சனை

ஆப்டோன் ப்ளாக்குகளும்
அழகான கலர் ப்ளாக்குகளும்
செய்யுமிடம்!

எம். ஸி. அப்பாசாமிசெட்டி & கோ.,
14 ஜோன்ஸ் தெருவு, மண்ணடி, மதராஸ்.

செய்ய முடியாததனல் உண்டான ஏமாற்றத்தை இது தாராவிற்கு ஏனே அதிகரித்துக் காண்பித்தது.

சீதா தாராவின் மனே நிலையை உணர்ந்தாள். "அப்பா பெயரிலேயே அர்ச்சனை செய்துவிடலாமே" என்று ரகுராமனை நோக்கிக் கூறினள்.

"சரி" என்று தலையை அசைத்தான் ரகுராமன்.

தாராவும் மௌனமாய்த் தலையசைத்தாள். அதன்மேல் அர்ச்சகர் கோத்திரத்தையும் விசாரித்துக்கொண்டு கர்ப்பக் கிருஹத்திற்குச் சென்றுவிட்டார்.

"அவிட்ட நட்சத்திரத்திலே பிறந்தால், தவிட்டுப் பானையில்கூடப் பொன் அகப்படும்னு சொல்லுவா" என்றுள் சீதா,

"அப்போ அவர் அவிட்ட நட்சத்திரம் தான?" என்று அதிகரித்த ஏமாற்றத்துடன் வினவினள் தாரா.

"அப்படித்தான் ஞாபகம். ஆனல் நிச்சயமாய்த் தெரியலே. வீட்டுக்குப் போய் அப்பாவைக் கேட்கலாம்" என்று பதிலளித்தாள் சீதா.

சிறிது நேரம் அவர்கள் மௌனமாயிருந்தனர். பிறகு தாரா, "ஆமாம், அர்ச்சகர் கொடுத்த ஜலத்தைக் குடிச்சுட்டேளே! அது கையைப் பரிசுத்தமாக்கறத்துக்குன்னு விடறது?" என்று ரகுராமனிடம் கூறினள்.

சீதா சிரிக்கத் தொடங்கினள்.

ரகுராமன், "போனல் போகிறது" என்று மெதுவாய்ச் சிரித்தான். அவர் பார்த்துட்டாரா?"

"இல்லே, நல்ல வேளையாய்ப் பார்க்கல்லே" என்று பதிலளித்தாள் தாரா.

"ரொம்ப தாகமாய் இருந்ததோ?" என்று கேட்டாள் சீதா.

அதற்குள் அர்ச்சனை ஆரம்பமாயிற்று. அர்ச்சனை, தூபம், தீபம், நைவேத்தியம், கற்பூர ஆராதனை எல்லாம் முறையே நடைபெற்றன.

"நான் மறுபடியும் அவரோடு இங்கே தனியாய் வந்து, அவர் பெயரில் அர்ச்சனை செய்ய வேண்டும்" என்று எண்ணிக்கொண்டாள் தாரா.

"ரகுராமனுக்குச் சிறிது முரட்டுக் குணமே ஒழிய, நல்ல குணவான்தான். அப்பாவிடம் சண்டைபோட்டிருந்தும், அவருக்கு அர்ச்சனை செய்கிறன்" என்று நினைத்தாள் சீதா.

"நாட்டுப்பெண் அர்ச்சனை செய்வது அக்கிழவருக்கும் அவளுக்கும் ஒரு புதுப்பந்தமாய் இருக்கட்டும். எனக்கு அப்பாவின் மீது மறைவாய் அதிக அன்பு இருக்குன்னு சீதா நினைப்பாள். நினைக்கட்டும். ஒரு சம்பிரதாய முறையில்தான் ஜனங்களுக்கு யோசனை செய்ய முடியறது. ஒருவித உணர்ச்சியும் இல்லாமல் அர்ச்சனை செய்யலாம்னு அவர்களுக்குத் தெரியாது............" என்று யோசனை செய்தான் ரகுராமன்.

கற்பூரத்தின் சுகந்தம் கூடிய சிவப்புக் காந்தி வடபழனி ஆண்டவரின் மேனியில் படர்ந்து, ஓர் உண்மையான தெய்வீகச் சோபையைப் பிறப்பித்தது. ரகுராமனைத் தவிர கோவிலில் அனைவரும் கைகூப்பிக் கன்னங்களில் போட்டுக் கொண்டனர். "வடபழனி ஆண்டவனே! வேல்முருகா! சுப்பிரமணியா! ஷண்முகா!" என்ற வார்த்தைகள் கற்பூர நீராஞ்சனத்துடன் எழுந்தன.

பட்டிக்காட்டுப் பெண்

[லலிதா-நாராயணன்]

"அம்மா! என்னையேன் இப்படித் தொந்தரை பண்ணுகிறாய்? என்னால் அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணைப் பண்ணிக்கொள்ள முடியாது. என்னை வீணாகத் தொந்தரவு பண்ணாதே. போயேன். பாட்டுக்கூடக்கேட்கவிடாமல் இந்தத் தொந்தரவு என்ன வேண்டியிருக்கு!" என்று கோபத்துடன் சொன்னான் ராமு.

"என்னடாது? இப்படிப்பதில் சொல்கிறாய்? பட்டிக்காட்டுப் பெண்ணென்றால் இளப்பமாடா? உம், நீ இப்படியும், இதற்குமேலும் பதில் சொல்ல மாட்டையா. என்னால்தான் இப்படி வந்தது என்று உன் தகப்பனார் சொல்வதில் தப்பென்ன? வாஸ்தவம்தான். ராமு, எந்தப் பெண் வந்தாலும் இப்படி ஏதாவது சாக்கு சொல்லித் தள்ளிவிடுகிறாய். நல்லதடா, இந்தப் பெண்ணின் ஜாதகம் நன்றாய் இருக்கிறதடா. நேற்று நான் ஜோஸியரை வரவழைத்து அப்பாவையும் கூடவைத்துக்கொண்டு பார்த்தேன்! சரியாய்ப் பொருந்தியிருக்கிறதடா. ஒரு தோஷமும் இல்லை! மறக்காதே" என்று மிகவும் நயத்துடன் கேட்டாள் கமலம்மாள் ராமுவை.

ராமு ரேடியோவை நிறுத்திவிட்டு, "அம்மா, உன் கம்பராமாயணத்தை ஆரம்பித்துவிட்டாயா? பட்டிக்காட்டுப் பெண்ணைக் கட்டிக்கொண்டு மாரடிப்பதைவிட, சுவரைக் கட்டிக்கொண்டழலாம். இதோ இப்போது பாடிக்கொண்டிருக்கும் பாட்டைக் கேட்டாயா? என்ன சுகமாய் இருக்கிறது. இவள் பாடும் பாட்டே இப்படி இருக்கும்போது பெண் எப்படி இருக்கவேண்டும் அம்மா? பட்டிக்காட்டுப் பெண்களைக் கட்டிக்கொண்டால் நாகரிகம் ஒன்றும் கிடையாது! பாடவும் தெரியாது. நீ பாடரயே கர்நாடகப்பாட்டு, ரொம்ப நன்னா. அந்தமாதிரி ரெண்டுபாட்டுத் தெரியும். அழகு என்பதே மருந்துக்குக்கூட இராது. அம்மா உனக்கு ரொம்ப நமஸ்காரம்! கல்யாணம் என்ற பேச்சை அடியோட மறந்துடு. இந்தா இந்தப்பாட்டு ரொம்ப நன்றாய் இருக்கிறது." என்று சொல்லிவிட்டு ரேடியோவை மறுபடியும் திருப்பி வைத்தான்.

கமலம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது! அன்றையதினம் காலையில்தான் தன் கணவனுடன் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள். சாம்பசிவய்யர் கமலம்மாளைப் பரிகாசத்துடன் பேசி ஏசிக்காட்டினார். "ராமுவாவது பண்ணிக்கொள்ளவாவது, எல்லாப் பெண்களையும் தட்டிவிட்டதுபோல இதையும் தள்ளிவிட்டால் இனிமேல் எந்த இடத்திற்கும் கடிதம் போட்டுப் பெண்தேட என்னால் முடியாது—லலிதா—இந்தப் பெண்ணின் மாமன் எனக்கு மிகவும் வேண்டியவர். பையனுக்குச் சம்மதமில்லை என்று எப்படி எழுதுவது? ராமுவும் முடியாது என்றுதான் பதில் சொல்லுவான். ஆனால் இதைப்பற்றி அவனிடம் நான் கேட்கப் போவதில்லை. நீயே கேள். ஜாதகமும் பார்த்தோம். உன்னிஷ்டம்போல் எல்லாம் பொருந்தியிருக்கிறது இன்னும் என்ன வேண்டும்? பணமா, நகையா, கேட்டதைக் கொடுக்கத்தயார் பெண்ணின் தகப்பனார், பெரிய உத்தியோகத்திலிருக்கிறார். அந்தப் பெண்ணை ராமு கலியாணம் செய்து கொண்டால் நன்றாயிருக்கும். பண்ணிக் கொண்டால் அந்தப் பெண்ணைப் பண்ணிக்கொள்ளட்டும். உன் சாமர்த்தியம் இதில்தான் பார்க்கவேண்டும். நானென்னவோ அவனைக் கேட்கப்போவதில்லை. சரியென்று சொல்லிவிட்டால் நல்ல புண்ணியம். நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார்.

கமலம்மாள் கணவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டு பதில் சொல்லாமல் நின்றுகொண்டிருந்தாள். அவர் சொல்வதென்னவோ உண்மை கடைசியில் அவர் வெளியே போவதற்குமுன் "சரி! உங்களுக்கு அவ்வளவு இளப்பமாயிருக்கிறது? உம். ராமுவை அந்தப் பெண்ணை எப்படியாவது கலியாணம் செய்துகொள்ளும்படி செய்துவிட்டுத்தான் வேறு வேலைப்பார்ப்பேன். இந்தச் சித்திரை மாதத்தில் எப்படியாவது கலியாணம் நடத்தியே தீரவேண்டும். கலியாணத்திற்கு வேண்டிய எத்தனங்களைச் செய்துகொள்ளலாம்" என்று சொல்லிவிட்டாள் பதில்.

சாம்பசிவய்யர் பார்த்தார் கமலம் இவ்விஷயத்தில் இவ்வளவு திடத்துடன் பேசுவது அவருக்கே ஆச்சரியத்தை உண்டுபண்ணியது! "அவன் முடியாது என்று சொல்லி விட்டால் என்ன செய்வாய்?'' என்று கேட்டார்

"முடியாது என்பது என்னிடம் வராது. காரியத்தை முடிக்காமல் நான் வேறுகாரியம் செய்யமுடியாது''

"முடியாது என்று சொன்னல் என்ன செய்வாய்? 'என்று மறுபடியும் கேட்டார்.

"அப்படித் தைரியமாய் சொல்லிவிட்டால் வீட்டைவிட்டு நடக்கவேண்டியதுதான், இரண்டுபேரில் யாராவது. இது தீர்மானம்தான்'' என்றுள்.

இவ்வளவும் காலை 8-மணிக்குள் நடந்தது. சாம்பசிவய்யரும் தம் வேலையைக் கவனிக்கப் போய்விட்டார். கமலம்மாளும் நிதானமாய் ராமுவின் அறைக்குப் போனுள். கூடத்தில் இருப்பதாகத் தெரிந்துகொண்டாள். அங்கு ரேடியோவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு மிகவும் சுவாரஸ்யமாய்ப் பாட்டைக் கேட்டுக் கொண்டு தானும் கூடவே பாடிக்கொண்டிருந்தான் ராமு

''ராமு! போதும் உன்பாட்டு; இப்படிவா'' என்று சொல்லிவிட்டு கலியாணப் பேச்சை எடுத்தாள். பிறகு தான் மேலேகண்ட வார்த்தைகள் நடந்தன. ராமுவுக்குக் கோபம் வந்தது. "அம்மா! கொஞ்சம் இரு, பாட்டைக் கேளு. இந்தப்பாட்டைக் கேட்கநீ கொடுத்து வைக்கணுமே! பானுவும் இந்தப் பாட்டைப் பாட வெகுகஷ்டப்பட்டான். பக்கத்திலிருந்து பாடுவது போலிருக்கிறது; அம்மா!......''என்பதற்குள், கமலம்மாள் ரேடியோவை நிறுத்தி வைத்து விட்டு, அவனைப்பார்த்து, "ராமு! யாரிடம் பதில் சொல்கிறுய் தெரியுமா? அந்தப் பாட்டு அங்கேயே நிற்கட்டும்! என்ன சொல்லுகிறுய்?......அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளத்தான் வேண்டும்! மேலும்'' என்பதற்குள் ராமு, "இஷ்டமில்லாவிட்டால் என்னம்மா செய்வது? பெண்ணையும் நான் பார்த்தது இல்லை; நீ சொல்வதிலிருந்து பெண் பட்டிக்காட்டுப் பெண்ணென்று தான் தெரிகிறது. மேலும்......'' என்பதற்குள், அவன் தாயார் "அந்த ராமாயணம் எல்லாம் வேண்டாம் கல்யாணம் பண்ணிக்கொள்கிறுயா இல்லையா......பதில் என்ன?'' என்று கேட்டாள்.

"அம்மா எனக்கு இஷ்டமில்லை; நான்...'' என்று கூறுவதற்குள், "சரி உன்னிஷ்டம் அப்படியா? நீ நான் குறிப்பிட்டபெண்ணை—லலிதாவை, கலியாணம் செய்துகொள்வதாய் இருந்தால் இந்த வீட்டிலிருக்கலாம் இல்லாவிட்டால் இந்த வீட்டிலிருக்கவேண்டாம். உன்னை நான் இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு வளர்த்து வந்ததற்குப் பலனிதுவா? அப்பா சொன்ன தென்னவோ வாஸ்தவம்! இந்த ஆஸ்தியில் உனக்கு ஒரு பைசாக்கூடத் தரமாட்டேன். உன் தகப்பனுருக்கும் பாத்தியதையில்லை. இனிமேல் என்னிடம் நீ பேச வேண்டாம். உன்னிஷ்டம்போல் எங்கேவேணுமானுலும் போகலாம்........என் முகத்தில்கூட விழிக்காதே'' என்று கோபத்துடன் சொல்லி விட்டாள் கமலம்மாள்.

ராமு ஒன்றும் பதில் சொல்லாமல் நின்று விட்டான். ராமுவுக்குத் தன் தாயாரிடம் இருக்கும் அன்பு கொஞ்சநஞ்சமல்ல. ஆனல் இஷ்டமில்லாத காரியத்தைச் செய்ய அவன் இஷ்டப்படவில்லை. முன் கோபத்தால்தான் இவ்வளவு தூரம். அவள் பேசுகிறுள் என்று மனதில் நினைத்துக்கொண்டான். இன்னும் ஏதாவது பதில் சொன்னல் காரியம் கெட்டுப் போகும் என்று தீர்மானம் செய்துகொண்டு பேசாமல் தன்னறையில் போய் உட்கார்ந்து கொண்டு இதற்கு என்ன வழி என்று யோசிக்கலானுன்.

சாம்பசிவய்யர் மத்தியானம் சாப்பிடும் போது கமலாவிடம் நடந்த சங்கதியைக் கேட்டார். கமலாவும் நடந்ததையெல்லாம் சொன்னுள். அய்யர் மனதுக்குள் சிரித்துக் கொண்டார். அன்றைய தினம் பானுவிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் ராமுவைச் சென்னைக்கு அனுப்பும்படி பானு எழுதியிருந்தான்.

ராமுவுக்கு மனதிற்குள் சந்தோஷம்தான். மெதுவாகத் தந்தையிடம் போய்த் தன்னைக் கட்டாயம் அன்றைய தினமே சென்னைக்கு அனுப்பும்படி கேட்டு, அவர் சம்மதத்தைப் பெற்று, அன்றையதினமே சென்னைக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

மறுநாள் காலையில் ராமு சென்னையில் தம்புசெட்டித் தெருவிலுள்ள தன் தங்கை ரமணியின் வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தான். ரமணிக்கு அவனைக் கண்டதும் சந்தோஷம் வந்துவிட்டது. ஆனல் அவன் இவ்வளவு

சீக்கிரம் வருவானென்று அவள் நினைக்கவில்லை.

மத்தியானச் சாப்பாடானதும் எல்லாரும் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, பாலுவிடம் தன் சமாசாரத்தை மாத்திரம் அவன் தனியாயிருக்கும்போது சொல்லிவிட்டான் ராமு.

"ஏன் வேண்டாமென்று சொன்னாய்? பெண்ணைப் பார்த்தபிறகு சொல்வது தானே? உனக்குப் புத்தியில்லையே! பெண்ணைப்பார்த்த பிறகு சொல்கிறேன் என்று சொல்லியிருந்தால் இவ்வளவு கஷ்டம் இருந்திருக்காதே? நீ பி. ஏ., படித்துப் பயனென்ன? இதற்கெல்லாம் சமயோசித புத்தி வேண்டாமா? சரி! அந்தப் பெண் யாருடைய பெண் என்றாவது உனக்குத் தெரியுமா, தெரியாதா? மட்டிச் சாம்பிராணி என்றால் நீதான். நான் விசாரித்து எழுதித் தெரிந்துகொள்ளட்டுமா?" என்று கேட்க, ராமு "ஐயோ! வேண்டாம். எனக்குத் தெரியும், அந்தப் பெண் சுத்த பட்டிக்காடு. சுத்த மடிசஞ்சியின் பெண்ணாயிருக்கவேண்டும். பாலு, இதைப்பற்றி மாத்திரம் நீ கேட்கவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டான்.

பாலுவும் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டான். ரமணியின் குணம் அவனுக்குத் தெரியும். என்னவென்றால் தான் சொல்ல மறுத்தால் ராமுவினிடமிருந்து சமாசாரத்தைத் தெரிந்துகொள்வாளென்று. ஆகையால் மாமனூருக்கு ராமு வந்துசேர்ந்ததையும், உடனே அனுப்பிவைத்ததற்கு ரமணி சந்தோஷப்பட்டாளென்றும் கடிதம் எழுதினன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. அன்றைய தினம் ராமு, வீட்டிலிருந்த ரேடியோவைத் திருப்பி வைத்துப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, பாட்டை ஆனந்தமாய்க் கேட்டுக்கொண்டு தானும் கூடப் பாடிக்கொண்டிருந்தான். இந்த ஆனந்தத்தில் பக்கத்தில் பாலு வந்து நிற்பதைக்கூட அவன் கவனிக்கவில்லை.

"பலே! ராமு, போன வருஷத்தைவிட இந்த வருஷம் தேவலையே. ரேடியோ வந்த பிறகு நீ நன்றாகப் பாடக் கற்றுக்கொண்டாயா என்ன? ஆனால் நான் உன்னை வரவழைத்த காரணம் வேறு. ரமணிக்கு அந்தக் காரணம் தெரியாது. எங்கள் சபாவில் போன வருஷம் வருடப் பிறப்புக்குப் பாட்டுக்கச்சேரி நடத்தினோம். இந்த வருஷம் மூன்று டிராமக்கள் கூடச் சேர்த்திருக்கிறோம். அதற்கு உன்னையும் வரவழைக்கச் சொல்லியிருக்கிறார் எங்கள் சபையின் காரியதரிசி. உன் சங்கீதத் திறமையைப் போன வருஷமே அவர் கவனித்து வைத்துக்கொண்டார். இப்போது 'வள்ளி திருமண'த்தில் நாரதராக ஆக்ட் செய்ய ஒருவர் தேவை. நாரதராக ஆக்ட் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசாமி காயலாவாக இருப்பதால் உன்னை வரவழைக்கும்படி எங்கள் சபைக் காரியதரிசி என்னிடம் சொன்னார். நீ இவ்வளவு சீக்கிரம் புறப்பட்டு வருவாய் என்று நான் நினைக்கவில்லை. நல்ல காலம் நீ வந்து சேர்ந்தாயே. சரி, ரேடியோவை மறுபடியும் திருப்பி வை" என்று சொல்லிவிட்டு இருவருமாகப் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

கொஞ்சநேரம் பாட்டைக் கேட்டுவிட்டுப் பாலு சபாவுக்குப் புறப்பட்டான். போகும்போது ரமணியிடம் தான் சாயந்திரம் ஐந்து மணிக்குத் திரும்பி வருவதாயும் அதற்குள் ராமுவைத் தயாராய் இருக்கச் சொல்லும்படியும் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

சபாவின் காரியதரிசியான சிவராமய்யர் மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். பாலுவைக்கண்டதும் "அப்பா நல்ல சமயத்தில் வந்தாய்? உன்னை அழைத்துவர ஆளை அனுப்பலாமென்றிருந்தேன். நீயே வந்துவிட்டாய்?..." என்று சொல்லிவிட்டு மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லியனுப்பிவிட்டார்.

எல்லாரும் போன பிறகு சிவராமய்யர் பாலுவைப் பார்த்து, "பாலு, உன்னால் எனக்கு ஒரு உபகாரம் ஆகவேண்டியிருக்கிறது." என்றார்.

"அடடா! அப்படியா! அது என்ன அவ்வளவு பிரமாதமான காரியம். எல்லாம் சபாவைப்பற்றியதாகத் தானிருக்க வேண்டும். என்ன காரியம் சொல்லுங்கள்." என்றான் பாலு.

"அப்பா! சபாவைப் பற்றிய தொன்றும் இல்லை; எல்லாம் சொந்தக்காரியம்தான்! அதுவும் கலியாண விஷயம்! உன்னால்தான் அது கட்டாயம் முடியும்!" என்றார் சிவராமய்யர்.

"கலியாண விஷயம்தானே! செய்தால் புண்ணியமுண்டு! பெண்பார்க்க வேண்டுமா

அல்லது பிள்ளை பார்க்கவேண்டுமா? சொல்லுங்கள். லீவ் வாங்கிக்கொண்டு போகிறேன்! நாம் இருவரும் பழகினதற்கு இதுகூடச் செய்யாவிட்டால் நான் என்ன மனுஷன்?" என்று சொன்னான் பாலு.

"பாலு! உன்னைப் பெண்ணையும் பிள்ளையையும் தேடச் சொல்லவில்லை! பிள்ளையைத்தான் பார்த்துக் கொடுக்க வேண்டும்! பிள்ளை வேறு யாரும் இல்லை யப்பா. உன் வீட்டில் இப்போது வந்திருக்கிறானே—ராமுதான். வேறு யாருமில்லை!" என்று சொன்னார் சிவராமய்யர்.

"சார் நீங்கள் கேட்பதும் நியாயம்தான்! நான் உங்களுக்கு இந்த விஷயத்தில் உதவி செய்யவும் வேண்டியதுதான். ஆனால்,......" என்பதற்குள், "என்னப்பா! எங்கேயாவது ஏற்பாடு செய்தாய்விட்டதா என்ன?" என்று பதட்டத்துடன் கேட்டார்.

"இல்லை! அவன் லேசில் மசியமாட்டான்! அதுதான் அவனிடம் இருக்கும் கெட்ட குணம்! இல்லாவிட்டால் இதுவரைக்கும் வந்த பெண்களை யெல்லாம் தட்டிவிடுவானா? எந்தப் பெண் வந்தாலும் ஏதாவது சாக்குப் போக்குச்சொல்லித் தள்ளிவிடுகிறான். நான் என்ன செய்யட்டும்!." அவன் இப்போது வந்திருப்பதும் அந்தக் கல்யாணத்தால்தான். பெண்ணைப் பார்க்காமல் விவாகம் செய்து கொள்ள மறுக்கிறான். தற்கால நாகரிகத்திற்கேற்றாற்போல் இருக்க வேண்டுமாம்? எல்லாம் சரியாய் இருக்கக்கூடிய பெண் எங்கிருந்துவரும் சார்? நீங்களே சொல்லுங்கள்?" என்று கேட்டான் பாலு.

"பாலு நீ சொல்வது உண்மைதான்! நான் சொல்லும் பெண்ணின் பெயர் லலிதா. அவளுக்கு நன்றாய் பாடவும் நடனமாடவும் தெரியும். படிக்கவும் தெரியும். அவளுடைய தகப்பனார் டெல்லியில் ஒரு பெரிய கவர்ன்மெண்ட் இலாகாவில் உத்யோகஸ்தராய் இருக்கிறார். அவருக்கு அவள்ஒரே பெண். பிள்ளையாய் இருந்தால் எவ்வளவு தூரம் படிக்கவைத்துவிடலாமோ அவ்வளவு தூரம் படிக்கவைத்துவிட்டார். காலேஜ்படிப்புக்கு இந்த வருஷம் அனுப்பவில்லை. சம்சாரத்தின் நிர்ப்பந்தத்தின் மேல் அதையும் நிறுத்திவிட்டார். வெள்ளிக்கிழமை காலை 8-மணிக்கு அவள் டெல்லியில் ரேடியோவில் பாடியிருக்கிறாள். அதை நானும் கேட்டேன். எவ்வளவு நன்றாய்ப் பாடியிருக்கிறாள்!

பாலு, லலிதாவின் தகப்பனாருடைய இஷ்டம் என்ன தெரியுமா? பையன் ஏழையாயிருந்தாலும் யோக்கிய முள்ளவனாயும் படிப்புள்ளவனாயும் இருக்கவேண்டும். இன்னும் மேல் படிப்பு படிக்க இஷ்டம் இருந்தாலும், படிக்க வைப்பதாகக்கூடச் சொல்லுகிறார். இந்த விவாகத்தை எப்படியாவது நான் முடித்துக்கொடுக்க வேண்டுமென்றும், அதற்காக மூன்று மாதம் லீவு வாங்கிக்கொண்டு தாம் இவ்விடம் வரப்போவதாகவும் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் எனக்கு ராமுவின் ஞாபகமும், அவனுடைய படிப்பும் ஞாபகத்திற்கு வந்தன. நான் இதைப்பற்றி அவன் தகப்பனாருக்கு எழுதியிருந்தேன். எழுதி இரண்டு வாரமாகியும் பதிலில்லை. ராமு இவ்விடம் வந்திருக்கிறான் என்றாயே, இதைப் பற்றி ஏதாவது சொன்னானா?" என்று கேட்டார்.

"இல்லையே ராமுவின் தகப்பனாருக்குக் கடிதம் எழுதிய சமாசாரத்தை எனக்குத் தெரிவித்திருந்தால் நானும் அவருக்கு எழுதியிருப்பேனே. சரி, இப்போது ஒன்றும் கெட்டுப் போகவில்லை. இதைப்பற்றி நீங்கள் கவலைப் படவேண்டாம். அவர்கள் எப்போது இவ்விடம் வருவார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று பாலு கேட்க, "அடுத்த திங்கட்கிழமை வரப்போவதாக எழுதியிருக்கிறார்" என்று சொன்னார் சிவராமய்யர்.

"நான் சொன்னதை இதுவரையிலும் அவன் தட்டி நடந்தது இல்லை. ஆனால் இந்தக் கல்யாண விஷயத்தில் அவன் எப்படியோ எனக்குத் தெரியாது. நான் சொல்லும் வரை நீங்கள் வேறு எங்கும் மாப்பிள்ளை தேடவேண்டாம். இரண்டாவது நாம் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டதை யாரிடமும் தங்கள் மனைவியிடம்கூட சொல்லவேண்டாம். பத்திரம். நிம்மதியாக உங்கள் காரியத்தைப் பாருங்கள்" என்று சொல்லி அவரிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினான் பாலு.

பாலுபோனபிறகு, ராமு ரேடியோப் பாட்டுக்களை எல்லாம் கேட்டுக்கொண்டும் கூடவே பாடிக்கொண்டும் வந்தான். ரமணியும் தன் காரியங்களை எல்லாம் பார்த்துவிட்டு அவ்விடம் வந்து கீழே உட்கார்ந்துகொண்டாள்.

வெற்றிலைப் பாக்குப்போட்டுக் கொண்டே "ராமு, ராமு உனக்கென்ன கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டாமென்பதே இஷ்டமா, அல்லது அம்மா பார்க்கவில்லையே என்ற எண்ணமா?" என்று கேட்டாள்.

ராமு:- "நீயும் ஆரம்பித்து விட்டாயா? 'ராமேச்வரம் போனாலும் சனீசுவரன் விடவில்லை." என்பது போலிருக்கே என் பிழைப்பு! அடடா, ரமணி, இதைப்பற்றி என்னைக் கேளாதே! நான் இருக்கும் லக்ஷணத்துக்குக் கலியாணம் வேறு? 'தொந்தரவு செய்யாதே. இந்தப் பாட்டைக் கேளேன்." என்றான்.

ரமணி:-"என்னடா. பேஷ்! ரொம்ப நன்றாய் இருக்கிறது நீ பேசும் வார்த்தைகள். கலியாணப் பேச்செடுத்தால் இவ்வளவு ரோஷமா? ராமேச்வரம் போனாலும் சனீச்வரன் விடலை யாமே! இப்படி உனக்கு யாரப்பா சொல்லிக் கொடுத்தது? காசி யாத்திரை போகாமல் இருந்தாலும் என்று சொல்லாமலிருந்தாயே. ராமு, என்ன சமாசாரம் நடந்தது? அம்மா ஏதாவது கலியாண விஷயமாய்ப் பேசினாளா? எத்தனை நாள் இப்படி யிருப்பது? அம்மாவுக்கும் வயசாய்விட்டது. இது உனக்கு இன்னமும் தெரியவில்லையே? நீயே யோசித்துப்பாரேன்" என்று கொஞ்சம் சாந்தமாய்ச் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

ராமு:- "என்னைத் தொந்தரவு செய்யாதே! எனக்கு வேளை வந்தால் கல்யாணம் நடக்கிறது. நீ சொல்லித்தான் நடக்கவேண்டுமா என்ன? அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இல்லாத அக்கரை உனக்கென்ன? இந்தா, உன்பேச்சை விட்டுவிடு. காப்பிபோடு சீக்கிரம். பாலு வருவதற்குள் எல்லாம் தயாராய் இருக்கட்டும்" என்றான்.

ரமணி: "அண்ணா! என்னிடமா பேச்சை மறைக்கிறாய்? எந்தப் பெண் வந்தாலும், அழகில்லை, பாடத் தெரியவில்லை, குருடு, நொண்டி என்று சொல்லி அனுப்பிவிடுகிறாய் என்று எனக்குத் தெரியாதா? இதோ பார், நான் உன்னை இவ்விடம் விட்டு ஊருக்குப் போக விடப்போவதில்லை. நீ ஊருக்குப்போவதற்குள் ஒரு பெண்ணைப் பார்த்து நானே எல்லாம் ஏற்பாடு செய்து, பிறகு அப்பாவுக்கு கடிதம் போடுகிறேன். அம்மாவை ஏமாற்றுவது போல் என்னையும் ஏமாற்றி விடலாம் என்றெண்ணாதே" என்றாள் சிரித்துக் கொண்டே.

ராமு: "ரமணி! நீயுமா என்னை இப்படிப் பிடுங்க ஆரம்பித்துவிட்டாய்? ஐயோ! எனக்கு இஷ்டமில்லாத பெண்ணை கலியாணம் செய்து கொள்ளென்றால் அது எப்படி முடியும்?

ரமணி: இஷ்டமில்லாத பெண் என்ற ஒரு பெண்ணும் உண்டா என்ன? அந்த வார்த்தையை இனி என்னிடம் சொல்லாதே ராமு. அதை அப்படியே ரப்பரால் அழித்தால் எப்படி மறைந்து போய்விடுமோ, அதைப்போல் உன் மனதிலிருந்து அதை அகற்றிவிடு. நான் பார்த்து உனக்கு ஏற்பாடு செய்கிறேன். உனக்கு வரும் பெண் உன்னைப் பம்பரம்போல் ஆட்டி வைப்பவளாக இருக்கவேண்டும் என்றாள்.

ராமு: ஏன்? ஒரு ராக்ஷஸியைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொள் என்று சொல்லேன். அவளைக் கட்டிக்கொண்டு காசி யாத்திரை போய்வருகிறேன். "உன்னைப் போல் வாயாடிப் பெண்ணாக இருக்கவேண்டுமா? அந்தமாதிரி எனக்கு வேண்டாமம்மா, தாயே" என்றான் கேலியாகச் சிரித்துக்கொண்டே. (இந்த வார்த்தையைச் சொன்னால் ரமணிக்கு ரோஷம் வருமென்று அவனுக்குத் தெரியும், பேச்சை மாற்றுவதற்காகச் சொன்னான். ஆனால் ரமணியா பேச்சை மாற்றுபவள்?)

ரமணி: "நானா வாயாடி? நீதான் வாயாடி. எனக்கு மேல் பெரிய வாயாடியாக இருக்கும் பெண்ணைப் பார்த்து கலியாணம் செய்துவிடுகிறேன். அப்புறம் காசி யாத்திரை போகலாமே. கோபத்துடனா காசி யாத்திரை போகவேண்டும்? நாளைக்கே நான் அம்மாவுக்கு லெட்டர் போடுகிறேன்......" என்று சொல்வதற்குள்,

"அப்படியா! காசி யாத்திரை போகப் போகிறது நீயா, ராமுவா?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் பாலு.

"எல்லாம் உங்க ராமுதான் அப்படிச் சொல்வது. காசி யாத்திரை போகவேண்டுமாம். இந்தாருங்கோ......" என்பதற்குள்

"அம்மணி! உத்தரவுப்படி காத்துக்கொண்டிருக்கிறேன். என்ன உத்தரவோ!" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் பாலு.

ரமணி: "போதுமே உங்கள் நாடகம். இது நாடகமேடையில்லை. ஒரு நல்ல வாயாடிப் பெண்ணைப் பார்த்து இவன் காலில் கட்டி விடுங்கள். அப்புறம் இவன் கொட்டத்தைப் பார்க்கலாம்" என்றாள்.

பாலு: "காலிலே கட்டச் சொல்லறயா, கழுத்திலே கட்டச் சொல்லறயா சொல்லு. ராமு, வாயாடிப் பெண் வேண்டாமடா. நான் படும் அவஸ்தை போதாதா? உன் தங்கை போடும் கோட்டுக்கு மறு கோடு போடுவதில்லை நான். போட்டால் காசி யாத்திரை போகவேண்டியதுதான் கோபத்துடன்" என்பதற்குள்.

ரமணி: "சரி, ஆரம்பித்துவிட்டீர்களா உங்கள் பாடத்தை? இவ்வளவு தூரம் அவன் பேசக் கற்றுக்கொண்டதெல்லாம் உங்களால் தான். நான் வாயாடியா அல்லது நீங்கள் வாயாடியா........"

ராமு: "பாலு, போதும், என்னால் உங்களுக்கு என் கஷ்டம்? நான் போய்விடுகிறேனப்பா! இன்றைய தினம் ராத்திரியே நான் ஊருக்குப் போய்விடுகிறேன்" என்றான்.

பாலு: "அடாடா! எங்கே காசிக்கா போகப் போறேள்! தனியாகப் போக வேண்டாம்ன்னா! உம்! நான் சொன்னால் அப்படித் தான் கோபம் வரும்! நாளைக்குக் கலியாணம் ஆன பிறகு எங்களை ஒரு நிமிஷம் கூட நினைக்கமாட்டீர்கள்" என்று சொல்லிவிட்டு ரமணியின் பக்கம் திரும்பித் "தாயே! பெண் பார்த்தாய்விட்டதா" என்றான்.

ரமணி: "அதெல்லாம் எனக்குத்தெரியாது. நான் சொன்னதென்னவோ வாஸ்தவம்தான். இவன் இந்த இடத்தை விட்டுக் கலியாணம் செய்துகொள்ளாமல் ஊருக்குப்போக்கூடாது. இந்தத் தை மாதம் கல்யாணம் நடந்தாக வேண்டும். போதும், உங்களுடன் வாயாட யாராலே முடியும்?" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

"ஏண்டா ராமு, அவளைப்போய் நீ வாயாடின்னு சொன்னா சும்மா இருக்கமாட்டாளே. உன் புத்தி எங்கேடா போச்சு? நீ ஒரு பயித்தியக்காரனடா! ரமணி என்ன சொன்னாலும் சரியென்று சொல்லாமல் இப்படியெல்லாம் வம்பு பேசுகிறாயே" என்று கேட்டான் பாலு.

"பாலு, 'தாயைப்போலப் பெண்' என்பது இவள் விஷயத்தில் உண்மைதான். என்ன வாயாடுகிறாள் பார். இவளாவது எனக்குக் கல்யாணம் செய்து வைப்பதாவது? உம்! பார்த்துக்கொள்ளலாம்" என்றான் ராமு.

"ராமு, அவள் சொன்னதைச் செய்துதான் தீருவாள். எனக்குத் தெரியும் அவள் குணம். உன் தங்கையின் குணத்தை உன்னால் தெரிந்து கொள்ள முடியவில்லையே" என்று பதில் சொன்னான் பாலு.

அன்றைய தினம் சாயந்திரம் பாலு ராமுவைச் சபாவிற்கு அழைத்துச் சென்றான். சிவராமய்யர் ராமுவை சந்தோஷத்துடன் வரவேற்றார். திங்கட்கிழமை சபாவில் நடக்கப் போகும் வள்ளி நாடகத்தில் நாரதராக ஆக்ட் செய்யவேண்டுமென்று அவனைக் கேட்டுக் கொண்டார். ராமுவும் சரியென்று ஒப்புக் கொண்டான்.

திங்கட்கிழமையன்று ராமுவுக்கும் பாலுவுக்கும் ஒழிவே கிடையாது. அன்றைய தினம் நடக்கப்போகும் நாடகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டிருந்தான் பாலு.

நாடகம் சரியாய் மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாயிற்று. ஆட்டமும் ரொம்ப ஜோராகத்தான் நடந்துகொண்டிருந்தது. வள்ளிக்கும் நாரதருக்கும் தர்க்கம் நடந்துகொண்டிருக்கும் சமயம், நாரதரின் (ராமுவின்) கண்கள் தற்செயலாக முன் ஸீட்டில் ரமணியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த ஒரு பெண் மீது சென்றது. நாடகத்தை ரஸித்துக் கொண்டே பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெரியவருடன் பேசிக்கொண்டிருந்தாள் அப்பெண். நாரதரின் கண்கள் செல்லும் திசையை ஒருவர் மட்டும் கவனித்தார். "பலே! பையன் அகப்பட்டுக் கொண்டான் வலையில்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டார் சிவராமய்யர். இதைக் கவனித்த பாலுவும் அவரிடம் வந்து, "சார்! இனி சிரமமேயில்லை. பையன் தானே வலுவில் வந்து கேட்பான். உங்களிடம் இது விஷயமாய் அவன் ஏதாவது கேட்டால் சரியானபடி பதில் சொல்லிவிடுங்கள். எதற்கும் உள்ளே போய் அவனைக் கொஞ்சம் தட்டி விடுங்கள்" என்றான்.

அந்த சீன் முடிந்ததும் சிவராமய்யர் உள்ளே போய் நாரதரைப் பார்த்து (நாடகம் முடியும்

வரையில் ராமுவை நாரதர் என்றே அழைப்போம்) "என்னப்பா! ஆட்டம் எல்லாம் உன்னால்தான் நல்ல பெயர் வாங்கவேண்டும். ஆட்டத்தின்மீது கொஞ்சம் கவனமாக இருப்பாயானால் உனக்கு மிகவும் புண்ணியமுண்டு" என்றார்.

இது பாலுவின் வேலையாகத்தானிருக்க வேண்டும் என்று மனதில் எண்ணிக்கொண்டு "அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு என்னத்துக்கு சார். அது என்னுடைய பொறுப்பு. அதிருக்கட்டும், அதோ முன் ஸீட்டில் ரமணியின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பெண் யாரென்று தெரியுமா உங்களுக்கு?" என்று கேட்டார் நாரதர்.

"ஏன் அவளிடமும் போய் ஏதாவது கலகம் மூட்டி வேடிக்கை பார்க்கலாம் என்ற உத்தேசமா!" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் சிவராமய்யர்.

"இல்லை சுவாமி, விளையாட்டல்ல. எனக்கு அவசியம் தெரியவேண்டும். காரணமாய்த்தான் கேட்கிறேன்" என்றான் மறுபடியும். இதற்குள் பாலுவும் அங்கு வந்துசேர்ந்தான்.

"பாலு, ரமணியின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பெண் யாரென்று தெரியுமா? நாரதர் கேட்கிறாரப்பா!" என்றார் சிவராமய்யர்.

"பேஷ்! நாரதரே! நல்லவேலை செய்தீர்! இங்கே வள்ளிக்கும் சுப்பிரமணியருக்கும் கலகத்தை மூட்டிவிட்டது போதாதென்று அப்பெண்ணையும் ஏதாவது கலகத்தில் மாட்டிவிட்டு வேடிக்கை பார்க்கலாம் என்ற எண்ணமா? பாவம்! அந்தப் பெண்ணுக்கு இன்னும் கலியாணமாகவில்லை. கலியமாண பிறகு ஏதாவது கலகம் மூட்டிவிட்டாலும் பலனுண்டு. நீயும் நானும் வேடிக்கை பார்க்கலாம். இப்பொழுது ஆட்டம் முடியட்டும். நாளையதினம் எல்லாம் சாவகாசமாகப் பார்த்துக்கொள்ளலாம்" என்றான் பாலு.

ராமுவும் அதற்கு மேல் ஒன்றும் பேசாமலிருந்துவிட்டான்.

நாடகம் முடிந்ததும் மூவரும் வீடு வந்து சேர்ந்தனர். வழி நெடுக ராமுவின் எண்ணமெல்லாம் நாடகக் கொட்டகையில் பார்த்த பெண்ணின் மேலேயே இருந்தது.

இரவு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது பாலு ரமணியைப் பார்த்து, "ரமணி, நாடகக் கொட்டகையில் உனக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த பெண்ணைத் தெரியுமா உனக்கு? அந்தப் பெண்ணை ராமுவுக்குக் கல்யாணம் செய்து வைக்கலாமா?" என்று கேட்டான். ராமு பதில் பேசாமல் இருந்தான். பாலுவும் தன் மனதிற்குள் சிரித்துக்கொண்டே படுக்கச் சென்றுவிட்டான்.

மறுநாள் பாலு, ராமு, ரமணி மூவரும் சாப்பிட்டானதும் சிவராமய்யர் வீட்டுக்குப் போனார்கள். சிவராமய்யர் வீட்டில் எல்லாரும் சாப்பிட்டுவிட்டு கூடத்தில் உட்கார்ந்துகொண்டு தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தார்கள். சிவராமய்யரும், ஒரு பெரியவரும் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எதிரில் லக்ஷ்மியம்மாளும் (சிவராமய்யர் சம்சாரம்) ஒரு பெரியம்மாவும் ஒரு பெண்ணும் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.

"சிவராமா! நான் போட்ட கடுதாசிக்குக் கூட பதில் போடவில்லையே! என்னப்பா! எங்கேயாவது லலிதாவுக்கு வரன் ஏதாவது கிடைத்ததா, இல்லையா?" என்று பெரியவர் கேட்டார்.

"அண்ணா! அதைப்பற்றி உங்களுக்குக் கவலையே வேண்டாம்! மாப்பிள்ளையே பெண்ணைத் தேடிக்கொண்டு வருவார். மாப்பிள்ளை அகப்படவில்லையே என்ற கவலையை உங்கள் மனதிலிருந்து முற்றிலும் அழித்துவிடுங்கள். பெண்ணுக்குக் கலியாணமாகாமல் நீங்கள் இவ்விடம் விட்டு நகரக்கூடாது. இதோ நான் சொல்வதைமாத்திரம் கேளுங்கள். அப்படியே நீங்களும் செய்யவேண்டும்." பெரியவரிடம் ஏதோ ரகசியமாகச்சொல்ல, அவரும் சிறித்துக்கொண்டே சரியென்று ஒப்புக்கொண்டார்.

சிவராமய்யர் சொல்லி முடித்ததும்தான் மேலே சொன்னபடி ராமுவும், பாலுவும் உள்ளே வந்தார்கள்.

பாலுவைக்கண்டதும் பெரியவர் புன்சிரிப்புடன் உட்காரவைத்துக்கொண்டு, "அப்பா, நேற்று நாரதராய் ஆக்ட்செய்தவர் ரொம்ப ஜோராய்த்தான் நடித்தார்! சிவராமன், அவன் உன் மச்சினன் என்று சொன்னபிறகு இன்னும் சந்தோஷமாய்விட்டது. அந்தப் பையனுக்குக் கலியாணமாய்விட்டதா என்ன?" என்று கேட்டார்.

பாலு: "இல்லை சார்! அவன் கலியாணத்தைப் பற்றி எனக்கென்ன கவலை? அப்பா, அம்மா இருக்கும்போது நான் என்ன செய்யமுடியும்? 'எல்லாம் அவனிஷ்டம்'' என்று ஒன்றும் தெரியாதவன்போலிருந்துவிட்டான்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் ரமணி சும்மா இருக்கவில்லை. சிவராமய்யர் சம்சாரம் லக்ஷ்மியம்மாளை நன்றாய்த்தெரியும். அவளைப்பார்த்து, "மாமி! இந்தப்பெண் யார்? கலியாணமாகிவிட்டதா இல்லையா?'' என்று கேட்டாள்.

லக்ஷ்மி: "கலியாணத்துக்குத்தான் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறேன். உங்கண்ணாவுக்குக் கலியாணம்பண்ணிக் கொடுக்கலாம் என்று யோசனை செய்தேன். ஆனால், உங்களுக்குப் பெரிய இடமாயிருந்தால்நல்லது.''

ரமணி: "பெரிய இடமாவது, சின்ன இடமாவது'' என்று சொல்லிவிட்டு, லலிதாவைப் பார்த்து "லலிதா! எங்கண்ணாவைக் கலியாணம் பண்ணிக்கொண்டால் ரொம்பக் கஷ்டப்படுவாயே! கொஞ்சம் என்னைப்போல் வாயாடியாய் இருக்கணும்'' என்று சொல்லிவிட்டு, "மாமி! நீங்கள் எங்கும் பார்க்கவேண்டாம். நான் நாளைக்கு அம்மாவுக்குக்கடுதாசி போட்டு இதை முடித்துவிடுகிறேன். எங்கம்மாவை ஏய்ச்சிண்டு வருவதுபோல என்னையும் ஏய்க்க முடியாது'' என்று சொல்லிவிட்டு, "எங்கே! லலிதா! ஒரு பாட்டுப்பாடு பார்க்கலாம்! வெட்கப்படாதே!'' என்று ரமணி கேட்க, லலிதா "என்றைக்கு வருமோ சிவகிருபை'' என்ற பாட்டைப் பாடினாள். ராமு அப்படியே ஸ்தம்பித்துவிட்டான். அதே பாட்டை, டெல்லியிலிருந்து ரிலே செய்யப்பட்டிருந்ததை வெள்ளிக்கிழமை தன் வீட்டில் கேட்டிருக்கிறான். குரல், ராகம் எல்லாம் ஒன்றாய்த்தான் இருந்தது. யாரைக் கேட்பது? ரமணியும் ஸ்தம்பித்துப்போய்விட்டாள்.

பிறகு அவர்களிடம் கொஞ்சநேரம் மற்றக் காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு வீட்டிற்குச் சென்றாள்.

அன்றைய தினமே தன் கணவனுக்குத் தெரியாமல், தாயாருக்குக் கடிதம் எழுதிப் போட்டாள்.

மறுநாள் பாலுவும் சாம்பசிவய்யருக்குக் கடிதம் எழுதினான். ராமுவிற்கு விவாகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதையும் உடனே புறப்பட்டு வரும்படியும் எழுதியிருந்தான்.

மறுநாள் பாலுவும் ராமுவும் கூடத்தில் உட்கார்ந்துகொண்டு ஊர் வம்புகளையெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள். ராமு பாலுவைப் பார்த்து, "பாலு, அந்தப் பெண் லலிதாவை நான் கல்யாணம் செய்துகொள்ளும்படியான ஏற்பாட்டை நீதான் செய்யவேண்டும். அப்பாவுக்கு நீயே லெட்டர் எழுது. உன் பேச்சை அவர் தட்டவே மாட்டார். விளையாட்டுச் சமாசாரமல்ல; என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான்.

"ராமு, என்ன இவ்வளவு அவசரப்படுகிறாய்? அப்பாவுக்கு லெட்டர் போட்டிருக்கிறேன். அவர் வந்து ஜாதகம் எல்லாம் பார்த்துத்தானே செய்யவேண்டும்? கலியாணம் என்றால் நினைத்தவுடன் நடக்கக்கூடிய காரியமென்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்!'' என்றான் பாலு.

"ஜாதகமாவது, பார்ப்பதாவது? அதெல்லாம் சுத்த நான்சென்ஸ். நீ எப்படியாவது இதை முடித்துக்கொடுத்துத்தான் ஆகவேண்டும்? நானும் அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டுதான் ஆகவேண்டும்'' என்றான் ராமு தீர்மானமாக.

"சரி, அப்படியானால் முயற்சி செய்து பார்க்கிறேன்'' என்றான் பாலுவும்.

வெள்ளிக்கிழமை காலை சாம்பசிவ அய்யரும் கமலம்மாளும் சென்னை வந்து சேர்ந்தார்கள். ராமு மாத்திரம் ஒன்றும் தெரியாமல் விழித்தான். அவர்கள் இங்கும் வந்து தன்னை அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணை கல்யாணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்துவார்களோ என்று நினைத்துப் பேசாமல் போய்விட்டான்.

பத்து மணிக்குள்ளாகவே சாப்பிட்டுவிட்டு, கூடத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது பாலு தன் மாமனாரிடம், லலிதா யாரென்றும் அவளுடன் கூட இருக்கும் பெரியவரின் பெயர், உத்யோகம் முதலியவைகளையும், சிவராமய்யர் யார் என்பதையும் விவரமாகச் சொன்னான்.

"பாலு, நல்ல காரியம் செய்தாய்! அதே பெண்தானிவள். மடையன், பட்டிக்காட்டுப் பெண்ணாம்! அவர் ஏதாவது கேட்டாரா?— இல்லையே? இவன் ஏதாவது தத்துப்பித்து என்று உளறி வைக்கப்போகிறான். எதற்கும் இன்று சாயங்கிரம் அவர்களைப் போய்ப் பார்க்

கிலாம்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போது, கமலம்மாள் தன் கணவனிடம் வந்து லலிதாவை எப்படியாவது நிச்சயம் செய்து, கலியாணத்தை முடித்துவிடும்படி சொன்னாள். பிறகு பாலுவைப் பார்த்து, "என் மாப்பிள்ளை பெண் நன்றாயிருப்பாளோ இல்லையோ?" என்று கேட்டாள் சிரித்துக்கொண்டே.

"மாமி, பேஷ்! ராமுவே பெண்ணைப் பார்த்துவிட்டு, அவளையே கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று பிடிவாதமாயிருக்கும்போது, பெண் அழகாயில்லை என்று யார் சொல்ல முடியும்? ஆனால் ரமணியைப்போல் வாயாடியாக இருக்கவே மாட்டாள்" என்று சிரித்துக்கொண்டே கூறினான்.

"பாரம்மா, எதுக்கெடுத்தாலும் என்னை வாயாடின்னு சொல்ரார் அம்மா!" என்றாள் ரமணி.

"சரிதாண்டி போ! சொல்லரத்துலே என்னடி தப்பு? வாஸ்தவம்தான், நீ வாயாடிதான். சிறு பெண்ணா லக்ஷணமா உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போ" என்றார் சாம்பசிவய்யர் சிரித்துக்கொண்டே,

"ஆமாம், இரண்டு பேர்களாகச் சேர்ந்து கொண்டுவிட்டீர்களோ இல்லையோ? நான் வாயாடிதான். நீங்க மாத்திரம் சமத்தாயிருங்கோ' என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்றாள் ரமணி.

சாயந்திரம் ராமு வெளியே போகும் சமயம் கமலம்மாள் ராமுவைக் கூப்பிட்டு, "என்ன, ராமு, அன்றைய தினம் நான் கேட்டதற்குப் பதில் உண்டா இல்லையா? என்ன சொல்றே?" என்று கேட்டாள்.

மறுபடியும் அந்தப் பழைய பெண்ணைத் தான் சொல்கிறாள் என்று எண்ணி, "அம்மா! நீ பார்த்திருக்கும் பெண் எனக்கு வேண்டாம் லலிதாவைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்வேன்" என்று சொல்லிவிட்டான்.

"நான் சொன்ன பெண் மாத்திரம் பட்டிக்காடு, நீயாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ளப்போகும் பெண் மாத்திரம் பட்டிக்காடு இல்லையோ? மடையா! அதே பட்டிக்காட்டுப் பெண்தாண்டா இவளும். நான் ஏற்பாடு செய்திருக்கும் பெண்ணும் நீ பார்த்திருக்கும் பெண்ணும்—இருவரும்—ஒருவரே தான்! தெரிந்ததா இப்பொழுது? என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் கமலம்மாள்.

"பட்டிக்காட்டுப் பெண் என்று இவளையா சொன்னான்? பேஷ்! புருஷாளுக்கு எப்போதும் அவசரம்தானம்மா, நிதானமென்பதே கிடையாது" என்றாள் ரமணியும்.

இதற்குள் பாலு அங்கு வந்து, கமலம்மாளையும் சாம்பசிவ அய்யரையும் அழைத்துக் கொண்டு சிவராமய்யர் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். லலிதா, அவள் தகப்பனார், சிவராமய்யர் மூவரும் கூடத்தில் உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தனர்.

சாம்பசிவ அய்யர் சிவராமய்யருடன் கலந்து பேசி, விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்து, ஒரு நல்ல முகூர்த்த தினத்தையும் நிச்சயம் செய்தனர்.

அந்தச் சுப முகூர்த்தத்தில் சௌ. லலிதாவிற்கும் சிரஞ்ஜீவி ராமு என்கிற ராமநாதனுக்கும் விவாக மகோற்சவம் சிறப்பாக நடந்தேறியது.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின்
டானிக்

புயலும் அமைதியும்

சு. சுப்புலட்சுமி

பொங்கிப்பாயும் மலையருவிக்கு அருகிலுள்ள சுனை, நீல மலர்களும், தாமரை மலர்களும் நிறைந்து விளங்கிற்று. அலை மோதும் அந்நீரில் மரங்களின் வேர்க்கற்றைகள் மூழ்கி அலைந்தன. சக்கரவாகப் பக்ஷிகள் தாமரை இதழினுள் உள்ள வித்துக்காகச் சச்சரவிட்டுக் கொண்டிருந்தன. சிள் வண்டுகள் மலர்க்கு மலர் தாவி மயங்கிக் களியாடின. கரையோரமுள்ள விருக்ஷங்களில் குயில்கள் கூவவும், மயில்கள் ஆடவும் மன்மதன் விடுத்த தூதினை விளக்கிக் காட்டின. செங்குழையுடன் விளங்கும் தேமா மரங்களும், நெற்பொரி போன்ற மலருடைய புன்கு மரங்களும் ஆங்கு அடர்ந்திருந்தன. இயற்கைத் தேவதை அவ்விடத்தில் பூர்ண சௌந்தர்யத்துடன் காணப்பட்டாள். அவளுடைய எல்லையற்ற ஆடம்பரங்களையும் கவனியாது சுதர்சனன் என்னும் சிறுவன் சந்தன மரத்தடியில் வீற்றிருந்தான். அவன் சிந்தனை முற்றிலும் கையில் கொண்ட ஓலையுடன் ஒன்றி நின்றது. 'ரிக்' [illegible]ன் இறுதியிலுள்ள தொடராகிய 'கிலம்' என்பதைப் பாராயணம் செய்துகொண்டிருந்தான்.

சுதர்சனனுக்குப் பதினொரு வயதிருக்கும். அழகிய தோற்றமுடையவன், கனிந்த பார்வையுடையவன். புண்ய வாழ்க்கையையே நோக்கமாகக் கொண்டவன். முகத்தில் புத்தியின் தீக்ஷண்யம் ஒளிர்ந்தது. மனோலயிதமான நேத்திரங்களில் கருணை பளிச்சிட்டது. விசால நெற்றித் தடத்திலே அபூர்வமான காந்தி. பரந்த மார்பை மின்போல் ஊடுருவிற்று பூணூல். செந்தாமரை நிறமுடைய அவனிடம் வெண்பட்டாடையும் ஒரு அலாதி சோபையை அடைந்திருந்தது.

சுதர்சனன் மஹரிஷி ஸ்ரீகண்டரின் அந்தரங்க சிஷ்யன். பெற்றோர்கள் அவனை இளமையிலேயே ஸ்ரீகண்டரிடம் ஒப்புவித்துப் பரகதி அடைந்தார்கள். அன்றுமுதல் அவரே அவனைக் காப்பாற்றி வந்தார். சிஷ்யனுக்குரிய முறைப்படி அவனுக்குக் கல்வி பயில்வித்தார். அன்பும் ஆதரவும் வைத்துப் பேணி வந்தார். அவனும் உண்மைச் சிஷ்யனுக்குரிய கடமைகளை உளமறிந்து பயபக்தியுடன் செய்து வந்தான்.

இன்று அவன் பாராயணம் செய்துகொண்டிருக்கும்போது சிறுமி ஒருத்தி அவன் பின்புறமாக வந்தாள்.

அவள் திருமேனி அன்றலர்ந்து யாராலும் முகராத புஷ்பமாயிருந்தது. கார் போன்றடர்ந்திருந்தது கூந்தல். அதில் புனைந்த புது மலர்கள் வழிநெடுக உதிர்ந்தன. நீல விழிகளில் அஞ்சனம் இட்டிருந்தாள். நெற்றியில் மூன்றாம் பிறை மதிபோன்று திலகம் வளைந்திருந்தது. செவிகளிலிருந்து தொங்கும் மின்னவிர் மணிக்குழை மிளிர்ந்தன. மென்மையான அவளுடைய சங்குப் போன்ற மேனியை நீலநிற ஆடை மறைத்திருந்தது. எழில் நிறைந்த அவள் சுதர்சனனை மெதுவாக நெருங்கினாள். தன் தளிர்க் கரங்களால் அவன் விழிகளை மூடினாள். "யாரென்று சொல், பார்க்கலாம்?" என்று கழறினாள்.

சுதர்சனன் திடுக்கிட்டுத் திரும்பினான். சிவந்த இதழ்களில் வெள்ளியரும்பு போல் புன்னகை தவழ மஹரிஷி ஸ்ரீகண்டரின் ஏக புத்திரி ப்ரமத்வரை காட்சியளித்தாள். அன்பினால் அவள் செய்தது அவனுக்கு மகிழ்ச்சியையே விளைத்தது.

சிறிது நேரம் அவனும் மந்தஹாஸம் செய்தான். பின் மேலே பாராயணம் செய்யலானான்.

ப்ரமத்வரை வெறுப்புக் கொண்டாள். "சதாகாலமும் உனக்கு 'ரிக்'குத்தானா?" என்று இயம்பி அவனிடமிருந்த ஓலைகளைப் பற்றினாள். சுனையில் எறிந்தாள். சுதர்சனன் கையைப்பற்றி "வா விளையாடுவோம்" என்று இழுத்தாள்.

அவள் செய்கை சுதர்சனனுக்கு வெறுப்பை மூட்டிற்று. அவன் தன் கரங்களை அவள் பிடியினின்று விடுவித்துக்கொண்டான். "போ, நீ விளையாடு. நான் வரமுடியாது" என்று அவளைத் தள்ளினன்.

அவள் கரையோரமாக இருந்தபடியால் சுனையில் விழுந்து விட்டாள்.

அதைக் குறித்துப் பாலிகை வருத்தப்படவில்லை. மகிழ்வுடனே நீரில் விளையாடினள். நீரைச் சுதர்சனன்மீதும் வாரியிறைத்தாள். தாமரை மலர்களையும், நீல மொக்குக்களையும் பறித்து விசினள்.

இருந்தும் அக்களியாடல்கள் அன்பாக அவன் மனதிற் படவில்லை. அவன் கோபமே அடைந்தான். தீக்ஷண்யமாக அவளைப் பார்த்தான். கடுமையான குரலில், "ப்ரமத்வரே! ஓலைகளை எடுத்துக் கொடுக்கின்றாயா இல்லையா?" என்று கேட்டான்.

அவள் சிரித்துக்கொண்டே, "முடியாது, நீ என்ன செய்வாய்?" என்று கேட்டாள்.

"இதோ, மஹரிஷியிடம் சென்று உன் செயல்களைப்பற்றிக் கூறுகிறேன்" என்று கடிந்து கிளம்பினன்.

ப்ரமத்வரை சங்கை கொண்டாள், "சுதர்சன, நில்; உன் ஓலைகளை இதோ எடுத்துக் கொடுக்கிறேன்" என்று பலமாகக் கூறினள்.

சுதர்சனன் நின்றான். அவள் ஓலைகளை எடுத்தாள். மிக்க ஆழத்தில் ஒரு ஓலை மிதந்து கொண்டிருந்தது. அதை எடுக்க அவள் வேகமாக நீந்திச்சென்றாள். திடீரென்று அவள் கைகால்கள் சோர்ந்தன. மூச்சுத் திணறிற்று. அவள் திக்கு முக்காடினள். ஜலத்தில் அமிழலானள்.

கரையில் நின்று கவனித்த சுதர்சனன் திடுக்கிட்டான். தனக்கு ஏற்படக்கூடிய பிராணபத்தையும் கவனிக்கவில்லை. தொபீரென்று சுனையிற் பாய்ந்தான். வேகமாக நீந்தினன். அவளை ஒரு கையாற் பற்றிக்கொண்டான். ஓலைகளையும் எடுத்துக்கொண்டான். மிகச் சாமர்த்தியமாக நீந்தி அவளைக் கரையிற் சேர்த்தான்.

அவள் மூர்ச்சையாய் இருந்தாள். அவன் எங்கிருந்தோ விரைவில் பச்சிலைகளைக் கொணர்ந்தான். அவளைத் தெளிவித்தான்.

அவள் கண்கள் விரிந்தன. சுதர்சனன் பரிதாபமாக அவளை நோக்கினன். "ப்ரமத்வரே! என் பிழையைப் பொறுத்துக்கொள்" என்றான்.

அவள் புன்முறுவலுடன் எழுந்தாள். "பிழை தானகவேதான் ஏற்பட்டது; நீ ஒன்றுஞ் செய்துவிடவில்லை" என்று கூறி அவனை விளையாட இழுத்துச் சென்றாள்.

2

ப்ரமத்வரை பெண்மைக்குரிய மென்மையொடு சுதர்சனனிடம் பழகி வந்தாள். அவள் களியாடல்களில் மையலெழும் செயல்களே நிறைந்திருந்தும் மாசு படியவில்லை. நட்பே நிறைந்து ததும்பிற்று. களங்கமற்ற மனதினனை சுதர்சனன் மனதிலும் அந்நட்பு விகற்பத்தை மூட்டிவிடவில்லை. அவனுக்கும் அவளிடம் பாசம் வளர்ந்தது.

நாளடைவில் நட்புப் பெருகிற்று. இதற்குள் சம்வற்சரங்கள் பல சென்றுவிட்டன.

சுதர்சனன் சகல கலைகளையும் கற்றுக்கொண்டான். மஹாதபஸ்விகளுக்கும் புலப்படாத வேதாந்தத்தின் மறு கரையை அடைந்தான். அநேக வேதங்களை வியாக்யானம் செய்து காட்டினன். பல காவ்யங்களையும் இயற்றினன். ரஸக் கலைகளில் தேர்ந்த அவன் எப்பொழுதும் ப்ரமத்வரையையே நினைத்துக் கொண்டிருந்தான்.

ப்ரமத்வரையும் பல மாறுதல்களுடன் விளங்கினள். யௌவனம் அவளிடம் பூர்ண விகசிதம் பெற்றிருந்தது. அவள் பார்வையில் மையல் தோன்றிற்று. குரலிசையில் ப்ரேம வசனங்கள் துள்ளின. செய்கை, நடத்தை முதலியவைகளிலும் பதட்டம் ஏற்பட்டது. காரணமில்லாமல் சுதர்சனனிடம் சென்று பேசுவதும், நகைப்பதுமாக இருந்தாள்.

ஓர் தினம் சுதர்சனன் வால்மீகி ராமாயணத்திற்கும் வியாஸபாரதத்திற்கும் உள்ள நிஷ்கல்மஷமான தெய்வீக ப்ரேமையைக் குறிக்கும் காவ்யங்களை இயற்றிகொண்டிருந்தான். அவ்வமயம் ப்ரமத்வரை அங்கு வந்தாள். முழு ஊக்கத்துடன் முனைந்தெழுதும் அவன் பின்புறமாகச் சென்றாள். காவ்யங்களைப் படித்தாள்.

சுதர்சனன் திரும்பினன்.

முற்றாத முல்லைக் கொடிபோல் துவண்டு நிற்கும் ப்ரமத்வரையைக் கண்டான். அவன் சிந்தைகள் அனைத்தும் அவள்பால் சென்றன. செம்பஞ்சுக் குழம்பையூட்டிய பாதங்களைப் பார்த்தான். பால் வளையல்கள் அணிந்த கரங்களைக் கண்டான். மெல்லிய மஞ்சள் பட்டாடை அவள் உடலழகை மறைத்திருந்ததைப் பார்த்தான். முகத்தில் ஒருவித பிரகாசத்தைப் பார்த்தான். நீலாஞ்சனம் நிறைந்த விழிகளினால் அவள் தன்மேல் செலுத்தும் மன்மத பாணங்களைத் தாங்கிக் கொண்டே இருந்தான். சுவாதி நக்ஷத்திரத்தில் மழைத்துளியை உட்கொண்ட சாதகப் புள்போல் அவள் காணப்பட்டாள். அவளைப் பார்த்துப் பார்த்து அவன் கண்கள் சோர்வுற்றன. சரத்கால சந்திரனைக்கண்ட சகோரம் போல் சுதர்சனன், தன் தேக உணர்வையே துறந்திருந்தான்.

ப்ரமத்வரை அவனைப்பார்த்து குறுநகை செய்தாள். இன்னிசையில் "சுதர்சனா! எங்கே உன் காவயங்களைக்கொடு, பார்க்கலாம்" என்றாள்.

"காவ்யங்களைப் பார்க்கக் கொடுப்பதாக உத்தேசமில்லை!" என்றான் அவன்.

"அப்படியானால் யாழில் இசைத்துக் காட்டுகின்றேன்" என்றாள்.

"ஒருவேளை கொடுக்கப்படலாம்" என்றான்.

"கட்டாயம் கொடுத்துத்தானாகவேண்டும்!"

அவள் வேகமாய்ப்போய் பர்ணசாலையில் இருந்து தன் மகரயாழை எடுத்துவந்தாள். அவன் காவ்யங்களைக் கொடுத்தான்.

முழுத்திறனுடன் எழுதப்பட்டுள்ள அப்பிரேம காவ்யங்களை அவள் யாழில் இசைத்தாள். மனம் உருகி உருகிப் பாடினாள்.

சுதர்சனன் ரஸானந்தத்தில் மூழ்கினான். இன்னிசை கானமும், யாழின் நாதமும் அவனைக் கனவுலகிற்குக் கொண்டுபோய்விட்டன. பிரும்மஸதஸில் தான் வீற்றிருப்பதாயும், ஸரஸ்வதிதேவி யாழிசைத்துக் காட்டுவதாயும் அவன் எண்ணிக்கொண்டிருந்தான்.

கானவர்ஷம் முடிந்தது. கனவும் கலைந்தது. சுதர்சனன் அவளைப் பலவாறு வியந்து பாராட்டினான். அவள் இன்பக்கண்ணீர் வடித்தாள்.

சுதர்சனன் மனம் என்றுமில்லா உவகையைப் பெற்றிருந்தது. ஆகவே அவன் தனது எண்ணங்களை வினவலானான். "ப்ரமத்வரே! என் மனமொக்கு நெகிழ்ந்துவிட்டது. உன்பால் கொண்ட நட்பு மட்டின்றிப் பெருகிவிட்டது. நான் உன்னை நேசிக்கின்றேன். உன்னைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்ள விரும்புகின்றேன்....உன் அபீஷ்டம் என்ன?" என்றான்.

ப்ரமத்வரையின் தூயஇதயம் புளகித்தது. சரீரம் முழுவதும் இன்பம் சுரந்தது. பாவ ரஸத்துடன் அவனை நோக்கினாள். உடனே உதடுகளை உடைத்துக்கொண்டு. 'எனக்குப் பரம சம்மதமே!" என்ற சொற்களும் வெளி வந்தன.

சுதர்சனனுக்கு இன்பந் தாங்கமுடியவில்லை. பளிங்கிலும் மழுமழுப்பான அவள் கரங்களைப் பற்றினான். அந்த ஸ்பரிசானந்தத்தால் அவள் விழிகளை மூடிக்கொண்டாள். அவன்மீது சாய்ந்து மூர்ச்சையானாள்.

3

ப்ரமத்வரைக்கு வயதாகிவிட்டதே! அவளுடைய கல்வி, அறிவு, அழகுக்குத் தகுந்தாற்போல் புருஷனைத் தேடவேண்டுமே!" என்ற எண்ணங்கள் ஸ்ரீகண்டரின் மனதைச் சூழ்ந்துகொண்டன. நீண்டகாலமாக ஆலோசித்துப் பார்த்தார் திட்டமான முடிவு தென்படவில்லை. இறுதியில் இவ்விஷயமாக மகளின் இஷ்டத்தை அறிய அவாக் கொண்டார்.

ப்ரமத்வரையை அழைத்தார். அவள் பிதாவை வணங்கி நின்றாள். மகளை அருகில் அமர்த்தி, "உனக்குப் பாணிக்கிரஹணம் செய்விக்க விரும்புகிறேன். நீ யாரை விரும்புகின்றாய்?" என்று மெள்ளக் கேட்டார்.

ப்ரமத்வரை ஆனந்த பரவசையானாள். தன் உள்ளத்தில் நிறைந்து ததும்பும் காதலை வெளியிட அவள் துடியாய்த்துடித்தாள். ஆனாலும் நாணம் அவள் தலையைத் தாழ்த்திற்று. கலங்கிய உள்ளத்தோடும், கண்களோடும் பிதாவைப் பார்த்தாள். ஆர்வம் நிறைந்தெழும் குரலில், "பிதா! என் மனமானது சுதர்சனனிடம் ஒரே பாவ ரஸத்துடன் படிந்திருக்கிறது" என்றாள்.

ஸ்ரீகண்டர் மட்டற்ற மகிழ்வு எய்தினர். தம் குமாரியின் விருப்பப்படியே மணம் நடத்

துவதாக வாக்களித்தார். அவர்கள் குடிமை பூண்டு வாழும் நன்னாளை ஆவலுடன் பார்க்க மிக விரும்பினர்.

“தேவ!” என்ற குரல் கேட்டது.

அவர்கள் திரும்பிப்பார்த்தார்கள். சுதர்சனன் வந்து குருவை நமஸ்கரித்தான். ப்ரமத்வரை கண்களைப் புதைத்துக்கொண்டாள். ஸ்ரீகண்டர் புன்னகையுடன் அவனைப் பார்த்தார். “என்ன சமாசாரம்?” என்று வினவினர்.

“தேவ! வத்ஸதேசத்தரசன் உதயணன் வேட்டைக்காக வந்திருக்கின்றார். நமது ஆச்ரமத்திலே தங்க விரும்புவதாகக் கூறுகிறார்” என்று கூறினன்.

“அப்படியா? மிகவும் சந்தோஷம். மாணவர்களையும், ஆச்ரம வாசிகளையும் அழைத்து வா. அரசரை எதிர்கொண்டழைக்கவேண்டும்!” என்றார்.

அதன்படி ஏற்பாடுகள் நடந்தன. உதயணன் அன்புடன் வரவேற்கப்பட்டு, ஆதித்யம் பெற்றுக்கொண்டான். அன்றிரவு ஸ்ரீகண்டரின் விருப்பப்படி சுதர்சனன் அநேக காவ்யங்களை இயற்றிப் பாடிக்காட்டினன்.

உதயணன் அவைகளைக் கேட்டுப் பரமானந்தத்தை அடைந்தான். ஆனல் அதைவிட அவன் அருமைப் புதல்வி ராஜேச்வரியே அவன் காவ்யங்களுக்குத் தன் மனதை முற்றிலும் பறிகொடுத்தாள். இளங்கவிஞனின் அழகும், கவித்வ சக்தியும், கற்பனையும் அவள் இதயத்தைக் கவர்ந்தன. அவனிடம் ஒருவித ஆசாபாசம் அவளுக்குண்டாயிற்று.

மறுநாட் காலை அரசன் வேட்டைக்குச் சென்றான். ஆனல் குமாரி ராஜேச்வரி அன்று பிதாவுடன் செல்லவில்லை, ஆச்ரமத்திலேயே இருந்தாள். எப்படியாவது சுதர்சனனைச் சந்தித்துப் பேசவேண்டுமென்ற அவா மிகுந்திருந்தாள். ஆனல் அதற்குத் தக்க சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. பெருமூச்சுடன் பர்ணசாலையை விட்டுக் கிளம்பினள்.

ஆச்ரமத்தை அடுத்துள்ள பூங்காவிற்குச் சென்றாள். தான் படர்வதற்கு வேண்டிய கோலைத் தேடிக் குழைந்து வளையும் பூங்கொடிகளைக் கண்டாள். மலர்களை ஊதும் வண்டினங்களைப் பார்த்தாள். குயில்கள் மரக்கிளைகளில் காதல் செய்துகொண்டிருப்பதைக் கவனித்தாள். அவள் மனம் சிந்தனையிலாழ்ந்தது. பல எண்ணங்கள் தோன்றின. சுதர்சனன் முகத்தை மலர்களில் கண்டாள். இளந்தென்றலில் அவன் குரலிசையைக் கேட்டாள். அவள் மனோபாவங்களில் அவனே நிறைந்திருந்தான்.

நாற்புறங்களிலும் சூழ்ந்து நிற்கும் இயற்கையின் வரம்பெற்ற ஆடம்பரங்களுக்கு இடையில் இளங்கவிஞன் சுதர்சனன் எதேச்சையாக அங்கு வந்தான். அவனைக் கண்டதும் ராஜேச்வரி அதிக ஆச்சரியமடைந்தாள். வைத்த கண் வாங்காமல் மன்மத பாணங்களைத் தொடுத்தாள்.

சுதர்சனன் திகைப்புற்றான். அவள் பார்வை அவன் மனதைக் கலக்கிற்று. உடனே அவ்விடத்தை விட்டகன்றான்.

ராஜேச்வரி தன் எண்ணம் பலிக்காமல் போய்விட்டதைக் குறித்துப் பெருமூச்சு விட்டாள். கைக்கெட்டியது நழுவிவிட்டதை நினைத்து வருந்தினள்.

அன்றிரவு ராஜேச்வரிக்குச் சிறிதும் உறக்கம் வரவில்லை. எத்தனையோ எண்ணங்கள் அவளிடம் குடிகொண்டிருந்தன. “சுதர்சனன் ஏன் திரும்பிச்சென்றான்? நான் அழகாயில்லையா? என்னுடன் ஏன் பேசக்கூடாது? ...ஆம்! நான் அரசகுமாரியல்லவா? பயந்துவிட்டான்!” என்றெல்லாம் மானஸீகமாகக் கேட்டுப் பதிலளித்துக்கொண்டாள்; பெருமூச்செறிந்தாள். திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவள் போல் “ஆம், அப்படித்தான் செய்யவேண்டும்!” என்று கூறிக் கொண்டாள். பின் நிம்மதியாக நித்திரையிலாழ்ந்தாள்.

வேட்டை முடிந்தது. உதயணன் பரிவாரங்களுடன் அரண்மனை திரும்பவேண்டிய தினம் வந்தது. ராஜேச்வரி தன் பிதாவிடம் தனக்குக் காவ்யம் கற்றுக் கொடுக்கச் சுதர்சனனை அரண்மனைக்கு அழைத்து வரும்படி நிர்ப்பந்தித்தாள். அரசன் தன் செல்வக் குமாரியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய விரும்பினன். கவிராயும் சுதர்சனன் கவித்வ சக்தி அவன் மனதைக் கவர்ந்தது. உடனே மஹரிஷி ஸ்ரீகண்டரிடம் இவ்விஷயத்தைப் பிரஸ்தாபித்து, அவனை அனுப்புமாறு வேண்டிக் கொண்டான்.

ஸ்ரீகண்டர் மகிழ்வுடன் அவனை அனுப்புவதாக வாக்களித்தார். சுதர்சனனைப் பார்த்து, "உன்னை அரசர் அரண்மனைக்கு அழைக்கின்றார். அங்கு நீ கவியாக இருந்து, அவர் மகளுக்குக் காவ்யங்கள் கற்றுக்கொடுக்கவேண்டும். உனக்குச் சம்மதந்தானே!" என்று கேட்டார்.

குருவின் ஆணையைச் சிரமேற்கொள்ளும் சுதர்சனன் மறுத்துக்கூறச் சிறிதும் விரும்பவில்லை. ஆனாலும் அவன் மனம் அரண்மனை போக அவ்வளவாக ஒப்பவில்லை. இருந்தும் குருவின் இஷ்டப்படி போகச் சம்மதித்தான்.

சுதர்சனன் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தான். அவ்வமயம் பர்ணசாலைக்குள் ப்ரமத்வரை வந்தாள். கார்மேகம்போல் கண்ணீர் வடித்தாள். தூய்மையான கன்னங்களில் நீரோடிற்று. விம்மலும் விக்கலுமாக விசித்து விசித்து அழுதாள். "சுதர்சனா!" என்றலறினாள். மின்போல் துவண்டு கீழே வீழ்ந்தாள்.

சுதர்சனன் திடுக்கிட்டான். மிருதுவான கரங்களால் அப்பிணையைத்தழுவி எடுத்தான். எவ்வளவோ கூறி ஆறுதலளித்தான். அவள் வலக்கரத்தை அவன் மார்பில் புதைத்துக்கொண்டு அழுதாள். மெதுவாக அவள் முகத்தை நிமிர்த்தினான். "அன்பே! கலங்காதே. உன்னைப் பிரிய என் மனம் சிறிதும் ஒப்பவில்லை. ஆனால் பிதாவின் ஆக்ஞையை மீறக்கூடாதல்லவா? அவசியம் போகவேண்டுமல்லவா?......அன்பே! உன்னை ஒருகாலும் மறவேன். உறுதியாகக் கூறுகின்றேன். உத்தராயண ஆரம்ப காலத்திற்குள் இங்கு என்னை நீ காண்பாய். நாம் பாணிக்கிரஹணம் செய்துகொண்டு சுகமாய் வாழலாம்.........எனக்கு விடை கொடு" என்றான்.

சோகம் மனதை ஊடுருவிற்று. இதயமே துடிதுடித்தது. கண்ணீரும் கம்மலும் குன்றவில்லை. ஒருவிதமாக அனைத்தையும் சமாளித்துக்கொண்டு, "அன்பே! பிரிந்து நான் என்னமாய் வாழ்வது?" என்றாள். மேலே பேசமுடியவில்லை.

சுதர்சனனுக்கு இன்ன உத்தரம் கொடுப்பதென்று தெரியவில்லை. துயருடன் நீர் மல்கி நின்றான்.

பேரிகைகள் முழங்கின. தாரை வாத்யங்கள் ஒலித்தன. சங்கத்வனி கேட்டது. அரசன் புறப்படும் சமயம் நெருங்கியதைக் காதலர்கள் அறிந்தார்கள்.

ப்ரமத்வரை முடிவில், "உயிரே! அரண்மனையில் நீங்கள் இளங்கன்னியர்களிடம் பழகவேண்டி நேரலாம். ஆகையால் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். மனதைப் பறிகொடுத்து விடக்கூடாது. என்னுயிர் ஜோதி உங்கள் கையிலேயே இருக்கிறது. நீர் இஷ்டப்பட்டால் அதை ஒளியோங்கச் செய்யலாம்; அல்லது அணைத்து இருளடையச் செய்யலாம்" என்றாள்.

வேதனை முற்றிற்று. "ப்ரமத்வரே! அருமையாக வளர்த்த மல்லிகைக் கொடிக்கு யாரேனும் வெந்நீர் ஊற்றுவாரோ?...... என்னைப் பூர்ணமாய் நம்பு" என்றான்.

அவள் அவனை அணைத்துக்கொண்டாள். இருவர் இதழ்களும் இணைந்தன.

4

சுதர்சனன் உதயணனின் ஆஸ்தான கவியாக விளங்கினான். அவன் புகழ் பாரத பூமி முழுவதும் பரவிற்று. அவன் உதயணன் மகளுக்கு முழுத் திறமையுடன் காவ்யங்களைக் கற்றுக்கொடுத்தான்.

முதலில் பக்தி ரஸம் ததும்பும் பாடல்களைப் பயிற்றி வந்தான். ஆனால் ராஜேச்வரி அவைகளை வெறுத்தாள். ஏனெனில் அவளுக்கு அப்போது பூர்ண யௌவன காலம். மனநிலை முழுவதும் மலைபோல் வளர்ந்துகொண்டே இருந்தது. பூவைப்போன்று சுகுமாரமான இளங்கனியை அவள் உள்ளத்தில் நிலைநாட்டினாள். அவனை வயப்படுத்தி விவாகம் செய்துகொள்ள மிகவும் வெறிகொண்டாள். தினே தினே புதுக்கோலம் பூண்டாள். கவிஞனைக் கமலக் கண்களால் துன்புறுத்தினாள். காதல் ததும்பும் காவ்யங்களையே அழகாகப் பாடிக் காட்டினாள்.

சுதர்சனன் அவள் செயல்களைக் கண்டு பயமடைந்தான். ஓரோர் சமயங்களில் அவன் மனமும் சிறிது நேரம் கலங்கிவிடும். உடனே ப்ரமத்வரையின் இன்சொற்கள் செவியில் ஒலிக்கும். தன்னுடைய உறுதிமொழி நினைவிற்கு வரும். ஆறுதல் அடைவான். மனமும் அடங்கி விடும்.

ஆச்ரமத்தில் ப்ரமத்வரை அவனைப் பிரிந்ததிலிருந்து சதாகாலமும் ஏங்கிக் கிடந்தாள்.

சந்திரனைக் காணா கௌமதி என அவள் வாடினாள். மார்பகம் தளர்ந்தது, தோளும் சோர்வுற்றது. இடை மெலிந்து, தேகம் இளைத்து வந்தது. முன்னிருந்த பளபளப்புக் குன்றியது. இலைகள் உதிர்ந்து ஊதல் காற்றில் அசையும் கொடி போல் காணப்பட்டாள்.

நீல விழிகளில் சதாகாலமும் கண்ணீர்தான் தன் கூந்தலை வாரி முடித்துக்கொள்ளவுமில்லை; மலர்களைப் புனைந்துகொள்ளவுமில்லை. தூய்மையான ஆடைகளை அணிந்துகொள்ளவும் இல்லை. சுதர்சனன் வருங்காலத்தையே அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

பௌர்ணமி தினம் நடு யாமம் இருக்கும். சுதர்சனனுக்கு உறக்கம் வரவில்லை. சயனத்திலிருந்து எழுந்தான். சாளரக் கதவைத் திறந்துவிட்டான். விசும்பிடை பால்போல் சந்திரிகை விளங்கிற்று. அதனிடை ராஜேச்வரியின் முகம் தென்பட்டதாகப் பாவனை செய்துகொண்டான். திடீரென்று அவள் முகம் மறைந்து ப்ரமத்வரை காட்சியளித்தாள். கண்களில் நீர் நிறைந்து நிம்மதியற்றவனாய் அந்தப்புர உய்யானம் சென்று உலாவினான். கணத்திற்குக் கணம் இயற்கை, மன்மத விகாரத்தை விளைத்துக்கொண்டிருந்தாள். இளங்கவியின் மனம் குலைந்தது.

அவன் உள்ளத்தில் உணர்ச்சிக்கும் அறிவுக்கும் போராட்டம் நிகழ்கிறது. உணர்ச்சியானது, “அடா, மூடமே! இத்துணை ரமணீகரமான இரவில் நீ மட்டும் ஏன் வியாகுலமடையவேண்டும்? கையிலுள்ள பொருளை ஏன் சுகமாக அனுபவிக்கக்கூடாது? அரசகுமாரிதான் உன்னைப் பூர்ணமாக நேசிக்கின்றாளே!” என்றது. உடனே அறிவு, “அறிவிலி! சறுக்கிவிழாதே. உன் ஹ்ருதய மலரை அனலில் இடாதே. அதன் சாபம் பொல்லாது. மனதைக் கல்லாக்கிக்கொள். அந்த ஜீவனைக் காப்பாற்று!” என்கிறது.

இரண்டிற்கும் பலத்த போராட்டம் ஏற்பட்டது. இந்நிலையில் ராஜேச்வரி காட்சியளித்தாள். அவள் பாவாடையும், பால்வதனமும், பௌர்ணமி சந்திரன் பாற்கடலிலிருந்தெழுவதுபோல் விளங்கின. மூட்டு ஆடையை அணியாததால் அவள் உடலழகு வெளியிற் புலப்பட்டது. காதுகளில் குண்டலம் ஒளி வீசிற்று. இடையில் மேகலை ஒலித்தது. சிலம்புகள் ‘சில் சில்’லென ஆர்க்க அவனருகே வந்தாள். மான்போல் நோக்கினாள். அவன் மனோவிகாரத்துடன் இருப்பதை அவள் அறிந்தாள். தனது பவள வாயினைத்திறந்து, திருந்திய தந்தவரிசைகளைக் காட்டினாள்.

சுதர்சனன் நிலைகுலைந்து போனான். சுக்கான் இழந்த மரக்கலம்போல் மனம் எங்கோ கடும்புயலில் ஓடிக்கொண்டிருந்தது. இதயம் ‘படபட’வென்றடித்துக்கொண்டது. பயத்தினால் சரீரம் முழுதும் நடுங்கிற்று.

ராஜேச்வரி குயிலிசையில், “கவிஞரே! காதலித்தல் பாபமாகுமா?” என்று வினவினாள்.

அவன் படபடவென்று, “யார் சொன்னார்கள் அப்படி?” என்றான். “அப்படியானால் நான் தங்களைக் காதலிக்கின்றேன்!” என்றாள் பாவமான குரலில்.

“அது கூடாது. மஹா பாபம்!” சுதர்சனன் தடுமாறினான்.

“ஏன் கூடாது? எப்படிப் பாபமாகும்? என்னுயிரை உங்களுக்கே கொடுக்கத் தயாராகிவிட்டேன். நீர் என்னை நிராகரிக்கமுடியாது!” என்று கூறி அவன் பாதத்தில் வீழ்ந்தாள். கண்ணீர் முத்துக்கள் உதிர்வதுபோல் கவிஞன் பாதத்தில் விழுந்தோடிற்று.

சுதர்சனனுக்கு மயிர்க்கூச் செறிந்தது. தன்னுள்ளத்தை அடக்கிவிட எவ்வளவோ எண்ணினான். ஆனாலும் முடியவில்லை. மெதுவாக அவளைத்தூக்கி நிறுத்தினான். அவள் விழிகளில் தேங்கிய நீரை உத்தரீயத்தால் துடைத்தான்.

அவள் இதயம் புளகித்தது. இதயத்தில் இன்பம் நிறைந்தது. அவனை ஆசைநிறைந்த விழிகளால் பார்த்தாள். ‘இன்பமே!’ என்று அவன்மீது சாய்ந்தாள்.

அவ்வமயமே அவன் பெரும் புயலால் பாதிக்கப் பட்டான்!

5

உத்தராயணம் ஆரம்பமாயிற்று. சுதர்சனன் ஆச்ரமத்திற்குச்செல்ல வேண்டியதை அறவே மறந்தான். வர்ஷா காலத்திய முதல் மேகத்தைக் கண்ட மயில்போல் ராஜேச்வரின் அழகைக் கண்டு சுதர்சனன் மனம் கூத்தாடிற்று. அவளுடைய அன்பிற்குப் பாத்திரமாக

அவன் கோலாகலமாக வாழ்வதும், போக விலாஸங்களிலே குளித்திருப்பதும், சிற்றின்ப ரஹிதமாய்த் திரிவதுமாக இருந்தான். உதயண மன்னரும் இப்படி அவன் மனம் மாறி விட்டதைக்கண்டு ஆச்சரியமடைந்தான். தன் மகளுக்கு அவன் மேல் இருக்கும் அளவற்ற காதலை அறிந்திருந்தான் அதன்படி அவனை அவனுக்குப் பாணிக்கிரஹணம் செய்விக்கவும் யோஜனை செய்தான்.

சுதர்சனன் ஓரோர் சமயங்களில் அளவுக்கும் மிஞ்சி மதுபானம் செய்துவிடுவான். தன் நினைவை இழந்து ராஜேச்வரியைப் பலவாறு வியந்து பாடுவான். அதனைச் செவியுற்றதும் அவள் மகிழ்வோடு அவனுடன் முயங்கச்செல்வாள். ஆனால் அவன் ஏளனச்சிரிப்புடன் ஓடிவிடுவான். அவனுடைய புத்தி இப்படி மழுங்கிப் போகுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை! நேர்மையோடு, கோணல், மாணல், இல்லாத செவ்விய பாதையிலேயே செல்லும் சத்புருஷர்கள் வாழ்க்கைச் சக்கரமும் ஓரோர் சமயங்களில் கரடு முரடான பாதையிலும், சகதிகள் மிகுந்த மடுவிலும் சென்று தத்தளிக்கின்றதும் ஸாத்யமேயாகிறது!

குறிப்பிட்ட காலம்சென்றதும் சுதர்சனன் வாராததைக் குறித்து ப்ரமத்வரை மீளாத் துயரை எய்தினாள். ஏற்கனவே இளைத்த அவள் சரீரம் இன்னும் இளைத்தது. பிரதி தினமும் அவன் வருவான் வருவான் என்றெண்ணி அவள் ஏமார்ந்தாள். திடீரென்று இருமல் கண்டு கடுஞ்சுரம் அடித்தது. தேய்பிறை மதிபோல் நாளடைவில் அவள் தேய்ந்துபோனாள்.

ஸ்ரீகண்டர் தன் மகளுக்கு வாய்ந்த பிணியைத் தீர்க்க பெருமுயற்சி செய்தார். பல ஔஷதங்களைக் கொடுத்தார். எனினும் என்ன பயன்? மலைபோல் வந்து நிற்கும் கவலை ஜுரத்திற்கு மருந்து உண்டோ? அவள் வியாதி குணமடையவில்லை. மஹரிஷி கண்ணீர் உகுத்தார்.

உத்திராயண காலம் முடிவுற்றது. பரமத்வரை எலும்புக்கூடாகி விட்டாள். மிருத்யு தேவன் வந்துவிடுவான் போலிருந்தது. ஆனால் சுதர்சனன் வரவேயில்லை இம்மையில் அவனை சந்திக்கப் போவதில்லை என்றே அவள் எண்ணினாள். உடனே வற்றிய அவள் விழிகளில் நீர் நிறைந்தது. பெருமூச்சும் பிறிட்டது. இதனை அறிந்த ஸ்ரீகண்டர் துயருடன், "நீ அவனைப் பார்க்க விரும்புகின்றாயல்லவா" என்று கேட்டார்.

மின்போல் துடித்தெழுந்தாள் பிரமத்வரை. "யாரைக்கேட்கின்றீர்கள்! சுதர்சனனைத் தானே?" என்றாள் பலவீனமான த்வனியில்.

"ஆம் இதோ ஓலை விடுகின்றேன்!" என்று எழுந்து ஓலை விடுத்தார்.

சின்னாட்களில் பதிற்கிடைத்தது. ஸ்ரீகண்டர் மகிழ்வுடன் ஓலையைப் பிரித்துப் படித்தார். உடனே அவர் கண்களினின்று நீர் தாரை தாரையாகச் சொரிந்தது. ப்ரமத்வரை திடுக்கிட்டு, "ஏன் கண்ணீர் விடுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"சுதர்சனன் உன்னை வஞ்சித்துவிட்டான். தற்போது வரமுடியாதென்று எழுதியிருக்கிறான்.........மஹா பாபி" என்றார்.

மேதாஸ்

"பாஸ்பரஸ் தைலம்"

(வெளி உபயோகத்துக்கு மட்டும்)

முடக்குவாதம், கீல்பிடிப்பு, சகலவித வலிகள்

இவைகளுக்கு

நிகரற்ற கைகண்ட மருந்து

பிரபல டாக்டர்களும், பொதுஜனங்களும் புகழ்ந்து அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

தயாரிப்பவர்கள்:–

K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

250, சைனா பஜார் (மாடி) சென்னை.

ப்ரமத்வரை உடல் நடுங்கிற்று. திடீரென்று கமலம் வெடித்துவிட்டவள்போல் துடிதுடித்தாள்; 'ஓ'வென்றழுதாள்; கதறினாள்.

ஸ்ரீகண்டருக்கு மகா கோபம் வந்துவிட்டது. மகளின் வாழ்க்கை இப்படிப் பாழானதை நினைத்தார். சுதர்சனனைப் பலமாகச் சபிக்கலானார்.

ப்ரமத்வரை பயமடைந்தாள். தன் தேக நிலைமையையும் பொருட்படுத்தாமல் எழுந்தாள். பிதாவின் பாதங்களைப்பற்றிக் கொண்டாள். பரிதாபகரமான குரலில், "பிதா! க்ஷமிக்கவேண்டும். அவரை சபிக்கவேண்டாம். கூடிய சீக்கிரம் அவர் திரும்பி வருவார். மன மாற்றம் அடைவது மனுஷ்ய ஜாதியினருக்கு சகஜந்தானே!" என்றாள்.

அந்தக் காக்ஷி அவர் மனதை உருக்கிற்று. மகள் நம்பிக்கை இழக்கவில்லை என்பதை அவர் அறியாமலில்லை. இருந்தும் அவளைப் பார்த்து, "வக்ர சுபாவமுடைய அவன் திரும்பிவந்து உன்னை ஏற்றுக்கொள்வது கடினமே" என்றார்.

6

அளவுக்கு மிஞ்சிய மது அருந்தியதால் சுதர்சனன் தேக ஆரோக்யம் கெட்டது. நோய் வாய்ப்பட்டு உபாதையினால் துடிதுடித்தான்.

அரசகுமாரி ராஜேச்வரியும் பயந்துவிட்டாள். அரசனும் மிக வருந்தினான். ஆஸ்தான வைத்திய சிகாமணிகள் பலர் வந்து கூடினார்கள். பிணியைத் தீர்க்க எவ்வளவோ முயன்றார்கள். எல்லாம் வியர்த்தமாகவே முடிந்தது. அவன் சிறிதும் குணமடையவில்லை. வலியினால் அலறினான்.

நாட்கள் தேயத் தேய அவன் சரீரமும் தேய்ந்து அழகற்று விளங்கிற்று. கடுஞ்சுரமும் சிலேஷ்மமும் ஓயாமல் இருந்துகொண்டே இருந்தன. இதனைக் கண்ணுற்ற ராஜேச்வரியும் மனமாற்றம் அடைந்தாள். அவளுக்கு அன்றிலிருந்து சுதர்சனனிடம் வெறுப்பேற்பட்டது. அவனைக் கண்டாலே சிறிதும் பிடிக்கவில்லை. இப்படி அவள் மாறுதல் அடைந்ததை சுதர்சனன் அறிந்துகொண்டு விட்டான்.

ஒரு நாள் இரவு அவனுக்கு உபாதை பெருகிற்று. "ராஜேச்வரி! ராஜேச்வரி! என்று பல தடவை கூப்பிட்டான். அவள் ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் சுக நித்திரையில் இருந்தாள். புரண்டு புரண்டு படுத்தாளே ஒழிய எழுந்து வரவில்லை.

சுதர்சனன் கடுங்கோபங் கொண்டான். அவளை அப்படியே கொன்றுவிடக்கூட எண்ணினான். "துரோகி! ஆசை காட்டி என் மனதைக் குலைத்து விட்டாள்" என்று வைதான். அவ்வமயம் ப்ரமத்வரையைப் பற்றிய எண்ணங்கள் தோன்றின. ஸ்தம்பித்துப்போனான். தான் முடிவிற் கொடுத்த உறுதி மொழியை நினைத்தான். அவளுடைய விழிகளில் நீர் நிறைந்து வழிய, சோகக் குரலில் கூறிய சொற்கள் முற்றிலும் அவன் செவியில் கேட்டது. வெளிப்புறத் தோட்டத்தில் குயில் பேடு ஒன்று துடிதுடிக்கும் குரலில் கூவிக்கொண்டிருந்தது. அதனைச் செவியுற்றதும் அவன், "குயிலே! ஏன் துடிதுடிக்கின்றாய்? காதலனைக் காணவில்லையா?" என்று பைத்தியம் போல் கேட்டான். பின், "அடாடா! இப்படி தவிக்கின்றேனே! இப்பொழுது பரமத்வரை இங்கிருந்தால் என்ன மாய்க் கதறி அழுவாள்? ஆ, தெய்வமே!" என்றான் 'பல பல' வென்று கண்ணீர் பெருகி வழிந்தது.

பித்தன் போல் சயனத்திலிருந்து எழுந்தான். தன் ஓலைகளை எடுத்துக்கொண்டான். வேகமாக அங்கிருந்து வெளியேறினான்.

அப்போது க்ரீஷ்மருது முடியும் சமயம். வானமெங்கும் கார்மேகம் கவிந்திருந்தது. மயில்கள் இதைக்கண்டதும் தோகை விரித்தாடின. குயில்கள் மழைப்பாடல்களைப் பாடின. ஆஸ்ரம வாசிகள் உஷத்காலத்தில் எழுந்து மழைக்கு முன் வேண்டிய ஆகாரங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். ப்ரமத்வரை இன்பக் கனவிலிருந்து கண் விழித்தெழுந்தாள்.

"ப்ரமத்வரே!" என்றழைத்துக்கொண்டே சுதர்சனன் வந்து நின்றான்.

"யார்? சுதர்சனனா?" என்று திகைப்புற்றுக் கேட்டாள் "ஆம்! அந்தப் பாபியேதான்!" என்றான் சுதர்சனன்.

அவள் துடித்தெழுந்தாள். அவனை வற்றிய கரங்களால் மார்புற தழுவிக் கொண்டாள்.

இருவர் கண்ணிதழ்களிலும் நீர் பெருகி ஓடிற்று. பூதேவியின் தாபத்தை அறிந்த கார்மேகமும் மழையை வர்ஷித்தது!

Edited and Published by N. R. Ramanujan B.A., and Printed by N. Subramania Iyer at Sri Venkateswar Power Printing Works, Kumbakonam.

காவேரி

தென் இந்தியாவின்

உயர்ந்த

மாதப் பத்திரிகை

JL
M24, N41KV
N43-2-7-

சந்தா விகிதம்.

		உள்நாடு	சிலோன்
வருடச் சந்தா	...	ரூ. 3 12 0	4 0 0
6 மாதம்	...	ரூ. 2 0 0	
தனிப்பிரதி	...	ரூ. 0 5 0	35-சதம்

தபால் மூலம் தனிப் பிரதி வேண்டுவோர் தபால் செலவும் சேர்த்து அனுப்பவேண்டும்.

பிரதிநிதிகள் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.

ஏஜன்ஸி நிபந்தனை, விளம்பர விகிதம் முதலிய விஷயங்களுக்கு கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

தியாகராஜ ஸ்வாமிகளின் மூவர்ணப்படம் விலை அணா 1.

காவேரி ஆபீஸ்,
பெஸண்டு ரோடு,
கும்பகோணம்.

S. RANGASWAMI,
Managing Proprietor.

Regd. No. M. 4405. CAUVERI.

அநேக தங்க மெடல்களும்
நற்சாக்ஷிப்பத்திரங்களும் பெற்ற



REGD. TRADE MARK

"கோகுல்"
சந்தனாதி தைலம்
அரைக்கீரை விதை தைலம்
கோதல் கூந்தல் தைலம்

இவைகள் மூளைக்குளிர்ச்சியையும
கூந்தல் வளர்ச்சியையும் கொடுப்பதில்
நிகரற்றன.

T.S.R.&Co. PERFUMERS KUMBAKONAM

Sole Agents : **MADRAS CITY**

PUSHPAVANAM STORES,

TRIPLICANE, MADRAS.

Cover Page Printed at Dharmarao Printing Works, 14, Jones Street, Mannady, Madras.